ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 7 08 – 14 பெப்ரவரி 2001 முழக்கம்: 317

FORWARD CONSULTANTS
CONSULTING FOR PEOPLE
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants.co.uk
www.forwardconsultants.co.uk
Pub.



கொழும்பு:
எதிர்க்கட்சித் தலைவர்
ரணிலுடன்
எரிக் சொல்ஹெய்ம்

## அரசின் போக்கில் மாற்றமில்லை!

## தமிழரை நாடுகடத்தல் ஜேர்மனியின் சட்டத்தில் தளர்வு!

## பாரிசில் தவிர்க்கப்பட்ட இரத்தக் களறி!

## வாறாரு... வாறாரு... அரசியல் கோமாளி

ஆள்காட்டி



கொழும்பு: இராணுவத் தளபதிகளுடன் சந்திரிக்கா குமாரதுங்க



குஜராத்:
பேரழிவிலிருந்து மீண்ட
துளிரொன்று

## கூட்டணியில் இருந்து பா.ம.க. விலகியது

## துள்ளி வருகிறது வேல் தூர விலகி நில்!

மாயோன்

தமிழினி
TAMILINI
பல்பொருள் அங்காடி
Cash and Carry
195-197 The Broadway, Southall, Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0208-813 8269
* எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

* MD JAM - 99 P
* KIST JAM - 99P
* MD CORDIAL - £1.99P (இரண்டு வாங்கினால் மூன்றாவது இலவசம்)
* KIST CORDIAL - £1.99 P (இரண்டு வாங்கினால் மூன்றாவது இலவசம்)
* LARICH மோர்மிளகாய் (ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்)
* ROSE SYRUP - £1.99
* RED BULL (Imp) - £12.00 Case (24x 250 Ml)
* பனங்களி - £1.79P


ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# தார்மீகப் பொறுப்பு

தமிழ் மக்களின் இருண்ட வாழ்வின் 53 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. இலங்கைக்கு 1948ல் பிரித்தானியா சுதந்திரத்தை வழங்கிவிட்டுச் சென்ற பின்னரான கடந்த 53 வருட காலத்தில், சிங்கள சமூகம் தமிழ்ச் சமூகத்தை அடக்கி ஆள்வதிலேயே முனைப்புக் கொண்டு நின்றதால், அன்று தொடங்கிய இனப்பிரச்சனை, இன்று விஸ்வரூபமாகி உலக நாடுகளை இலங்கையின் பக்கம் பார்வைகளைத் திரும்ப வைத்தது மட்டுமல்லாமல், இப்பிரச்சனைக்கு உடனடியாக் தீர்வு காணப்படவேண்டும் என்ற அவசியத்தையும் வலியுறுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டிய நிலைக்கு கொண்டுவந்துள்ளது.

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். அந்த மக்களுக்கு அபிலாசைகள் 'உண்டு. சுயநிர்ணய, தன்னாட்சி உரிமைகள் உண்டு. இவற்றை முன்னிறுத்தி போராட்டத்தை ஆரம்பித்த அனைத்து போராளிக் குழுக்களும் தமது நோக்கில் இருந்து தடம்மாறிச்சென்ற நிலையில், தமிழ் மக்களின் உரிமைகளை முன்னெடுத்து, அம்மக்களின் விடுதலைக்காக நீண்ட காலமாக இரத்தம் சிந்தி போராடிவரும் விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக இன்றுள்ளனர்.

பல உயிர்களை விலையாகக்கொடுத்து பெரும் இராணுவ வெற்றிகளைப்பெற்று தமிழர் பிரதேசங்களை மீட்டெடுத்து வந்த விடுதலைப் புலிகள், சர்வதேச நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்க, சமாதானப் பேச்சுக்களின் மூலம் பிரச்சனைக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண்பதற்கு தமது தாக்குதல்களை கைவிட்டு நல்லெண்ண அடிப்படையில் இரண்டு மாதங்களாக போர் நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளாது, சமாதானப் பேச்சுக்களுக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்புவிடும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது அமைச்சரவையில் உள்ளவர்களும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகச் சித்தரித்து உலக நாடுகளில் தடைவிதிப்பதற்கான நடவடிக்கைகளையே தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். பிரித்தானியா கொண்டு வரவுள்ள புதிய சட்டத்தின் மூலம், விடுதலைப் புலிகளையும் அச் சட்டத்தில் இணைத்து, பயங்கரவாதிகளாக பதிவு செய்துவிடுவதற்கு பல்வேறு முயற்சிகளை கடந்த சில வாரங்களாக எடுத்தும் வருகின்றனர்.

ஆனால், தமிழ் மக்கள் தொடர்பாகவும் அவர்களது அபிலாசைகளை தீர்த்து வைப்பது தொடர்பாகவும் மற்றைய நாடுகளை விட பிரித்தானியாவிற்கே தார்மீக பொறுப்பு அதிகம் உண்டு. இவ்வேளையில், தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்னெடுத்துச் செல்கின்ற விடுதலைப் புலிகளைத் தடை செய்வதன் மூலம் தனது தார்மீகக் கடமையில் இருந்து பின்வாங்கி, வரலாற்றுத் தவறொன்றை பிரித்தானியா மேற்கொள்ள மாட்டாது என்றே தமிழ் மக்கள் அனைவரும் உறுதியாக நம்புகின்றனர்.



# பார்வை

## பிரித்தானியா பயங்கரவாத சட்டம்: தமிழர்களின் குரல்வளை நெரிக்கப்படுமா ?

சிறீலங்கா ஆதரவு ஏடான 'தி ஹிண்டு' தனது இவ்வாரச் செய்தித் தலைப்பில் புலிகள் மீதான தடை பற்றி இரு வேறு கருத்துக்கள் இலங்கைத் தீவில் நிலவுகின்றது என்கின்றது. சிங்களவர்கள் புலிகள் மீதான தடையை ஆதரிப்பதையும், தமிழர்கள் அதனை எதிர்ப்பதையுமே அது தவிர்க்க முடியாது ஒப்புக்கொண்ட விடயமாகும். இந்த அவதானிப்பை உலகின் பல தரப்பும் கூர்மையாக அவதானித்துள்ளது என்பதை பல தரப்பு ஊடகங்களும் உறுதிசெய்கின்றன.

பிரித்தானிய அரசு தனது புதிய பயங்கரவாத பட்டியலில் புலிகளையும் இணைப்பார்களா? அப்படி இணைப்பின் அதன் பின்விளைவுகள் என்ன? என்கின்ற கேள்விகள் இன்று பெரிதாக எழுந்துள்ளது.

இன்றைய உலக ஒழுங்கில் அரசுகளுக்கு எதிரான அனைத்துப் போராட்டங்களும் பயங்கரவாதமேயாகும். அதாவது பனிப்போர் என்கின்ற வல்லரசுப் போர் முடிவு பெறுவதற்கு முன்னர், ஒரு தரப்பின் பயங்கரவாதி மறுதரப்பின் விடுதலைப் போராளியாக கருதப்பட்டான் (கொன்டுராஸ் அமைப்பை அமெரிக்கா, விடுதலை போராளிகள் என்றது, பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை பயங்கரவாதிகள் என்றது. சோவியத் இதனை மாறி உபயோகப்படுத்தியது). ஆனால், சோவியத் யூனியன் வீழ்ச்சி கண்ட பின்னர் அமெரிக்கா தலைமையிலான உலக ஆளும் தரப்பினர், இன்றைய உலக ஒழுங்கில் எதுவித தளம்பல்களையும் (போர், மாற்றங்கள், ஆட்சிக் கவிழ்ப்புக்கள்) விரும்பவில்லை. அமெரிக்க இராணுவத் தலைமையகத்தின் பாதுகாப்பு கோட்பாட்டு அறிக்கையில் இந்நிலைப்பாடு தெளிவாக விளக்கப்படுகின்றது. உலகின் மூலைமுடுக்கெங்கும் இடம்பெறும் மோசமான அரசுகளுக்கும், ஆளும் தரப்பினருக்கும் எதிரான போராட்டங்கள் அனைத்தையும் பயங்கரவாதம் என்று பட்டியலிட்டு தனிமைப்படுத்த அவர்கள் முயல்கின்றனர்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இந்த சர்வதேச சுழியில் அகப்பட்டுள்ளது. அமெரிக்கா 1997ல் விடுதலை புலிகளை தடை செய்தபோது அதனை சந்திரிகாவும், கதிர்காமரும் தமது வெற்றியாக கொண்டாடிய போதும் இது ஒரு புதிய உலக ஒழுங்கின் அறிகுறி (நோய்) என்பதை ஆய்வாளர்கள் அறிந்திருந்தனர். தற்போது இது பிரித்தானியாவின் முறை. ஐரோப்பிய அமைப்பில் அமெரிக்காவின் மிக நெருங்கிய தரப்பினராகிய பிரித்தானியா புதிய உலக ஒழுங்குக்கு அமைய பெப்ரவரி 19ம் திகதி உலக பயங்கரவாத அமைப்புக்களின் பட்டிய்லை வெளியிடவுள்ளது. இதற்கான சட்டங்களின் அடிப்படையில் வெறுமனே நோக்கின், தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பயங்கரவாதம் என கருதப்படலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள். எனெனில், அரசியல் நோக்குடன் அரசை நெருக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அதனை, 'புதிய பிரித்தானிய சட்டம்' பயங்கரவாதம் என்கின்றது. ஆப்கானிலும், ஈராக்கிலும், நிக்கரகுவாவிலும் பல அரச எதிர்ப்பு ஆயுதக் குழுக்களை ஊக்குவித்த மேற்குலகு, தற்போது தமது புதிய தேவைக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொண்டு பயங்கரவாதம் பற்றிய 'புதிய விளக்கங்களை' தர முயல்வது வேடிக்கையாக இருப்பினும் தமிழீழ விடுதலைப் போர், இச் சிக்கலில் அகப்பட்டுள்ள இன்றைய உலகின் முதன்மையான விடுதலைப் போராட்டம் என்பதால் பாதிக்கப்படுகின்றது.

எனினும், புதிய உலக ஒழுங்கின் மற்றுமொரு தோற்றமாக இணக்க முயற்சிகளும், அதற்கான ஆதரவும் காணப்படுகின்றது. இதனை 'ஆக்கபூர்வமாக எதிர்கொள்ளல்' என்ற அழகான சொற்களைப் பாவித்து முன்னாள் அமெரிக்க அதிபர் கிளின்டன் அழைத்தார். தீர்க்கப்படாத பாலஸ்தீனிய போராட்டம், கிழக்கைரோப்பிய பிரச்சினைகள், ஆபிரிக்க கண்டத்து யுத்தங்கள், கிழக்கு தீமோர் எனப் பட்டியலிடலாம். இதனையே இன்றைய சிறீலங்கா – தமிழீழ அரசியல் சூழ்நிலையும், நோர்வேயின் ஈடுபாடும் பிரதிபலிக்கின்றது.

பிரித்தானிய அரசு தமது புதிய சட்டத்தைக் காரணம் காட்டி புலிகளை பட்டியலில் இட முயன்றால், அது அமைதிக்கும் இணக்க முயற்சிக்கும் எதிரான நடவடிக்கையாக அமைந்துவிடும். அப்படி செய்யுமாறு சிறீலங்காவும், சிங்கள பயங்கரவாத அமைப்புக்களும் பகிரங்கமாக கூச்சலிடுகின்றன. அப்படி செய்ய வேண்டாம் என ஒன்றுபட்ட தமிழர் குரல் ஒலிக்கின்றது.

தனது பட்டியலில் உள்ள அனைத்து இயக்கங்களையும் தடை செய்யுமாறு அமெரிக்கா லண்டனிடம் கேட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இந்தியா கூட தனது நாட்டில் தடை செய்யப்பட்ட குழுக்களை தடை செய்யுமாறு கோரியுள்ளது என ஊடகங்கள் கூறுகின்றன.

அதனையேற்று பிரித்தானியா, புலிகளையும் தமது பட்டியலில் சேர்ப்பின், 'இலங்கைத் தீவின் இனச் சிக்கலில் நடுநிலையாளர்கள் என்ற பாத்திரத்தை இழந்து வெறுமனே பார்வையாளர்களாக' மாற்றப்படுவர். பிரித்தானியாவின் நடவடிக்கை ஐரோப்பிய நாடுகளை தென்னாசிய விடயங்களில் ஒதுக்கிவிட வழிவகுக்கும். மேலும், தென்னாசியாவில் பிழையான தரப்பின் ஆதரவாளர்களாக ஐரோப்பிய தரப்பை மாற்றிவிடும் ஆபத்தை இது கொண்டுள்ளது. நீண்ட கால நோக்கில் சிதைவுக்குள்ளாகிவரும் சிங்களத்தின் மீது முழு நம்பிக்கையை வைப்பது ஒரு மோசமான சூதாட்டமாகும். எனவே, புதிய உலக ஒழுங்கின் இரு முரண்நிலைகளில் எந்த நிலையை பிரித்தானியா எடுக்கவுள்ளது என்பதை அறிய பலரும் காத்துள்ளனர்.

தமது நீண்ட அனுபவங்கள் ஊடாக உலகின் புதிய போக்கைக் கையாளும் புலிகள் இணக்கத்தை ஆதரிக்கும் புதிய நாகரிகமான போக்கிற்கு பிரித்தானியாவை இட்டுசெல்ல முயல்கையில், மறுதரப்பு (சிறீலங்கா) போரையும் – முரண்பாடுகளையும் ஆதரிக்கும் நிலைக்கு பிரித்தானியாவை இட்டுச் செல்ல முயல்கின்றனர்.

* * *

## இரகசிய உறவும் – பகிரங்க விமர்சனமும்

நோர்வே சிறப்புத் தூதுவர் புலிகளுக்கும், சிங்கள அரசுக்கும் இடையில் ஒரு படிப்படியான போர்தவிர்ப்பு உடன்பாட்டைக் காண முயல்கின்றார் என அறிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான இணக்கத்தை புலிகள் நோர்வேக்குத் தெரிவித்த போதும், சிறீலங்கா ஆனையிறவைப் பிடிப்பது, புலிகளை உலக நாடுகளிடமிருந்து தனிமைப்படுத்துவது, தமிழீழ தேசிய தலைமையை கொச்சைப்படுத்துவது என்பன போன்ற தனது நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில், நோர்வேயின் திட்டத்திற்கு மறுப்பு தெரிவித்து வந்தது. எனினும் தற்போது, சிறீலங்கா பல்வேறு காரணங்களால் சற்று இறங்கிவர நிர்ப்பந்திக்கப்பட்டதாக ஊடகங்கள் கூறுகின்றன.

எனினும், தமிழ்க் கட்சிகளை சந்தித்து கருத்துக் கேட்டமைக்காக பிரித்தானியா மீது, சிங்கள இனவாதிகள் பகிரங்கமான விமர்சனங்களை முன்வைக்கின்றனர். சிங்கள ஊடகங்கள் பொங்கி எழுந்துள்ளன. பாரிஸில் சிங்களத் தூதுவராகக் கடமையாற்றிய டி.பி.ஜி. சில்வா என்பவர், பிரித்தானியா கொழும்புத் தமிழ் குழுக்களை சந்தித்து கருத்துக் கேட்டமையை காட்டமாக விமர்சிக்கின்றார். பிரித்தானியா உலகப் பயங்கரவாத உடன்படிக்கைக்கு உதவமறுப்பதாகவும், சிறீலங்கா அயர்லாந்து விடுதலை இராணுவத்திற்கு உதவினால் எப்படியிருக்கும் என்ற 'வழமையான கேள்விகளையும்' எழுப்புகின்றார்.

கொழும்புத் தமிழ்க் குழுக்கள் அண்மைக் காலங்களாக அமெரிக்கா உட்பட பல நாடுகளை சந்தித்துப் பேசின. ஆனால், பிரித்தானியா சந்தித்தமை மட்டும் தனிமையாக ஏன் விமர்சிக்கப்பட்டது. அங்கு தான் கொழும்பில் கண்மூடித்தனமாக 'கொட்டப்படும்' இனவாத கருத்துக்களுக்கும் சிங்கள அரசுக்கும் இடையேயுள்ள இரகசிய உறவைக் காணலாம். அமெரிக்கா பற்றிய விடயம் சிறீலங்காவின் இராஜதந்திர திட்டத்தில் தற்போது இல்லை. பிரித்தானியாவின் தடையே இன்றைய இலக்கு. எனவே, பிரித்தானியா மீது அழுத்தம் கொடுக்க இப்படியான திட்டமிட்ட எழுத்துக்கள், பேச்சுக்கள் சிங்கள புத்திஜீவிகள், ஊடகங்கள் மூலம் கொட்டப்படுகின்றன.

– ராஜா

# சிறீலங்கா அரசின் போக்கில் மாற்றமில்லை

## - ஜனாதிபதி சந்திரிகாவின் தெளிவற்ற உரை -

(05.02.01)

நேற்று கொழும்பில் நடைபெற்ற சிறீலங்காவின் 53ஆவது சுதந்திரதின வைபவத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, அர்த்தமற்ற போர் நிறுத்தங்களை ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் எப்போதும் தயாராக இல்லை என மீண்டும் 'வலியுறுத்திக் கூறியுள்ளார். பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கான கதவை அரசாங்கம் என்றுமே மூடியது கிடையாது என தனது உரையிலே குறிப்பிட்ட சந்திரிகா குமாரதுங்கா, போர் நிறுத்தத்தை மீண்டும் நிராகரித்துள்ளதானது சமாதானப் பேச்சுக்களில் அரசுக்கு இருக்கும் நாட்டமின்மையினையே வெளிக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இரண்டாவது தடவையாக போர் நிறுத்தத்தை அறிவித்து தமது சமாதான விருப்பை தொடர்ந்து வெளிப்படுத்திவரும் விடுதலைப் புலிகளை அவமதிக்கும் வகையில்,



'தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்துடன் புலிகள் இயக்கத்தை பேச்சுவார்த்தையில் ஈடுபடச் செய்வது தமிழ் மக்கள் உட்பட சமாதானத்தை நேசிக்கும் அனைவரின் கடமை' எனவும் சந்திரிகா குமாரதுங்கா தனது சுதந்திரதின உரையில் குறிப்பிட்டுள்ளதையும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ் மக்கள் சம்பந்தமாகவும் ஏனைய சிறுபான்மையின மக்கள் சம்பந்தமாகவும் அரசாங்கம் கடைப்பிடிக்கும் நேர்மையான, சரியான அணுகுமுறையை சர்வதேச சமூகம் பாராட்டியுள்ளது என தனது உரையில் சந்திரிகா குமாரதுங்கா குறிப்பிட்டுள்ளதன் மூலம், போர் மூலமே சமா

(☞ 4ம் பக்கம்)

## நோர்வேயை அனுமதிக்கப் போவதில்லை தூதரிடம் பௌத்த பிக்குகள்

(04.02.01)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நோர்வே ஈடுபடதாம் அனுமதிக்கப்போவதில்லை என பௌத்த பிக்குகளின் குழு ஒன்று கூறியுள்ளது. கொழும்பில் உள்ள நோர்வேயின் தூதர் வெஸ்பேர்க்கை கடந்த வாரம் நேரில் சந்தித்த, அளுத்கமகே சம்மானந்த தேரர் தலைமையிலான ஐவர் கொண்ட பௌத்த பிக்குகள் குழு ஒன்று, இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் நோர்வே தலையிடக் கூடாது என்றும், இந்தக் கோரிக்கையை மீறி நோர்வே இந்த விவகாரத்தில் தலையிட்டால் தாம் கடும் எதிர்ப்புத் தெரிவிப்போம் என்றும் கூறியதுடன், விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் நோர்வே அரசுக்கும் இடையில் தொடர்புகள் உள்ளன எனவும், இந்த நிலையில் சமாதான முயற்சியில் நோர்வே தலையிடுவதை அனுமதிக்க முடியாது, தாம் அனுமதிக்கப் போவதுமில்லை எனவும் அக்குழு தூதரிடம் எச்சரித்து கூறியுள்ளது. எனினும் பிக்குகளிடம் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்பு என்ன என்பது பற்றி விளக்கிக் கூறிய நோர்வேத் தூதர் வெஸ்பேர்க், சமாதான முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என்றும் அவர் பிக்குகளிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சிறீலங்கா சுதந்திர தினம்

## யாழ். பல்கலைக்கழகம் கறுப்புக்கொடி கட்டி துக்கம் அனுஷ்டிப்பு

(05.02.01)

சிறீலங்காவின் 53வது சுதந்திர தினமான நேற்று யாழ்பல்கலைக்கழகம் கறுப்புக் கொடிகளைக் கட்டி துக்கதினம் அனுஷ்டித்துள்ளது. நேற்றுக்காலை கறுப்புப்பட்டிகைள அணிந்திருந்த பல்கலைக்கழக மாணவர்கள் கறுப்புப் பட்டிகளை பொது மக்களுக்கு வழங்கியும், கறுப்புக் கொடியை பறக்கவிட்டும், சோக இசையை ஒலிபரப்பியும் இந்நாளை துக்க தினமாக அனுஷ்டித்தனர். அத்துடன் பல்கலைக்கழகத்தின் வாயிலில் துக்கதினத்தைக் குறிக்கும் விதத்தில் வாழைமரங்கள் கட்டப்பட்டிருந்தன.

இதேவேளை, சிறீலங்காவின் சுதந்திரதினத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல்கலைக்கழக சூழலில் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. அதில், சிறீலங்காவின் சுதந்திரநாள் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்கு சாவு மணி அடித்த நாள், இலங்கையின் சுதந்திர தினம் சிங்களப் பேரினவாத அடக்குமுறையின்

(☞ 4ம் பக்கம்)

## மத்தியில் இருந்து பா.ம.க. வெளியேறியது

(05.02.01)

இந்தியாவில் ஆட்சியில் உள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய ஜனநாயக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பாட்டாளி மக்கள் கட்சி இன்று அக் கூட்டணியில் இருந்து விலகிக்கொண்டுள்ளது. மத்தியில் அமைச்சர்களாக இருந்த கட்சியின் இரு உறுப்பினர்களும் தமது பதவியை விலகிக்கொண்டுள்ளனர். இன்று இவ் விரு அமைச்சர்களினதும் பதவி விலகல் கடிதங்களை பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வாஜ்பாயிடம் நேரடியாக வழங்கியுள்ளார்.

இதேவேளை ஆளும் தேசிய ஜனநாயக் கூட்டணியில் இருந்து பா.ம.க விலகிக்கொண்டது துரதிர்ஷ்டவசமானது எனவும் தமது முடிவினை பா.ம.க மறுபரிசீலனை செய்யவேண்டும் எனவும் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராகிய ஜனா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கூட்டணியில் வாழப்பாடி இராமமூர்த்தியின் தமிழக ராஜீவ் காங்கிரஸ் நீடித்தால் தனது கட்சி கூட்டணியில் இருந்து விலகிக்கொள்ளும் என டாக்கடர் ராமதாஸ் கடந்த காலங்களில் கூறிவந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால், பா.ம.க கூட்டணியில் இருந்து விலகியமைக்கு

(☞ 4ம் பக்கம்)

## சொல்ஹெய்ம் கொழும்பில் இருந்து திரும்பினார்

(05.02.01)

நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் மூன்று நாள் விஜயமாக கொழும்பு சென்று திரும்பிள்ளார். கடந்த புதன்கிழமை கொழும்பு சென்ற சோல்ஹெய்ம், சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரட்ணசிறி, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பௌத்த பிக்குகளையும் சந்தித்து பேசிவிட்டு நேற்று கொழும்பில் இருந்து திரும்பியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பில் நின்ற மூன்று நாட்களில் சந்திரிகாவுடன் சொல்ஹெய்ம் மூன்று தடவைகள் பேச்சுக்களில் ஈடு

(☞ 4ம் பக்கம்)

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்

VICTOR Sarl

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன்
திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

VICTOR SARL - 25bis, Rue des Chaufourniers, 75019 Paris. Tel: 01 42 06 59 19 Fax: 01 42 06 61 19

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:** P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 40 04 17, 40244 Langenfeld
Tel/Fax: 02102158108 / 0210228672
தர்சனன்: 01732620605

டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16

பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07801383857
பாஸ்கரன் - Tel: 07811040188

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

# சிறீலங்கா சுதந்திர தினத்தில் மட்டக்களப்பில் பறந்த புலிக்கொடிகள்

*(05.02.01)*

சிறீலங்காவின் சுதந்திரதினமான நேற்று மட்டக்களப்பு பகுதிகளில் புலிக்கொடிகளும், கறுப்புக்கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இராணுவத்தினரின் அதியுயர் பாதுகாப்பு வலையங்களாக உள்ள பகுதிகளிலேயே இக் கொடிகள் கட்டிப் பறக்க விடப்பட்டிருந்ததாகவும் செய்தி அறிந்த சிறீலங்காப் பொலிசார் அப் பகுதிகளுக்கு விரைந்து கொடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மட்டக்களப்பில் சிறீலங்கா சுதந்திரதின வைபவம் இடம்பெற இருந்த புனித மிக்கேல் கல்லூரிக்கு அருகில் இரவோடு இரவாக பெரிய அளவிலான புலிக்கொடி பறக்க விடப்பட்டிருந்ததாகவும், மறு நாள் காலையில் அதனைக் கண்ட படையினர் உடனடியாக அதனை அகற்றியுள்ளனர்.

முக்கிய தலைவர்கள் வரும் இப்பகுதிக்கு படையினர் பாதுகாப்பை அதிகரித்திருந்தபோதும் எவ்வாறு அப்பகுதிக்குள் ஊடுருவி புலிக்கொடியை கட்டினார்கள் என்பது குறித்து தற்போது படையினர் ஆராய்ந்து வருகின்றனர்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறீலங்கா சுதந்திர...

ஆரம்ப நாள், கறுப்பு பெப்ரவரி 4ம் நாள் தமிழ் தேசிய இனத்தின் வாழ்வுரிமை சிங்கள பேரினவாத சக்திகளிடம் தாரை வார்க்கப்பட்ட இருண்ட நாள். என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் அங்கு காணப்பட்டதாக யாழ்.குடாச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க, சிறீலங்கா சுதந்திர தினம் யாழ். குடாவில் உள்ள அரச நிறுவனங்களிலும், பொது இடங்களிலும் இராணுவத்தினரினதும், தமிழக் கூலிக் குழுக்களினதும் கட்டாயத்தின் பேரில் ஆங்காங்கே கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டதாகவும் இந் நிகழ்வுகளில் கலந்துகொள்ள மக்களுக்கு அழைப்பு விடுத்தபோதும் யாரும் கலந்துகொள்ளவில்லை எனவும், பின்னர் ஒரு சிலர் கட்டாயத்தின்பேரில் கூட்டிவரப்பட்டு நிகழ்வுகளில் பங்கேற்ற வைக்கப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை சிறீலங்காவின் சுதந்திர தினத்தை துக்க தினமாக அனுட்டிக்குமாறு சுதந்திர மாணவர் முன்னணி விடுத்த வேண்டுகோளை ஏற்று, மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது மக்கள் துக்கதினத்தை அனுட்டித்தார்கள். மட்டக்களப்பு நகரிலும், கல்லடி, நாவற்குடா, தாண்வன்வெளி ஆகிய இடங்களில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துக்களும் மிகக்குறைவாகவே இருந்தன. நகரில் பெருந் தொகையான பொலிசாரும் இராணுவத்தினரும் குவிக்கப் பட்டிருந்தனர்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

### சொல்ஹெய்ம்...

பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கொழும்பில் இருந்து திரும்பிய சொல்ஹெய்ம், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து பேசுவார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்தவாரம் கொழும்பு செல்வதற்கு முன்பாக, எரிக் சொல்ஹெய்ம் 29ம் திகதி திங்களன்று இலண்டனில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறீலங்கா அரசின்...

தானம் என்கின்ற தனது கொள்கையை மறைமுகமாக மீண்டும் வலியுறுத்தியுள்ளார் என்பதையும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழீழம் பற்றியோ அல்லது நாடு பிரிவதைப் பற்றியோ புலிகளுடன் எச்சந்தர்ப்பத்திலும் பேசமாட்டோம் எனவும் திட சங்கற்பம் பூண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமிழர்களின் அபிலாசைகளையும், அவலங்களையும் கருத்திலெடுக்காத பேரினவாதக் குரலாகவே தனது சுதந்திரதின உரையை நிகழ்த்தியுள்ளார் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

### மத்தியில் இருந்து...

தமது கட்சி பொறுப்பல்ல என வாழப்பாடி இராமமூர்த்தி வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



## வைஸ்ணவி - சங்கவி

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த குணபாலசிங்கம் (பாலன்) நவநிதி (றதி) தம்பதிகளின் அருந்தவப் புதல்விகள் வைஸ்ணவி, சங்கவி தமது முதலாவது பிறந்த நாளை 11.02.01 அன்று ஜேர்மனி எசனிலுள்ள தமது இல்லத்தில் கொண்டாடுகின்றனர்.

எமது அன்புச் செல்வங்களை அன்பு அப்பா, அம்மா, அண்ணா, புதுக்குடியிருப்பில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள், அத்தை, அம்மப்பா, அம்மம்மா, சித்தி சித்தப்பா, தங்கை சுமதி அன்ரி, குட்டி மாமா, குட்டிச் சித்தி, பூட்டப்பாமார், வவுனியாவில் வசிக்கும் பெரிய மாமா, அத்தை, விஜயரத்தினம் அம்மப்பா குடும்பத்தினர், ஜேர்மனியில் வசிக்கும் தங்கேஸ் அப்பப்பா குடும்பத்தினர், தர்மா அப்பப்பா குடும்பத்தினர், சுவிசில் வசிக்கும் வசந்தன் மாமா குடும்பத்தினர், லண்டனில் வசிக்கும் சின்ன மாமா குடும்பத்தினர், மாமாமார், அண்ணாமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் புதுநகர் சிவன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

Pub.Ger.

## எண் சோதிடம்

உங்கள் பிறந்த திகதியினைக்கொண்டு எதிர்கால பலாபலனை அறிய விரும்புகிறீர்களா?

பொருத்தமற்ற எண்களைக்கொண்ட மணவாழ்க்கையில் ஈடுபட்டு வருந்துகிறீர்களா?

தீராத நோய் துன்பங்களினால் வருந்துகிறீர்களா?

எதுவாயினும் உங்கள் பலாபலன்களின் பலனை அறிந்து அதற்கேற்ப நடைமுறை மாற்றங்களைச் செய்யுங்கள்

தொடர்புகள்: K.M. தங்கராசா - தொலைபேசி: 01 39 93 54 97

**நேரம்**: சனி, ஞாயிறு காலை 8 மணிமுதல் 11 மணிவரை
செவ்வாய், புதன் 8 மணிமுதல் 11மணிவரை

Pub.Fr

## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



**நித்தி:**
0148050214 / 0613342518
0607348051 / 0148385825

Pub Fr

# ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,950 Frs. |
| Madras | - | 4,800 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# யுத்தம் முடிந்தால் ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு போய்விடுமாம்! – சிஹல உறுமய

(04.02.01)

யுத்தம் நிறுத்தப்பட்டால் ஐந்து இலட்சம் பேர் தமது வேலை வாய்ப்பை இழப்பார்கள் எனவும் இதனால் சமூகம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் எனவும் சிங்கள இனவாத அமைப்பான சிஹல உறுமய கூறியுள்ளது!

எனவே, அரசியல் நோக்கமின்றி யுத்தத்தை தொடர்ந்தும் சீராக நடத்தவும் இராணுவத்திற்கு ஆட்களைத் திரட்டித்தர தாம் தயார் எனவும், யுத்தம் நின்றுவிட்டால் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ள ஐந்து இலட்சம் பேர் தமது வருமானத்தை இழப்பார்கள் எனவும் அரசிற்கு எச்சரித்து கூறியுள்ளது.

இதேவேளை, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் அரசியல் நோக்கமின்றி யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும் எனவும் போராடக்கூடிய திறமைமிக்க படையினரிடம் யுத்தத்தை ஒப்படைக்கவேண்டும். அவ்வாறு உருவாக்கப்படும் படையை பலப்படுத்த நாம் தயாராக இருக்கிறோம் எனவும் கூறியுள்ளனர்.

# இரு கொலைகள் சிறீலங்கா அமைச்சர் கைது

(04.02.01)

சிறீலங்கா அண்மையில் நடாத்திய உள்ளூராட்சி தேர்தலில் இருவர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக சிறீலங்காவின் பிரதி சுகாதாரத்துறை அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை இக்கொலை தொடர்பாக இவரது மகனையும் பொலிசார் தேடி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒக்டோபர் மாதம் 10ம் திகதி நடைபெற்ற தேர்தலில் தென்னக்கோன் போட்டியிட்ட பிரதேசத்தில் பல்வேறு வன்முறைகளும் படுகொலைகளும் இடம்பெற்றதை அடுத்து, ஐ.தே.க. நீதிமன்றத்தில் விசாரணை நடாத்துமாறு வழக்கு தொடுத்திருந்தது. வழக்கு விசாரணையை நடாத்திய நீதிமன்றம், அமைச்சரை கைதுசெய்ய உத்தரவிட்டது. ஆனால் தன்னைக் கைதுசெய்ய உத்தரவிட்டதை அறிந்த அமைச்சர் தென்னக்கோன், உடல் நலம் பாதிக்கப்பட்டதாகக் கூறிக் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதியானார். ஆனால் ஒரு வாரம் வைத்தியசாலையில் தங்கியிருந்துவிட்டு வீடு திரும்பிய போது பொலிசார் அமைச்சரை கைதுசெய்துள்ளனர். தற்போது தலைமறைவாகியுள்ள அமைச்சரின் மகனையும் பொலிசார் தேடி வருகின்றனர்.

# வவுனியாவில் 13 வெதுப்பகங்கள் பாண் உற்பத்தி செய்யத்தடை

(04.02.01)

வவுனியாவில் தரக்குறைவான பாண் உற்பத்தி செய்துவந்த 13 வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சுகாதார அதிகாரிகளும், வவுனியா நகர சபை, பிரதேச சபை அதிகாரிகளும் வெதுப்பகங்கள் மீது மேற்கொண்ட திடீர் சோதனையின்போது, அறிவுறுத்தப்பட்ட சுகாதார வரைமுறைகளுக்கு அமைய திருத்தியமைக்காத வெதுப்பகங்களும், சுகாதார விதிமுறைகளுக்கு அமைய சுத்தமாக வைக்கப்பட்டு பாண் உற்பத்தி மேற்கொள்ளப்படாத வெதுப்பகங்களும் பாண் உற்பத்திக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு சுகாதார பாதுகாப்புகளின்றி 'றக்ஸ்' தூள் தயாரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான பழைய பாண், மற்றும் ஓர் உழவு இயந்திர பெட்டி நிறைந்த பழைய பாண் என்பனவும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# மண்டைதீவில் கடற்படைச் சிப்பாய் தற்கொலை

(04.02.01)

யாழ். மண்டைதீவு கடற்படை முகாமில் இரவு காவற் கடமையில் இருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த வியாழனன்று அதிகாலை ஐந்து மணியளவில் காவலரணில் துப்பாக்கி சூட்டுச்சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது, இவர் இறந்து கிடந்ததாகவும், இவரது துப்பாக்கியில் இருந்த குண்டொன்று குறைந்திருந்ததால் இவர் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இது பற்றிய விசாரணைகளை சிறீலங்காப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். சிறீலங்காப் படையில் இருந்து இராணுவத்தினர் தப்பியோடுவதும், தற்கொலை செய்துகொள்வதும் கடந்த காலங்களில் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஜானக பெரேரா ஓய்வு

(04.02.01)

சிறீலங்கா இராணுவத்தின் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜானகப் பெரேரா ஓய்வு பெற்றுள்ளார். கடந்த புதன்கிழமையுடன் தனது 34 வருட இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார் எனச் செய்திகள் தெரிவித்துள்ளன.

புலிகளுக்கு எதிரான பல நடவடிக்கைகளை மேற்கொண்ட இவர் யாழ்குடா மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஓயாத அலைகள் நடவடிக்கையின்போது, படையினரை யாழ் குடாவில் இருந்து வாபஸ் பெறவேண்டும் எனத் தெரிவித்த கருத்தை அடுத்து, வடபகுதி இராணுவக் கட்டளை அதிகாரி பதவியில் இருந்து இவர் மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தனது பிரியாவிடை வைபவத்தின்போது உரையாற்றிய ஜானகபெரேரா, விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்கு இராணுவத் தளபதி பலகல்லவிற்கு அனைத்து இராணுவத்தினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பிரிட்டிஷ் தொண்டர் நிறுவனங்களுக்கு பலத்த பாதுகாப்பு

(05.02.01)

இலங்கையில் உள்ள பிரிட்டன் நாட்டின் தொண்டர் நிறுவனங்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த செவ்வாயன்று பிரித்தானியாவின் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனமான 'ஒக்ஸ்போம்' அலுவலகம் மீது சிங்கள இனவாத அமைப்பான 'பயங்கரவாத்திற்கு எதிரான தேசிய முன்னணி' நடாத்திய கைக்குண்டுத் தாக்குதலையும் எச்சரிக்கையையும் அடுத்தே, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பிரிட்டன் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் முன்னால் பொலிசார் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# மின்சாரம் தாக்கி இருவர் மரணம்

(05.02.01)

யாழ். குடாவில் இவ்வாரம் மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர். ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தில் நேற்று முன்தினம் நண்பகல் தண்ணீர் இறைக்கும் மின்சார இயந்திரத்தை இயக்கிய தயானந்தன் வாகீசன் (25) என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இதேவேளை, உடுப்பிட்டி மல்லந்துறையில் நேற்று முன்தினம் காலை மின்சார இணைப்பொன்றை மேற்கொண்டிருந்த விக்னேஸ்வரன் விஜயகுமார்(22) என்பவரும் உயிரிழந்துள்ளார்.

# வைத்தியர்களின் வேலை நிறுத்தத்தையடுத்து கொடுப்பனவு

(04.02.01)

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் அனைத்து வைத்தியர்களுக்கும் மேலதிக இடர்காலக் கொடுப்பனவை வழங்கவேண்டும் எனக்கோரி யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் நடாத்திய போராட்டத்தை அடுத்து, கொடுப்பனவுகளை வழங்குவதற்கு சிறீலங்கா அமைச்சு சம்மதம் தெரிவித்துள்ளது. சிறீலங்கா அரச. வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் பின்னரே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது. அடுத்த மாதம் முதல் இவர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
வருடாந்தம் நடாத்தும்

அனைவருக்குமான
பூப்பந்தாட்ட (Badmiton) சுற்றுப்போட்டி

பிரிவுகள்: 1. ஆண்கள்
2. பெண்கள்
3. 14 வயதுக்குட்பட்டோர்

காலம்: 11.02.2001 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.30 மணிக்கு
இடம்: Stade Luis Lumière (Gymnase)
34 Rue Louis-Lumière
M°: Porte de Bagnolet ou
Porte de Montréuil

பங்குபற்ற விரும்பும் அனைவரும் உங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: ரகுநாதன்
01 47 18 69 07 / 06 10 74 14 64
கல்வி நிலையம் (சனி, ஞாயிறு 1h - 9h) - 01 43 56 17 91



முதலாம் ஆண்டு நினைவுவணக்கம்

வீர ஜனனம்: 08 – 12 – 1959



வீர மரணம்: 02 – 02 – 2000

கப்டன் புட்டன்

அமரர் மாரிமுத்து குகதாசன்
உலக தமிழர் இயக்க முன்னாள் ஊ-4 பகுதிப் பொறுப்பாளர்
(கோப்பாய், தமிழீழம்)

விழி நிறைய நீர் சுமந்து
இல்லாள், பிள்ளைகளிருக்க...
விம்முகின்ற இதயங்களாய்
உடன்பிறந்த உள்ளங்கள்
உற்றார், உறவினர்கள் காத்திருக்க...
விரைந்து நீர் விண்ணோடிச் சென்ற
காரணம் தான் என்ன?

பேச்சிலும் மூச்சிலும் ஈழ நினைவு சுமந்து
விடியும் வேளை வருமுன்னே
விடுதலைக்காய் நீர் ஆற்றிய
சேவைகள் போதுமென்றா
எம்மை விட்டுப் போய்ச்சேர்ந்தீர்?

பரவிக் கிடக்கும் பயிரினுள் – உம்
பாதம் புதைய நீர் நடந்து எம்
தாய் மண்ணின் சோகம் துடைத்தீர்...
தாய் நாட்டிற்கு உம் பணி செய்தீர்..!

உம் சேவைகளின் சிறு பகுகளின்
நாமம் தாங்கியே எம் நாட்டிற்காய்
என்றும் பணியாற்றுவோம்
என்று இந்த நாளில் உம்மீது
ஆணையாய்க் கொள்கின்றோம்!!

உம் நினைவில் உறுதி கொள்ளும்
அன்பு மனைவி, பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்
தொடர்புகளுக்கு 416-332-2844, 416-701-9250

Pub.Gra.Aus.

# தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவும் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பிரித்தானியா பிரகடனப்படுத்தக் கூடாது எனக்கோரியும்

## – மட்டக்களப்பு மாணவர்களின் எழுச்சிப் போராட்டம்

(04.02.01)

தமிழ் பேசும் மக்களின் அபிலாசையான சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக பிரித்தானிய அரசு பிரகடனப்படுத்தக் கூடாது எனக்கோரியும் கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தினர் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். கடந்த 1ம் திகதி வியாழனன்று, பல்கலைக்கழக மைதானத்தில் இந்த உண்ணாவிரதம் நடைபெற்றபோது, பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளை கண்டித்தும், சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை வலியுறுத்தியும் பின்வரும் கோசங்கள் எழுதிய பதாதைகள் கட்டப்பட்டிருந்தன.

அதில்...

- *வெள்ளைப்புறாவைக்காட்டி ஆட்சிக்கு வந்த சந்திரிக்கா அரசே ஒவ்வொரு தமிழர்களின் வீடுகளிலும் வெள்ளைக் கொடிகளை பறக்கவிடுவதுதான் உன் நோக்கமா?*
- *பாதுகாப்பு, சமாதானம் என்ற போர்வையில் தமிழர்களின் மரபுவழி தாயகத்தை சுடுகாடாக்காதே*
- *யுத்தத்திற்கு நிதி சேர்ப்பதற்காக வடக்கு கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களை மூடிவிட மேற்கொள்ளும் விசமத்தனமான பிரசாரங்களை மக்கள் நம்பும் அளவில் இல்லை.*
- *சர்வதேச சமூகமே அரசின் யுத்தத்திற்கு நிதி வழங்காதே. மாணவர்களின் ஜனநாயக அபிலாசைகளுக்கு தீவிரவாத சாயம் பூசுகிறது சந்திரிக்கா அரசு.*
- *அங்கவீனமுற்ற ஒரு தலைமுறையையும், பாதாள உலக பரம்பரையையும் உருவாக வழிசெய்யும் சந்திரிக்கா அரசே நீயே பயங்கரவாதி.*

போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

காலை முதல் மாலை வரை நடைபெற்ற இப் போராட்டத்தில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் என பெருந்தொகையானோர் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வின் போது பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக தடைசெய்யக் கூடாது எனக்கோரி ஒரு இலட்சம் பேரிடம் கையெழுத்து வாங்கும் நடவடிக்கையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதேவேளை, இவ் உண்ணாவிரதம் தொடர்பாக கிழக்குப் பல்கலைக் கழக சமூகம், 'அடையாள உண்ணா விரதம்' எனும் தலைப்பில் ஒரு அறிக்கையையும் வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில், தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரி பல்கலைக்கழக சமூகத்தால் நடாத்தப்பட்டு வரும் எழுச்சிப்போராட்டங்களின் ஒரு வடிவமாக இன்று (01.02.20001) கிழக்கு பல்கலைக் கழக சமூக்மாகிய நாம் தமிழ் பேசும் மக்களின் அபிலாசை சுயநிர்ணய உரிமை என்பதை அங்கீரிக்கக் கோரியும், பிரித்தானிய அரசு தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்தக் கூடாதென்றும் வலியுறுத்தியும் நாம் அகிம்சை வழியில் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கின்றோம். தமிழ் பேசும் மக்களின் ஏகபிரதிநிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதாக கூறிய அரசு, இன்று அவர்களை பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்தக்கோருவது அரசின் ஸ்திரமற்ற தன்மையும் அடக்கியாளும் தன்மையையும் வெளிக்காட்டுகின்றது.

இன்று கிழக்கு மற்றும் யாழ். பல்கலைக்கழகங்கள் விடுதலைப்புலிகளின் தூண்டுதலால் அரசுக்கெதிராக செயற்படுவதாக அரசு விசமப் பிரசாரம் செய்து வருகின்றது. எமது தமிழ் பேசும் மக்களின் உரிமையை வென்றெடுக்கும் உளப்பாங்கும் உரிமையும் ஒவ்வொரு தமிழ் பேசும் மக்களுக்கும் உண்டு என்பதை சர்வதேச சமுகம் உணரவேண்டும். புலிகள் தூண்டிவிடுவதாக கூறிக் கொள்ளும் அரசு, மறைமுகமாக தமிழ் பேசும் மக்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளதை ஒப்புக்கொள்கின்றதா? தமிழ்பேசும் மனிதர்களாக தம்மை இனங்காட்டிக்கொள்ளும் அரசின் சில அடிவருடிகள் தமிழ் பேசும் மக்களுக்கெதிரான பிரச்சாரங்களை இனிமேலாவது நிறுத்த வேண்டும். எமது அப்பாவி சிங்கள சகோதரர்களே எமது போராட்டம் உங்களுக்கு எதிரானது அல்ல. சிறீலங்கா அரசாங்கம் விசமப்பிரசாரம் மூலம் தமிழ் பேசும் மக்களை பயங்கரவாதிகளாக சித்தரிக்கின்ற இவ்வேளையில் உங்களையும் உங்கள் எதிர்கால சந்ததியினரையும் படுகுழியில் தள்ளிக் கொண்டிருக்கின்றது. என்பதை உணர்வீர்களா?

அகிம்சையை போதித்த புத்தரின் வழிவந்தவர்களில் ஒருசில பௌத்தபிக்குகள் பேரினவாத பீரங்கிகளாகவும், அரச பயங்கரவாதத்துக்கு துணைபோபவர்களாகவும் இருப்பதனால் பாதிக்கப்படுவது எங்களுடன் உங்கள் எதிர்காலமும்தான் என்பதை அறிவீர்களா? அரசு தமிழ்மக்களை அழிக்க வேண்டும் என பல திட்டங்களை அறிமுகப்படுத்த எத்தனித்து வருகின்றது. இதனால் எதிர்கால பாதிக்கப்படபோகின்றவர்கள் நீங்களும் தான் என்பதை உணர்வீர்களா? எமது தமிழ்பேசும் மக்களின் அபிலாசையான சுயநிர்ணய உரிமையை் அங்கீகரிக்கக்கோரி எமது போராட்டம் தொடரும்.

நிரந்தர சமாதான சூழலில் நிம்மதியாக வாழ சிங்கள சகோதரர்களே எம்முடன் திரள்வீர்களாக...

எமது நோக்கம் சரிநிகர் சமனாக, சுயநிர்ணய உரிமையுடன் வாழும் எம் மரபுவழித்தாயகம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களை கண்காணித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு படையினர் திட்டமிட்டு வருவதாகவும்; இதற்கு தமிழக் கூலிக்குழுக்களை பயன்படுத்தி வருவதாகவும், இவர்கள் மாணவர்கள் பற்றிய விபரங்களை சேகரிப்பதில் இறங்கியுள்ளதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஒக்ஸ்பாம் மீது சிங்கள இனவாத அமைப்பு கைக்குண்டு வீச்சு

(04.02.01)

பிரித்தானிய அரசசார்பற்ற நிறுவன ஒக்ஸ்பாம் மீது சிங்கள இனவாத அமைப்பான பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய முன்னணி கைக்குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளது. கொழும்பு பார்க் வீதியில் அமைந்துள்ள இந் நிறுவனத்தின் மீது கடந்த புதனன்று நள்ளிரவு இரு கைக்குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதன்போது, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு வாகனங்கள் பலத்த சேதமடைந்ததுடன், அக்கட்டடத்தின் ஜன்னல் கண்ணாடிகளும் சேதம் அடைந்துள்ளன.

இம்மாதம் பிரித்தானியா கொண்டுவரவுள்ள புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் விடுதலைப் புலிகளை தடை செய்யவேண்டும் என சிறீலங்கா அரசாங்கமும், சிங்கள இனவாத அமைப்புக்களும் கோரி வருகின்றன. ஆனால் அவ்வாறான சாத்தியங்கள் குறைவு என பத்திரிகை ஒன்று வெளியிட்டிருந்த செய்தியினால் ஆத்திரம் கொண்ட சிங்கள இனவாத அமைப்புக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக இத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சமாதானத்திற்கு எதிராக செயற்படும் சிங்கள இனவாத அமைப்புகளால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர், நோர்வேக்கு எதிராக, அந் நாட்டின் தூதரகம் மீதும், அதன் உதவியுடன் இயங்கும் சிறுவர் பாதுகாப்பு அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதுடன், நோர்வே நாட்டிற்கு எதிராக ஊர்வலங்களை நடத்தி, நோர்வே கொடியையும் எரித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# பணத்தை மிதக்க விட்டமையை எதிர்த்து ஐ.தே.க. வழக்கு

(04.02.01)

சிறீலங்கா மத்திய வங்கி பணப்பெறுமதியை தீர்மானிக்கும் நடைமுறையை வர்த்தக வங்கியிடம் (உலக சந்தை) கடந்த 23ம் திகதியில் இருந்து வழங்கியதையடுத்து இலங்கை நாணயத்தின் பெறுமதி பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. அரசின் நாணயத்தை மிதக்க விட்டமைக்கு அதாவது நாணயப் பெறுமதி இறக்கம் செய்தமைக்கு ஆட்சேபம் தெரிவித்து, சிறீலங்கா அரசிற்கு எதிராக அதன் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த செவ்வாயன்று வழக்குத் தாக்கல் செய்துள்ளது. நாணயத்தை மத்திய வங்கி சுயாதீனமாக மிதக்க விடுவதற்கு முன்னர் நிதிச்சட்டத்தின் கீழ் அரசு நாடாளுமன்றத்தில் விவாதித்து அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைவரினதும் அனுமதியுடனேயே மேற்கொள்ள வேண்டும். ஆனால் இந்த நடைமுறை இங்கு பின்பற்றப்படவில்லை. வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிரான ரூபாயின் பெறுமதியை மிதக்கவிடும் அரசின் முடிவை ரத்துச் செய்ய வேண்டும் என தமது மனுவில் ஐ.தே.க. குறிப்பிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான காமினி அத்துகோறளையும், ரவி கருணநாயக்கவும் இணைந்து இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகவும் இதில் குற்றவாளிகளாக மத்திய வங்கி ஆளுநர் உட்படப் பல அதிகாரிகள் குறிப்பிடப்பட்டுள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பணவீக்கத்துக்கு காரணம் இராணுவச் செலவு

## – சமசமாஜக் கட்சி –

(04.02.01)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும் பண வீக்கத்திற்கும் காரணம் இராணுவச் செலவின் அதிகரிப்பே என லங்கா சமசமாஜக் கட்சி கூறியுள்ளது. இந்நெருக்கடியைத் தவிர்க்க அரசாங்கம் உடனடியாக இராணுவ செலவீனங்களைக் குறைக்க வேண்டும். இல்லையேல் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாது என அரசிற்குக் கூறியுள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சி ஆட்சியில் உள்ள பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 'ஓர் கட்சி என்பது குறிப்பிடத்தக்கது.




ரதி ஜுவலர்ஸ்



28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL
Tel: 0181-9033063-Fax: 0181-9039711

'எப்பொழுதுமே மலிவு விலை'

OPEN: 7 Days a Week
Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

Pub

# தென்மராட்சியில் மீளக்குடியேற வேண்டாம்

## - புலிகள் மீண்டும் அறிவிப்பு

(04.02.01)

சிறீலங்கா படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள தென்மராட்சிப் பகுதிகளில் அப்பகுதி மக்களை மீளக்குடியேறச் செல்ல வேண்டாமென விடுதலைப் புலிகள், புலிகளின் குரல் வானொலி ஊடாக மக்களுக்கு மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மனித கேடயங்களாகப் பொதுமக்களைத் தமது பாதுகாப்பிற்காகப் பயன்படுத்துவதற்காகவே இராணுவம் அப் பகுதிகளில் பொதுமக்களை மீளக்குடியேற்றுகின்றார்கள் என்றும் குற்றம் சாட்டியுள்ள விடுதலைப் புலிகள், இப் பகுதிகளில் உயிர்களைக் குடிக்கத்தக்க வகையில் பல்லாயிரக்கணக்கான மிதிவெடிகள், கண்ணிவெடிகள் என்பன புதைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளதுடன், தற்போது சிங்கள இராணுவம், தாம் தந்திரோபாய ரீதியிலான பின் நகர்வகளை மேற்கொண்ட கைதடி, நாவற்குழி, மட்டுவில், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் மக்களை குடியமர்த்தி தனது பாதுகாப்பை பலப்படுத்தும் மிகவும் கேவலமானதும் கோழைத்தனமானதுமான முயற்சியில் இறங்கியுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் பாதுகாப்பு காரணங்களுக்காக மீளக்குடியமர வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் கடந்த மாதமும் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


# 'சாவகச்சேரி' மக்கள் வாழமுடியாத சூனியப்பிரதேசம் என்கிறது கூட்டணி மீளக்குடியேற்ற இராணுவம் முயற்சி

(04.02.01)

சாவகச்சேரி பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்த சில கட்சிகளும், அரசும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆனால் இப்பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்தக் கூடிய சூழலைக் காணவில்லை. இப்பகுதி சின்னாபின்னப்பட்ட நிலையில் ஒரு சூனியப்பிரதேசமாகவே காட்சியளிக்கின்றது என சிறீலங்கா அரசின் யாழ். மேயரான கூட்டணியின் என். ரவிராஜ் தெரிவித்துள்ளார். ஆனால் அப்பகுதிகளில் மக்களை குடியேற்ற சிறீலங்கா இராணுவம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கு தமிழ்க் கூலிக் குழுவொன்றும் உதவிகளை வழங்கி வருகின்றது.

மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாக கடந்த 1ம் திகதி வியாழனன்று வரணி மகாவித்தியாலயத்தில் 52வது படையணியின் பிரதித் தளபதி பிரிகேடியர் செனவீர தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. தென்மராட்சி பிரதேச செயலக உறுப்பினர்கள், கூட்டுறவு அமைப்புகள், வங்கிகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அழைத்து முதல் கட்டமாக கைதடிப் பிரதேச மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி இவர்களிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார். இதன் பின்னர் ஏனைய பகுதிகளிலும் மக்கள் கட்டம் கட்டமாக மீளக்குடியமர்த்தப்படுவர் என்றும் கூறியுள்ளார். புலிகள் யாழ். குடாவை முற்றுகையிட்டிருந்த வேளை பொதுமக்களை கேடயமாகப் பயன்படுத்தி இராணுவத்தினர் தப்பித்துக்கொண்டது தெரிந்ததே. அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் மீண்டும் ஏற்பட்டால் பொதுமக்களை கேடயமாகப் பயன்படுத்துவதற்கே இராணுவத்தினர் இப் பகுதிகளில் மக்களை உடனடியாகக் குடியேற்றுவதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர் என அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இதற்கு முதல் நாள் கொழும்பு கூட்டணியினரை, சிறீலங்கா இராணுவத்தின் யாழ்.குடா 51-2 படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் கட்டகும்ற சாவகச்சேரி மற்றும் தென்மராட்சி பகுதிகளுக்கு அழைத்துச் சென்று காட்டியுள்ளார். இப் பகுதிகளை பார்வையிட்ட கூட்டணியினர், இப்பகுதியில் எந்தவொரு வீடும் உருப்படியான நிலையில் இல்லாமல், ஒரு சூனியப்பிரதேசமாகக் காணப்படுகின்றது எனவும், யாழ். சாவகச்சேரி நவீன சந்தைக்கட்டிடம் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், வைத்தியசாலைக் கட்டடம் கூட இருந்த இடம் தெரியாமல் அழிந்துள்ளது எனவும் கூறியதுடன், இந்த நிலையில் இங்கு எவ்வாறு மக்கள் மீளக்குடியமர முடியும். இப்பகுதியில் குடிநீர் கூட இல்லாமல் உள்ளது. அத்துடன் வீடுகள் திருத்தியமைப்பதற்கும் நீண்டகாலம் எடுக்கும். இதன் பின்னரே மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராயலாம் எனக் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



சாவகச்சேரி சந்தைக் கட்டடத்தின் தற்போதைய தோற்றம்

# கொழும்பு வந்த வெளிநாட்டு இராணுவத் தளபதிகள்

(04.02.01)

கொழும்பிற்கு கடந்த சில வாரங்களாக பாகிஸ்தான் மற்றும் செச் குடியரசுகளில் இருந்து இராணுவத் தளபதிகள் வந்து சென்றுள்ளனர். கடந்த வாரம் பாகிஸ்தானின் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் முஹமட் யூசுப் ஹான் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்தார். சிறீலங்கா இராணுவத் தலைமையகத்தில் பாகிஸ்தான் இராணுவத் தளபதிக்கு விசேட வரவேற்பு ஒன்றும் நடத்தப்பட்டது.

இதேவேளை, செக் குடியரசின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜிரி செடி வி கொழும்பிற்கு கடந்த 23ம் திகதி வந்திருந்தார். சிறீலங்கா இராணுவ அதிகாரிகளுடன் செக் குடியரசின் குழுவினர் சந்தித்து பேசினர். சிறீலங்கா அரச இராணுவத்திற்கு பாகிஸ்தான், செக் குடியரசு போன்றவை ஆயுத தளவாடங்களை விற்பனை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.



செக்குடியரசு இராணுவத் தளபதி மற்றும் அதிகாரிகளுடன் பலகல்ல



பாகிஸ்தான் இராணுவத் தளபதியுடன் பலகல்ல

# சிறீலங்கா சுதந்திரதினம் தமிழ் மக்களின் துக்கதினம்

## - மட்டக்களப்பு சுதந்திர மாணவர் முன்னணி -

(04.02.01)

சிறீலங்காவின் சுதந்திரதினமான பெப்ரவரி 4ம் திகதியை தமிழ் மக்கள் தேசிய துக்கதினமாக அனுட்டிக்க வேண்டும் என அறிவித்த மட்டக்களப்பு சுதந்திர மாணவர் முன்னணி, இது தொடர்பாக துண்டுப் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டது. கடந்த வியாழனன்று வெளியடப்பட்ட அத் துண்டுப்பிரசுரத்தில்,

பெப்ரவரி 4ம் நாள் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டநாள். தமிழினத்தின் தேசிய அபிலாசைகள் மறுக்கப்பட்ட நாள். தமிழினத்தின் சுதந்திரம் பறிக்கப்பட்டு அடிமைகளாக கணிக்கப்பட்டநாள். அந்த நாளை தமிழ் இனம் தேசிய துக்கதினமாக அனுட்டிக்க வேண்டும். இன்றைய பிரச்சினைக்கு தீர்வாக அமையக்கூடியது சுயநிர்ணய உரிமையைக்கொண்ட அரசியல் தீர்வேயாகும். எனவே மக்களுக்கு விழிப்பூட்டி அவர்களை வழிநடத்தி எமது உரிமைகளை வென்றெடுப்பது மாணவர்களின் கடமையாகும். இதனடிப்படையிலேயே வன்முறைகளற்ற இரத்தம் சிந்தாத சாத்வீகப் போராட்டத்தினை மாணவர்கள் முன்னெடுத்துச் செல்கின்றனர். இதன் ஒரு வெளிப்பாடாகவே கடந்த 20ம் திகதி அனுட்டிக்கப்பட்ட ஹர்த்தாலாகும். ஆனாலும் சமகால அரசியல் தெளிவற்ற சிலரின் அறியாமையைக் கண்டு மாணவர் சமூகம் தனது அதிருப்தியை தெரிவித்துக்கொள்கிறது.

இதேவேளை, மாணவர்களின் ஒட்டுமொத்த எழுச்சியை அலட்சியப்படுத்தி அவர்களை பகடைக் காய்களாக்க சிலர் நினைக்கின்றனர். அதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இராணுவத்தினரால் நடத்தப்படுகின்ற இசைநிகழ்ச்சி கேளிக்கை நிகழ்ச்சிகளில் பல பின்னணிகள் உள்ளன. மக்களையும், மாணவர்களையும் பல்வேறு தந்திரோபாயங்கள் மூலம் கவர்ந்திழுத்து அவர்களின் போராட்டம் பற்றிய சிந்தனையை திசை திருப்புவதேயாகும். எனவே இராணுவத்தினரின் பொறியில் விழுந்து விடாதீர்கள். இவ்வாறான அடிப்படை நிகழ்வுகளை மிக உன்னிப்பாக ஆராய்ந்து கொண்டிருக்கும் நாம் எப்போதும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளுக்காய் சாத்வீக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் உறுதியாய் செயற்படவுள்ளோம். இலட்சியத்தால் ஒன்று பட்டு எழுச்சிபெற்ற மக்களை, எந்தவோர் சக்தியாலும் தோற்கடிக்க முடியாது என்பதற்கு நாம் ஒன்றிணைந்து செயல் வடிவம் கொடுப்போம். இவ்வாறு அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழில் படையினரால் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

(04.02.01)

யாழ். குடாவில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தினரால் கடந்த வாரம் இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். சுட்டுக்கொன்ற இரு இளைஞர்களையும் வழமைபோல் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனக்கூறி வரணியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். கேரதீவு கடல் நீரேரிப் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இரு. இளைஞர்களே படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்ட மேற்படி இரு இளைஞர்களின் சடலங்களிலும் கட்டைக்காற் சட்டையுடனும், கறுப்பு நிற உள்ளாடை (பெனியன்) காணப்படுவதாக வைத்தியசாலைச் செய்திகள் தெரிவித்துள்ளன.

புதிய நிர்வாகத்தின் கீழ்

AMIRTHAAM



முற்பணமாக £20 செலுத்துபவர்கட்கு
ஒரு நேர உணவு ஏழு நாட்களுக்கும்.

OPENING HOURS:

Monday-Thursday - 12 noon- 3.00 pm 6.00 pm 11.00 pm
Friday/Saturday - 12.00 noon- 12.00 midnight
Sunday - 12.00 noon - 11.00 pm

200B Alexandra Avenue, South Harrow, Middlesex HA2 9BU,
Tél: 020 8423 9666/ 020 8864 3636


# சேது சமுத்திர திட்டம் விரைவில் நிறைவேறும்

## - பிரதமர் வாஜ்பாய் -

சேது சமுத்திர திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவோம் என பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார். சென்னை எண்ணூரில் புதிதாக அமைக்கப்பட்ட துறைமுகத்தை திறந்து வைத்து பேசிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இத் திறப்புவிழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பிரதமர் வாஜ்பாய் இத் துறைமுகத்தை திறந்து வைத்தார். இத் துறைமுக திறப்புவிழாவில் பேசிய பிரதமர் வாஜ்பாய் மேலும் கூறியதாவது; .

சமீபத்தில் ,வியட்நாம் நாட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கிருந்த கோயில்களைப் பார்த்தேன். அதைத் தமிழர்கள் கட்டினார்கள் என்று சொன்னார்கள். மகிழ்ச்சி அடைந்தேன். அப்படிப்பட்ட நாட்டில் பிறந்தவர்தான் நமது வ.உ.சிதம்பரனார். சென்னை துறைமுக பொறுப்புக்குழு, தமிழ் நாடு மின்சார வாரியம் ஆகியோரை இந்த நேரத்தில் பாராட்டுகிறேன். தமிழகத்திற்கும், மத்திய அரசுக்கும் நல்ல சுமூக உறவுள்ளது. இதனால் ஒற்றுமையுடன் பல வளர்ச்சிப்பணித் திட்டங்களை செயல்படுத்த முடிகியது. திராவிட வரலாறு பற்றி எனக்குத் தெரியும். திராவிட இயக்கத்தினர் சமூகநீதிக்காகப் பாடுபட்டவர்கள். ஜனநாயகத்திற்காகவும் இந்தியாவின் ஒற்றுமைக்காகவும், ஒருமைப்பாட்டுக்காவும் உறுதுணையாக இருந்தவர் அண்ணா. அவரை இன்று நினைத்துப் பார்க்கிறேன். அண்ணா வழியில் வந்த முதல்வர் கலைஞர் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். அண்ணாவின் கனவுகளை நிறைவேற்றி வருகிறார். இந்த வேளையில் குறிப்பாக ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். தமிழக மக்களின் நீண்ட நாள் கோரிக்கை சேதுசமுத்திரத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான். சர்வதேச வணிகத்திற்கு இது பயனுள்ளதாக இருக்கும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவோம் என்று தேசிய ஜனநாயக கூட்டணி ஏற்கனவே அறிவித்துள்ளது. அதன்படி நாங்கள் நிறைவேற்றுவோம் எனத் தெரிவித்தார்.




துறைமுகத்தைத் திறந்து வைக்கும் பிரதமர் வாஜ்பாய்

# உலங்குவானூர்தி நொருங்கியது 5 படையினர் பலி

ஜம்மு— காஷ்மீரில் உலங்குவானூர்தி ஒன்று கடந்தவாரம் விபத்துக்குள்ளாகியதில் உயர் இராணுவ அதிகாரி உட்பட ஐந்து படையினர் பலியாகினர். ஜம்மு அருகேயுள்ள பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயம் ஒன்றில் இராணுவ அதிகாரி வழிபாட்டிற்காக சென்றபோது இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. உலங்குவானூர்தி தரையிறங்கிய போது விபத்துக்குள்ளாகியதாகவும் உடனடியாக தீப்பற்றிக் கொண்டதில் அதில் பயணம் செய்தவர்களும் இரு விமான ஓட்டிகளும் பலியாகியுள்ளனர்.

# வீரப்பன்-படையினர் மோதல்

தமிழ்நாடு - கேரளா எல்லையான சம்மந்திக்காடு என்ற இடத்தில் வீரப்பனுடன் படையினர் நேரடி மோதலில் ஈடுபட்டதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற மோதலின்போது வீரப்பனின் அணியைச் சேர்ந்த ஒருவரை தாம் கைதுசெய்துள்ளதாக தமிழக காவல்துறை பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடியுள்ள வீரப்பனை தேடுவதற்கு மேலதிக படையினர் இப்பகுதி முழுவதும் கொண்டுவந்து குவிக்கப்படுகின்றனர் எனவும், உலங்குவானூர்திகள் தேடுதலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வீரப்பன் தொடர்பு அமைப்புகளை தடைசெய்ய கோரிக்கை

சந்தன .வீரப்பனுடன் தொடர்பு வைத்துள்ள அமைப்புக்களை தடைசெய்யுமாறு தமிழக அரசு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தமிழக அரசு செய்திகள் தெரிவித்துள்ளன.

இதன் அடிப்படையில் வீரப்பனுடன் தொடர்புடைய தமிழ் நாடு விடுதலைப்படை, தமிழ் தேசிய மீட்புப்படை என்பன வற்றையே தடைசெய்யுமாறு தமிழக அரசு கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




# தமிழக மீனவர்கள் சுட்டுக்கொலை சிறீலங்கா அரசிற்கு கடும் கண்டனங்கள்

தமிழக மீனவர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் மூன்று மீனவர்கள் சிறீலங்கா கடற்படையினரால் படு காயப் படுத்தப்பட்ட சம்பவத்திற்கு தமிழகத்தின் பல கட்சிகளும் தமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

கடந்த 30ம் திகதி செவ்வாயன்று கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களின் இரு மீன்பிடிப்படகுகள் மீது, அப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த சிறீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதன் போது ஐந்து மீனவர்கள் குண்டு பாய்ந்து படுகாயமடைந்தனர். இதில் வடமலை(30) என்ற மீனவர் சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார். காயமடைந்த ஏனைய மீனவர்கள் காப்பாற்றப்பட்டு ஏனைய மீனவர்களால் கரைக்கு எடுத்துச்செல்லப்பட்ட வேளை ஜெயந்தன்(30) என்ற மீனவர் பலியாகியுள்ளார். ஏனையவர்கள் நாகை அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை சிறீலங்கா கடற்படையின் இத் தாக்குதல் குறித்து அ.தி.மு.க. உட்பட பல கட்சிகள் சிறீலங்கா அரசை கண்டித்துள்ளன. இப் படுகொலை தொடர்பாக சென்னை வந்த பிரதமர் வாஜ்பாயை ம.தி.மு.க. பொதுச் செயலர் சந்தித்து பேசியுள்ளார். இதன்போது சிறீலங்கா அரசை எச்சரிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட வைகோ; இது தொடர்பாக வாஜ்பாயிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தார். வைகோவின் மனுவை ஏற்றுக் கொண்ட பிரதமர் வாஜ்பாய், இம்முறை இப்பிரச்சினை தொடர்பாக கடுமையாக அணுகுவோம் எனத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, தமிழக சட்டமன்றத்தில் மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்து விவாதம் நடைபெற்றது. இதன்போது, சிறீலங்கா அரசிடம் வழங்கிய கச்சதீவை மீளப்பெறுவதுடன் சிறீலங்கா மீது மத்திய அரசு பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் எனவும் கோரப்பட்டது.

# கோவையில் 800 கோடி செலவில் அதி நவீன மருத்துவமனை

ஆசியாவிலேயே தலைசிறந்த மருத்துவமனை எனக் கருதப்படும் அளவிற்கு அதிநவீன வசதிகள் கொண்ட மிகப் பெரும் மருத்துவமனை ஒன்று 800 கோடி ரூபா செலவில் கோவையில் அமைக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

17 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும் இம் மருத்துவமனையில் 5000 பேர் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஆறு அதி நவீன சத்திரசிகிச்சை நிலையமும் உலங்குவானூர்தி தரையிறங்கும் அம்புலன்ஸ் வசதிகளும் செய்யப்படவுள்ளன.

2004ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் முழுமையான செயற்பாடுகளுடன் இயங்கவுள்ள இவ் வைத்தியசாலையில் அனைத்து விதமான நோயாளர்களுக்கும் சிகிச்சை வழங்குவதற்கு 12,000 வைத்திய நிபுணர்கள் சேவையில் ஈடுபடுவார்கள் எனவும் செய்திகள் தெரிவித்துள்ளன.

# ரஜனிகாந்திடம் மோசடி முன்னாள் பிரதமர் மகன் கைது

நடிகர் ரஜனிகாந்திடம் இரண்டுகோடி ரூபா மோசடி செய்ததாக முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் மகனும் முன்னாள் ஆந்திர மாநில அமைச்சருமான பிவிரங்கராவ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இருமுறை தேர்தலில் போட்டியிட்டு பெரும் கடன் நெருக்கடியில் சிக்கிக்கொண்டதாகவும் இதன்போது ரங்கராவ் ரஜனிகாந்திடம் தொடர்புகொண்டு ஸ்ரீராக வேந்திரா படம் எடுப்பதற்கு உதவி கோரியுள்ளார். இதனையடுத்து 2 கோடியே ஆறு இலட்சம் ரூபாவை படம் எடுப்பதற்கு வழங்கியதாகவும், ஆனால் படம் எடுக்காதமையை அறிந்த ரஜனி தொடுத்த வழக்கை அடு-த்து, ரங்கராவ் கைது செய்யப்பட்டுள்ளார்.




NÆRKØB TRAVELS Ltd
MONEY & TRANSFER



* Colombo
* Madras
* Singepor
* Canada
* London

இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.

★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVEIS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)
★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக)மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.
★ NÆRKØB TRAVEIS LTD _ Korskervej. 104 _ 7000 Fredericia _ Danmark
★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42



| NÆRKØB பேருந்துசேவை | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark _London | 540 Kr | 890 Kr |
| Danmark _Paris | 540 Kr | 865 Kr |
| Danmark _Hombrg | 205 Kr | 327 Kr |

பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் & லூட்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது.

உடன் பணமாற்று சேவை


உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD

★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

Pub

# 180 வருடங்களின் பின்னர் குஜராத் சந்தித்த இரண்டாவது பெரும் அழிவு

1819ல், குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட பூமி அதிர்வு 2000 ற்கு மேற்பட்டவர்களை பலியெடுத்து அடங்கிப்போய் 180 வருடங்கள் கழித்து; மீண்டும் ஓர் பாரிய உறுமல். இம்முறை பலியெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இது வரை உறுதியாக்கப்படாதபோதிலும் 50,000 ற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இன்னும் அடங்கிவிடாமல் அடிக்கடி அதிர்ந்துகொண்டிருக்கும் இப்பிரதேசத்தில் உயிரிழந்தவர்களை மீட்கும் பணியை தொடர்வதா, விடுவதா என்ற நிலையில் உதவிக்கு விரைந்துசென்ற நாடுகளும் தொண்டர் நிறுவனங்களும் யோசிக்கத் தொடங்



பலியான மக்களுக்கு அஞ்சலி நிகழ்வு இடம் பெறுகின்றது

கியுள்ளன. ஒரு வாரத்திற்கு மேலாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளபோதும்; இறந்தவர்கள் உடல்களை முழுமையாக அப்புறப்படுத்த முடியாமையால் கட்டட இடிபாடுகள் அதிகமாக உள்ளன. அத்துடன் அப்பகுதி எங்கும் நடமாட முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் தொற்று நோய் அபாயம் ஏற்படலாம் என்ற அச்சமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தங்கள் உறவுகள் எங்கோ கற்களுக்கிடையில் சிக்குப்பட்டு இன்னும் உயிர்வாழலாம் அவர்களை மீட்டெடுக்க தொண்டர் அமைப்புக்கள் தொடர்ந்து தமது மீட்புப்பணியை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை கட்டட இடிபாடுகளுக்குள் இருந்த நான்கு, ஐந்து நாட்களின் பின்னரும் பலர் உயிரோடு மீட்கப்பட்டுள்ளதால் இன்னும் இவ்வாறு பலர் சிக்குப்பட்டிருக்கலாம் எனக்கூறும் மக்கள்; கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்கு கனரக வாகனங்கள் பயன்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வருகின்றனர்.

### * 4500 உடல்கள் ஒரே இடத்தில் தகனம்

கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து உயிரோடு மீட்கப்பட்டவர்களை விட உடல்களாக எடுக்கப்பட்டவையே அதிகம் என மீட்புப் பணியில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர். இதுவரை 16,000 வரையான உடல்கள் மீட்கப்பட்டு தகனம் செய்யப்பட்டுள்ளன. இதில் 4,500 உடல்கள் ஒரே இடத்தில் தகனம் செய்யப்பட்டுள்ளன. இதேநேரம் மீட்கப்படாமல் உள்ள உடல்களில் இருந்துவரும் துர்நாற்றத்தை தடுப்பதற்கும் தொற்று நோய் பரவுவதை தடுப்பதற்கும் நோய் எதிர்ப்பு மருந்துகள் அப் பிரதேசங்கள் எங்கும் தெளிக்கப்பட்டு வருகின்றன.



மீட்டெடுக்கப்பட்ட உடல்களுக்கு தொற்று நோய் பரவாமல் தடுக்க மருந்து அடிக்கப்படுகின்றது.

### * 50,000 பேர் பலி

இவ் அனர்த்தத்தில் பலியானவர்களின் தொகை மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் கூறியுள்ளது போன்று ஒரு இலட்சம்பேர் இருக்காது எனத் தெரிவித்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தெற்காசிய பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பாப் மெக்கரோ; அங்கு மேற்கொண்ட கணிப்புக்களின்படி 50,000 பேர்வரைதான் பலியாகியுள்ளனர் எனவும் ஒரு இலட்சம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும் கூறியுள்ளார். எனினும் இதுவரை கணிப்பிடப்படாததால் தற்போதைக்கு இறந்தவர்களின் தொகையை உறுதியாக கூறமுடியாது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.



மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர்

### * யுனிசெவ்-பாகிஸ்தான்-சர்வதேச உதவிகள் குவிகின்றன

ஐ.நா. மன்றத்தின் குழந்தைகள் நல அமைப்பான 'யுனிசெவ்' பூகம்ப நிவாரண நிதியாக 30 கோடியை வழங்கியுள்ளது. இந்நிதியில் 23 கோடி ரூபா மருந்துப்பொருட்களுக்கும் ஏனையவை மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட உள்ளன. இதேவேளை நோய்த்தடுப்பு நடவடிக்கைகளையும் மத்திய, மாநில அரசுகளுடன் இணைந்து மேற்கொள்ள உள்ளதாகவும் யுனிசெவ் தெரிவித்துள்ளது.



பாகிஸ்தானில் இருந்து கொண்டுவரப்பட்ட நிவாரணப் பொருட்கள் தரை இறக்கப்படுகின்றன.

சர்வதேச நாடுகள் தமது நேரடி உதவிகளையும் நிதி மற்றும் மருத்துவ அவசர உதவிகளையும் வழங்கியுள்ளன. தொடர்ந்தும் தமது உதவிகளை வழங்க தயாராக உள்ளதாக கூறியுள்ளன. பாகிஸ்தான் தனது இராணுவ விமான மூலம் உதவிப் பொருட்களை இந்தியாவிற்கு எடுத்துவந்து வழங்கியுள்ளது. தொடர்ந்தும் அனுப்பி வருகின்றது.



மீட்புப் பணியில் தனது நாயுடன் ஈடுபட்டுள்ள ஜப்பான் நாட்டவர்.

### * 100 கிராமங்கள் முழுமையாக அழிவு

குஜராத் கட்ச் மாவட்டத்தில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் முற்றாக அழிந்துபோயுள்ளன. அங்குள்ள கட்டடங்கள் அனைத்தும் இடிந்துபோய்க் கிடக்கின்றன. நிலத்தில் சரிந்து விழாத பல கட்டடங்கள் மனிதர் நடமாடமுடியாத அளவிற்கு ஆபத்தாக உள்ளதால் அவற்றை இடிக்கவேண்டிய நிலை உள்ளதாகவும் தெரிய வருகிறது. இப்பகுதிகளில் உடல்கள் பல அகற்றப்படாமல் கிடப்பதால் அப்பிரதேசம் முழுவதும் பல ஆயிரக்கணக்கான கழுகுகள் வட்டமடித்துக் கொண்டு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

### * 15,000 கோடி அழிந்தது

பூமி அதிர்ச்சியில் ஏற்பட்டுள்ள சேதங்களின் பெறுமதி 15,000 கோடிவரை இருக்கலாம் என இந்திய தொழில் வர்த்தக சம்மேளன அறிக்கை கூறுகின்றது. அகமதாபாத் பகுதியில் அழிந்துள்ள கட்டடங்களின் மதிப்பு மட்டுமே இது எனவும் பூஜ் நகர சேதம் இதில் கணிப்பிடப்படவில்லை எனவும் கூறியுள்ள சம்மேளனம், மக்கள் வெளியேறி விட்டதால் உற்பத்திச் சாலைகளின் உற்பத்திகள் நின்றுபோய் 10,000 கோடிரூபா நட்டம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.



அழிந்து போயுள்ள கட்ச் என்ற கிராமத்தின் தோற்றம்

### * கட்டடங்கள் இடிக்கப்படுகின்றன

சேதமுற்ற, வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ள கட்டடங்களை இடிக்குமாறு குஜராத் மாநில அரச அதிகாரிகள் எடுத்துள்ள முடிவை அடுத்து; கட்டடங்களை குண்டுவைத்து தகர்க்கும்



புனரமைக்க முடியாத கட்டடங்கள் இராணுவத்தினரால் குண்டுவைத்து தகர்க்கப்படுகின்றன

நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. மீளப் புனரமைப்புக்களை மேற்கொள்ள முடியாத கட்டடங்கள் அனைத்தும் குண்டுவைத்து தகர்க்கப்பட்டு வருகின்றன. அகமதாபாத்தில் மட்டும் ஆபத்தான நிலையில் அடுக்குமாடி கட்டடங்கள் 40 உள்ளதாகவும் அவற்றை இடிக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் தற்போது ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.


### * கட்டடங்கள் கட்டியவர்கள் மீது வழக்கு

பூமி அதிர்வினால் உடனடியாக இடிந்து விழுந்த கட்டடங்கள் அனைத்தும் தனியார் நிறுவனங்களால் கட்டப்பட்டவை எனவும், பூமி அதிர்வுகளைத் தாங்கும் வகையில் இக் கட்டங்கள் அமைக்கப்படாதமையாலேயே இவ்வளவு உயிரிழப்புகள் ஏற்பட்டன எனக்கூறி பாதிக்கப்பட்டவர்கள் கட்டடங்களை கட்டியவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கட்டட அமைப்பு விதிமுறைகளை சரியாக பின்பற்றாமலும் தரம் குறைந்த பொருட்களை பயன்படுத்தியமையினாலேயுமே கட்டடங்கள் இடிந்துவிழுந்ததாக அவர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

### * அதிர்வு தொடரும்

இதேவேளை குஜராத் மாநிலத்தில் இவ்வாறான பாரிய பூமி அதிர்வு மீண்டும் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதாகவும் மக்களை விழிப்புணர்வோடு செயற்படுமாறும் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக விஞ்ஞானிகள் ஆய்வில் ஈடுபட்டுவருகின்றனர்.



தங்கள் வியர்வை சிந்தி உழைத்த வீடு ஒரு நொடிக்குள் மண்ணோடு மண்ணாகிப்போனதை இன்னும் ஜீரணிக்க முடியாமல் அமர்ந்திருக்கும் மக்கள்.

# உலகச் செய்திகள்

## நட்சத்திர யுத்தத்தை எப்படியும் செயற்படுத்த அமெரிக்க முடிவு

(04.02.01)

ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து எதிர்த்து வரும் அமெரிக்காவின் நட்சத்திர யுத்தம் என வர்ணிக்கப்படும் ஏவுகணைப் பாதுகாப்பு செயற்பாட்டினை தொடர்ந்து , முன்னெடுக்கப் போவதாக அண்மையில் பதவியேற்ற பாதுகாப்புச் செயலர் கூறியுள்ளார்.

ஐரோப்பியத் தலைவர்கள் பலர் அமெரிக்காவின் இத் திட்டம், பல எதிர் விளைவுகளை தோற்றுவிக்கும் என அச்சத்தை வெளியிட்டுள்ள வேளையிலும், புதிய பாதுகாப்பு செயலரான டொனால்ட் ரம்ஸ்பிளெட், தனது அரசு இத் திட்டத்தை கைவிடும் நிலையில் இல்லை என்றும், ஐரோப்பிய நாடுகள் அதனை விரும்புகிறார்களோ இல்லையோ அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாமல் அத்திட்டம் முன்னெடுக்கப்படும் என உறுதியாகக் கூறியுள்ளார்.

ஜேர்மனியில் மூனிச் நகரில் ஆரம்பமாகிய ஐரோப்பிய பாதுகாப்பு மாநாட்டில், ஆரம்ப உரையினை அதிபர் ஜெராட் ஸ்ரூடர் ஆற்றினார். அதன்போது அமெரிக்கா மேற்படி தனது திட்டத்தை வெளிப்படையாக ஐரோப்பிய சகாக்களுடன் அலச வேண்டும் என கூறினார். இம் மாநாட்டில் பேசியபோதே திரு. ரம்ஸ்பிளெட் அமெரிக்காவின் இத் திட்டம் யாருக்கும் அச்சுறுத்தலாக இருக்காது. அதனையிட்டு யாரும் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை. மேலும் அமெரிக்காவின் இத் திட்டமானது நேட்டோ பங்காளிகளிடம் இருந்து அமெரிக்காவை பிரித்து விடாது என்றும், சர்வதேச பாதுகாப்பிற்கு அது எந்தவிதமான அச்சுறுத்தலையும் தோற்றுவிக்காது என்றும் கூறினார். கடந்த யூலை மாதம் மேற்படி திட்டம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது. ரஷ்யாவும் சீனாவும் இதனை எதிர்த்துவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவின் முடிவு நகைப்பிற்கு இடமானது - ஈராக் -

(04.02.01)

ஈராக்கின் சதாம் ஹுசைன் தலைமையிலான அரசிற்கு எதிரான எதிர்க்குழுக்களுக்கு மீண்டும் உதவிகளை வழங்க அமெரிக்க புதிய அரசு முடிவு செய்திருப்பதை நகைப்பிற்கு இடமான ஒரு விடயம் என ஈராக்கிய உதவி ஜனாதிபதி தாகா யாசின் ரமடான் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் புதிய அரசு ஈராக்கிய எதிர்க் குழுக்களுக்கு மீண்டும் பண உதவிகளை வழங்கப்போவத்தாக அறிவித்துள்ளது. கிளின்டனின் பதவிக்காலத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டு உதவிகளும் வழங்கப்பட்டு வந்தன. அமெரிக்க ஆதரவுடன் இயங்கி வந்த குர்திஸ் அமைப்பொன்றின் ஊடாக வட ஈராக் பகுதியில் இந்த எதிர்க்குழுக்கள் செயற்பட்டு வந்தன. 96ம் ஆண்டில் ஈராக்கிய படைகளினால் மேற்படி அமைப்பின் அலுவலகங்கள் தாக்கி அழிக்கப்பட்ட அத்துடன் இவர்களது செயற்பாடுகள் முடக்கத்திற்கு உள்ளாகியது. உதவிப்பண விநியோகமும் அத்துடன் நிறுத்தப்பட்டது. மனித உரிமை உதவிகளுக்காக இப்பணம் வழங்கப்படவுள்ளது என மேலோட்டமாக கூறப்பட்ட போதிலும், நான்கு மில்லியன் டொலர்கள் சதாம் ஹுசைன் அரசின் கவிழ்ப்பிற்கு பயன்படுத்தப்படும் என்பதே உண்மையான விடயம்.


சனியன்று பத்திரிகையாளரைச் சந்தித்த ஈராக்கின் உதவி ஜனாதிபதி, அமெரிக்காவில் பதவி ஏற்கும் எந்த அரசிற்கும் இடையே வித்தியாசம் இல்லை. அது குடியரசு கட்சியாக இருக்கட்டும், ஜனநாயகக் கட்சியாக இருக்கட்டும் எடுக்கப்படும் முடிவுகள் எல்லாலே ஒன்றாகத்தான் இருக்கின்றன. இப்போது எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவை கேலி செய்யாத ஈராக்கியர்ளே இருக்கமாட்டார்கள் என நான் நம்புகிறேன் என கூறினார். அத்துடன் பக்தாத்திற்கு விமானங்களை அனுப்பிவரும் நாடுகளிடம் விடுத்த கோரிக்கையில் பக்தாத்தில் இறங்குவதற்கு ஐநாவின் தடைகள் ஆணைக் குழுவிடம் அனுமதியை கோர வேண்டாம் என்றும், காரணம் அப்படியான கோரிக்கையின் மூலம் கிடைக்கும் அனுமதியானது, தடைகளை நியாயப்படுத்தும் ஓர் நடவடிக்கை என்றார்.

கடந்த வார இறுதியில் அமெரிக்கா புதிய அரசின் பிரதிநிதிகளை ஈராக்கிய தேசிய காங்கிரசின் தலைவரான அஹமட் சலாபி சந்தித்துப் பேசினார். மிகவும் நெருக்கமான உறவுகளை தாம் கொண்டுள்ளதாக அவர் பின்னர் தெரிவித்தார். ஈராக்கைப் பொறுத்தவரை புதிய அமெரிக்க அரசின் நிலைப்பாடு முன்னைய அரசைவிட கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இராஜாங்கச் செயலர் கொலின் பவல், ஈராக்கிய தற்போதைய அரசு மக்களுக்கு பிரச்சினைகைள கொடுக்குமோ என அண்மையில் கூறினார். பதவி ஏற்பிற்கு சற்று முன்னதாக தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த புதிய அதிபர், ஈராக்கிய அதிபரை கடுமையான வார்த்தைகளால் வர்ணித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜோசப் கபிலாவின் திடீர் விஜயம் உலகத் தலைவர்களைச் சந்தித்தார்

(04.02.01)

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் புதிய ஜனாதிபதியான ஜோசப் கபிலா தான் பதவியேற்ற கையோடு திடீர் விஜயங்களை பல நாடுகளில் மேற்கொண்டுள்ளார். இவர் தனது விஜயத்தில் தென்னாபிரிக்க ஜனாதிபதி ம்பேக்கி, பிரெஞ்சு ஜனாதிபதி ஜக் சிராக், ருவாண்டாவின் ஜனாதிபதி போல் கெகாமே மற்றும் ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான், அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் போன்றோரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.



பெல்ஜியப் பிரதமருடன் ஜோசப் கபிலா...

ஜனவரி மாதத்தில் கொங்கோ ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதியான லோரன் டெசிரே கபிலா சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அவரது மகனான ஜோசப் கபிலா புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார். இவரே உலகின் மிக இளமையான ஜனாதிபதி என்ற பெயரையும் பெற்றுக்கொள்கின்றார். இவர் 31 வயதானவர் எனக் கூறப்பட்ட போதிலும் இப்போது இவருக்கு வயது 29 என கூறுகிறார்கள். கொங்கோ ஜனநாயகக் குடியரசின் ஆயுதப் படைகளின் தளபதியாக இவர் தனது தந்தையின் காலத்தில் பதவி வகித்தார். இப்போதும் இவரே பதவியினைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வார் எனக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் இவர் பதவியேற்றுக்கொண்டதையடுத்து, தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில், நாட்டில் தொடர்ந்தும் பிரச்சனைகள் இருப்பதை தான் வரவேற்கவில்லை என்றும் தனது பதவிக்காலத்தில் பிராந்தியத்தில் அமைதிக்காக பாடுபடுவேன் என்றும், நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்காக பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட லுசாக்கா ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்றும் கூறினார். இவரது தொலைக்காட்சிப் பேச்சு சர்வதேச மட்டத்தில் வரவேற்பையும் நம்பிக்கையையும் பெற்றுள்ளது. கடந்த வாரம் ஆபிரிக்க தலைவர்கள் பலரை இவர் சந்தித்துள்ளார். அந்தவகையில் தென்னாபிரிக்க அதிபர் ம்பேக்கி மற்றும் பிரதான எதிரி நாடாகக் கருதப்படும் ருவாண்டாவின் அதிபர் போல் கெகாமே போன்றவர்களை சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் அரைவாசி வரையிலான பிரதேசத்தை, சுற்றிவர உள்ள நாடுகளின் ஆதரவில் இயங்கும் போராளிக்குழுக்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டுள்ளன. ஐ.நாவின் பொதுச் செயலரைச் சந்தித்தபோது நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்காக மீண்டும் ஐநா. உடனடியாகத் தலையிடவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். ஐ.நாவின் பாதுகாப்புப்படையாக 5500 பேரை அனுப்ப தயார் செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்ந்தும் தாமதப்படுத்தப்பட்டே வருகின்றது. இதனை விரைந்து செயற்படுத்துமாறு ஐ.நாவிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

ஆபிரிக்காவின் மூன்றாவது பெரிய நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசு, பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்துவதில் முன்னாள் காலனித்துவ நாடான பெல்ஜியத்தின் பங்கு இருப்பதாக கருதுகிறது. என்று பெல்ஜியப் பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சரை சந்தித்தபோது ஜோசப் கபிலா தெரிவித்தார். அத்துடன் நாட்டின் அபிவிருத்திக்காக ஐரோப்பிய நாடுகள் உதவிகளை வழங்கவேண்டும் எனவும் அவர் தனது சந்திப்பின் போது கேட்டுக்கொண்டார். இரண்டு மணி நேரமாக நடந்த இப் பேச்சின் பின் அது பற்றிக் கூறிய பெல்ஜிய வெளியுறவு அமைச்சர் லூயிஸ் மிசேல், நாம் ஏற்கனவே பல தீர்மானங்களை எடுத்து வந்தோம். கடந்த கால நிகழ்வுகளை உடைத்தெறிவதற்காக புதிய உதவிகளை எவ்வாறு வழங்கவேண்டும் என்பதை நாம் தீர்மானித்துள்ளோம். பொருளாதார அபிவிருத்திக்கான திட்டம், கல்வி அபிவிருத்தி திட்டம் போன்றவை முக்கிய இடத்தை பெறுகின்றன என்றும் கூறினார்.

## பிரெஞ்சு எதிர்ப்பு நடவடிக்கைகளை துருக்கி தீவிரப்படுத்தியது

(04.02.01)

பிரெஞ்சு பாராளுமன்றத்தில் துருக்கியில் இடம்பெற்ற ஆர்மேனியர்களின் படுகொலையை இனப்படுகொலையென ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனையடுத்து பிரான்சிற்கும் துருக்கிக்கும் இடையே அரசியல் ரீதியிலான மோதல்கள் ஆரம்பமாகியுள்ளன. துருக்கி அரசாங்கம் இவருடம் பிரெஞ்சு நிறுவனங்களுடன் எந்தவித கூட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை என்றும், தற்போது பேச்சுவார்த்தையில் உள்ள ஒப்பந்தங்கள் சிலவற்றைக்கூட கைவிட்டு விடப் போவதாகவும் எச்சரித்துள்ளது.

1915ம் ஆண்டு ஒட்டோமான் சாம்ராச்சியத்தில் ஆர்மேனியர்களின் இனப்படுகொலை இடம்பெற்றது. 1.5 மில்லியன் ஆர்மேனியர்கள் அழிக்கப்பட்டனர். இதனை ஓர் இனப்படுகொலை என பிரான்ஸ் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக்கோரி பல வருடங்களாக ஆர்மேனியர்கள் போராட்டங்களை மேற்கொண்டு வந்தனர். அதே வேளை, பிரான்ஸ் அவ்வாறு ஏற்றுக்கொள்ள கூடாது என துருக்கிய அரசும் தொடர்ந்தும் கோரி வந்துள்ளது. ஆனால், கடந்த வாரம் பிரெஞ்சு பாராளுமன்றம் இது இனப்படுகொலை எனும் சட்டமூலத்தை கொண்டுவந்துள்ளது. ஆர்மேனியர்களின் அழிவானது இனப்படுகொலை அல்ல என்றும், அரசிற்கு எதிரான புரட்சியை மேற்கொண்டதில் அவர்கள் கொல்லப்பட்டனர் என்றும், அந்த வகையில் மூன்று இலட்சம் ஆர்மேனியர்கள் மரணம் அடைந்தனர் என்றும் துருக்கி அரசு கூறுகிறது.

துருக்கியில் வர்த்தக தொழில்நுட்ப துறைகளில் பெரும்பங்கினை பிரான்சும் வகிக்கின்றது. வடமேற்கு துருக்கியில் கடலுக்கு அடியிலான சுரங்கப் பாதை ஒன்றினை அமைக்கும் திட்டம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் பிரெஞ்சு நிறுவனம் ஒன்றினால் ஆரம்பிக்கப்பட இருந்தது. அதேபோல் மற்றுமொரு பிரெஞ்சு நிறுவனம் 200 மில்லியன் அமெரிக்க டொலருக்கு உளவுச் செய்மதி ஒன்றினை துருக்கிக்காக தயாரிக்கும் ஒப்பந்தத்தை பெற்றிருந்தது. மேலும் துருக்கியின் விமான நிலையங்களில் ராடார்களை அமைக்கும் செயற்பாட்டினையும் ஒரு பிரெஞ்சு நிறுவனமே ஆரம்பிக்க இருந்தது. மேற்கண்ட வர்த்தக நடவடிக்கைகள் யாவற்றையும் துருக்கி அரசு இரத்துச் செய்துள்ளது. அத்துடன் கடந்த மாத இறுதியில் தனது தூதுவரையும் திருப்பி அழைத்துக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பிராந்தியத்தின் ப்ரதான சக்தியாகவும் மேற்குலகின் முக்கிய உறவு நாடாகவும் விளங்கிவரும் துருக்கி, அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவில் ஆர்மேனிய இனப் படுகொலை விவாதங்களை தாமதப்படுத்தும் முயற்சிகளில் வெற்றி பெற்றுள்ளது. ஆனால், பிரான்ஸ் அதனை ஏற்றுக்கொண்டதை தடுத்து நிறுத்த துருக்கியினால் முடியவில்லை. மேற்படி பிரெஞ்சு அரசின் முடிவுகளை அடுத்து, ஆர்மேனிய விமானங்கள் துருக்கியின் வான் பரப்பிற்குள் நுழைவதையும் துருக்கி தடை செய்துள்ளது.

# சவுதி குண்டுவெடிப்பு! குற்றவாளிகளுக்கு மரண தண்டனை?

(05.02.2001)

சவுதி அரேபிய தலைநகர் ரியாத்தில் அண்மையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்குக் காரணமான மூன்று மேற்கு நாட்டவர்கள் மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ளார்கள் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த நவம்பர் மாதம் 17ம் திகதி ஒரு பிரித்தானியரும் அவரது மனைவியும் சென்று கொண்டிருந்த வாகனத்தின் மீது குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டது. அதில் பிரித்தானியரான கிறிஸ்தோபர் ரோட்வே மரணமானார். அவரது மனைவி மற்றும் பொதுமக்கள் சிலர் காயமடைந்தனர். மேற்படி சம்பவத்துக்கு காரணமானவர்கள் என ஒரு பிரித்தானியர், கனடியர், பெல்ஜியப் பிரஜை என மூவர் கைது செய்யப்பட்டனர். பிரித்தானியரும், பெல்ஜியப் பிரஜையும் சவுதி இராணுவ மருத்துவமனையில் கடமையாற்றும் அதே வேளை, கனடியர் சவுதியின் தொழில்துறை அபிவிருத்தி அமைப்பில் கடமையாற்றுகிறார். இவர்கள் மீதான விசாரணையின் போது தனக்கு ரியாத்தில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற உத்தரவு வழங்கப்பட்டது என்றும் இத் தாக்குதலுக்கு கனடியர், பெல்ஜியப்பிரஜை போன்றோர் உதவி புரிந்தார்கள் என்று பிரித்தானியர் கூறியுள்ளார். தாம் எவ்வாறு தாக்குதல் திட்டங்களை மேற்கொண்டனர் என்பதைத் தெளிவு படுத்தியவர்கள் யார் இதனை மேற்கொள்ள உத்தரவிட்டனர் என்பதை தெரிவிக்கவில்லை.

சவுதியின் உள்துறை அமைச்சர் இளவரசர் நயாப் மேற்கண்ட மூவர்மீதும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும், சவுதியின் ஷரியா சட்டத்தின்படி இவர்கள் கடுமையான தண்டனைகளை அடையக்கூடிய சாத்தியக்கூறுகளே அதிகம் என்று கூறியுள்ளார். ஷரியா சட்டம், கொலை, பாலியல்வன்முறை, ஆட்கடத்தல் போன்ற குற்றங்களுக்கு மரண தண்டனை. அதுவும் பொது இடத்தில் சிரச்சேதம் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கூறுகின்றது. இவர்கள் மீதான தீர்ப்பு வழங்கப்படுமிடத்து தண்டனைகளை குறைக்கும்படி சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சவுதி அரசை கோரியுள்ளன.

# மிலோசோவிச் ஒப்படைப்புக்கு யுகோ மீது காலக்கெடு!

(04.02.2001)

யுகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் ஸ்லோபோடோன் மிலோசோவிச் நெதர்லாந்தில் உள்ள போர்க்குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட வேண்டும் என்றும் அதற்கான காலக்கெடு மார்ச் 31 என்று தீர்மானித்து, அந்த முடிவு சேர்வியாவின் புதிய பிரதமர் சோரான் ட்ஜின்ஜிக்கினிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டு இராஜாங்க செயலர் கொலின் பவல் மற்றும் உயர் அரச தலைவர்களைச் சந்தித்துத் திரும்பிய சேர்பிய பிரதமர், பெல்கிரேட்டில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, அமெரிக்கா முன்னாள் அதிபர் மிலோசோவிச் விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அது மறுக்கப்படும் நிலையில் யுகோஸ்லாவியாவிற்



மிலோசோவிச்

கான நிதி உதவிகள் தடைக்குள்ளாகும் என்றும் கூறியுள்ளது என்று கூறியுள்ளார்.

அமெரிக்காவின் காங்கிரஸ் அண்மையில் மேற்கொண்ட முடிவொன்றினை அடிப்படையாகக் கொண்டே இக்காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க காங்கிரஸ் மிலோசோவிச், நெதர்லாந்துக்கு நாடுகடத்தப்பட வேண்டும் என்பதை முதலில் கூறியபோதிலும், அங்குள்ள தனிப்பட்ட சில தனி நபர்களின் விருப்புக்கிணங்கவே நாடுகடத்தல் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் சேர்பிய அதிபர் கூறியுள்ளார்.

# செச்சினிய பயணக் கைதிகளை ரஷ்யப் படைகள் மீட்டனர்

(04.01.2001)

செச்சினியாவில் கடந்த மாதம் கடத்தப்பட்ட மனிதாபிமான செயற்பாட்டாளர் ஒருவரை ரஷ்யப் படையினர் தாக்குதல் ஒன்றின் மூலம் மீட்டுள்ளனர். பிரான்சை தலைமையகமாகக்கொண்டு இயங்கும் MSF என அழைக்கப்படும் எல்லைகளற்ற மருத்துவர்களின் அமைப்பின் செயற்பாட்டாளரான அமெரிக்கரான செனி குளொக், கடந்த மாதம் ஒன்பதாம் திகதி செச்சினிய தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். தலைநகர் குரோஸ்னிக்குத் தெற்காக விநியோக பணிகளுக்காக வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது இனம்தெரியாத முகமூடி அணிந்த நபர்களால் கடத்தப்பட்டார். பின்னர் இவரது விடுதலைக்கு பணயப் பணம் வழங்கப்பட வேண்டும் என பெயர் குறிப்பிடாத அமைப்பினர் அறிவித்தனர். இந்த நிலையில் இவரது கடத்தல் செச்சினியாவின் மீதான உதவிகள் நிறுத்தப்படும் அச்சுறுத்தலை ஏற்படுத்தின. ஐநா. மனித உதவி அமைப்புக்கள், மற்றும் சர்வதேச அமைப்புக்கள் போன்றன செச்சினியாவுக்கான உதவிகளை நிறுத்தப் போவதாக அறிவித்தன.

இந்நிலையில் ரஷ்ய உளவுப் பிரிவான FSB யின் விசேட அணியினர், சனியன்று இரவு நடத்திய திடீர் நடவடிக்கையொன்றின் மூலம் செனிகுளொக் மீட்கப்பட்டார். தற்போது இராணுவப் பாதுகாப்பில் உள்ள அவர், விரைவில் அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கப்படுவார் என்று ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர். 1996ம் ஆண்டு முதல் பத்திரிகையாளர், சர்வதேச உதவி அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள், என பல நூறுபேர்கள் செச்சினிய தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமாதான முயற்சிகளில் முக்கிய பங்கேற்க பெரஸ் தயார்

(05.02.2001)

இஸ்ரேலிய முன்னாள் பிரதமரும் சமாதானத்துக்காக நோபல் பரிசினைப் பெற்றுக்கொண்டவருமான சிமோன் பெரஸ் இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்குமிடையே சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்கையில் அதில் முக்கிய பங்கினை வகிக்க தாம் தயார் என்றும், ஆனால் மீண்டும் பிரதமர் பதவியை தாம் எதிர்பார்க்கவில்லை என்றும் கூறியுள்ளார். தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஆறாம் திகதி இடம்பெறவுள்ள தேர்தலில் வலதுசாரி, ஆரியல் சரோன் முன்னணியில் நிற்கின்றார்.

தற்போதைய பிரதமர் எகுட் பராக், ஆரியல் சரோனைவிட கருத்துக்கணிப்பில் 17 முதல் 20 விகிதம் வரை பின்னணியில் நிற்கின்றார். எகுட்பராக்கின் வெற்றி வாய்ப்புக்கள் குறைந்துள்ள நிலையில் அவருக்குப் பதிலாக பெரஸ் நிற்கத் தயாரா என்று கேட்கப்பட்டதற்கு ஆம்



சிமோன் பெரஸ்

என்று கூறியவர், தாம் பதவியை எதிர்பார்க்கவில்லை என்றும் கூறினார். பதவிகளும் பொறுப்புக்களும் எனக்கு அலுத்துப்போய்விட்டது. இப்போது பதவிகள் எதுவும் இல்லாமல் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவே விரும்புகிறேன் என்றும் அவர் கூறினார். இப்போது இரு தரப்பினரும் ஆத்திரத்துடன் இருக்கின்றார்கள். இருபக்க கோபத்தையும் தணிக்க வேண்டும். அதனை என்னால் செய்ய முடியும் என்று நம்புகின்றேன் என்றும் அவர் தனது பேட்டியில் உறுதி கூறினார்.

## பூமி அதிர்வின் ஒரு பார்வை

கடந்த 12 வருடங்களில் இந்தப் பூமி 24 தடவைகள் அதிர்ந்துவிட்டது. இது இடம்பெற்ற இடங்களும் இழப்புகளும் இங்கே பதிவாகின்றன.

| காலம் | இடம்பெற்ற பகுதி | உயிரிழப்புகள் | காயங்கள் |
|---|---|---|---|
| 1. 07.12.1988 | ஆர்மேனியா | 25,000 | |
| 2. 21.06.1990 | வடமேற்கு ஈரான் | 40,000 | |
| 3. 16.07.1990 | லுசோன் - பிலப்பைன்ஸ் | 2,600 | 3441 |
| 4. 01.02.1991 | ஆப்கான் - பாகிஸ்தான் | 1,500 | |
| 5. 20.10.1991 | இமாலய பிரதேசம் இந்தியா | 1,500 | 3000 |
| 6. 13.03.1992 | கிழக்கு துருக்கி | 653 | |
| 7. 12.10.1992 | கைரோ எகிப்த் | 552 | |
| 8. 12.12.1992 | இந்தோனேசியா | +2,000 | |
| 9. 30.09.1993 | மகராஷ்டிர இந்தியா | 7,601 | |
| 10. 06.06.1994 | தென் கொலம்பியா | 1,100 | |
| 11. 17.01.1995 | ஜப்பான் | 6,424 | |
| 12. 27.05.1995 | ரஷ்யா | 1,841 | |
| 13. 28.02.1997 | ஈரான் | 965 | 2600 |
| 14. 10.05.1997 | கிழக்கு ஈரான் | 1,613 | 3712 |
| 15. 04.02.1998 | வடகிழக்கு ஆப்கான் | +2,300 | |
| 16. 30.05.1998 | வடகிழக்கு ஆப்கான் | 5000 | |
| 17. 17.07.1998 | புதிய கினியா | 2,123 | |
| 18. 25.01.1999 | மத்தியமேற்கு கொலம்பியா | + 1,230 | 5,300 |
| 19. 17.08.1999 | வடமேற்கு துருக்கி | +20,000 | 24,941 |
| 20. 07.09.1999 | வடக்கு கிரேக்கம் | 138 | |
| 21. 21.09.1999 | தாய்வான் | +2400 | 11,000 |
| 22. 12.11.1999 | துருக்கி | 894 | 4,948 |
| 23. 13.01.2001 | எல் சல்வடோர் | 724 | 4,421 |
| 24. 26.01.2001 | குஜராத் இந்தியா | +20,000 | +50,000 |

ஆறே மாதங்களில் கணினியை சரளமாக கையாள
Senith Computer Institute
★ சுவிற்சர்லாந்தில் கணினி கல்விநிலையமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
★ கணினி அறிமுக வகுப்புக்கள் கட்டணமின்றி அமர்வுகளுடன் ஆரம்பமாகி 8 மாதகாலம் தொடர்ந்து நடைபெறும்.
★ மத்தியதர, உயர்தர [9–16 வயது] வகுப்புக்கள்
தொடர்புகளுக்கு: Senith Computer Institute
Militar str-84, 8004 Zurich.
Tel: 01/242 73 60 Fax: 01/242 73 58
e-mail:senith@bluewin.ch

Book a Flight
கொழும்பு, சென்னை சென்றுவர இந்திய விசா வசதிகளுடன் மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்!
மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்
Tel: 031 318 44 60
Natel 079 622 46 61
Fax: 031 318 44 61
Eamil: info@sivatravel.ch
Siva Travel
Worldwide Travel Service
பிரயாண காப்புறுதி! தமிழ் நாட்டு சுற்றுலா ஒழுங்குகள், மற்றும் விசா ஒழுங்குகளும் செய்து தரப்படும்
SIVA TRAVEL AND FINANCE (PVT) LTD
Spitalgasse- Passage 16,
3011 BERN
Pub

# ttn
தமிழ் ஒளி

தமிழர் திருநாளில் உதயமான
ஒரு இனிய வரலாறு

இது நமது என்று சொல்ல
இப்போது ஒரு
தொலைக்காட்சியும்

தமிழ் ஒளி
தரணியெங்கும் வாழும் தமிழர்களின் பிம்பம்

HOTBIRD 13° EAST
Frequency: 12245 Mhz, Polarization: Horizontal



ஊர்ப் புதினம் தவறாமல் சுமந்துவரும்
உண்மைகளைச் சிறைமீட்டுக் கொண்டுவரும்

அகிலத்துச் செய்திகளை விரைந்து தரும்
அறிவியலும், இலக்கியமும் கற்றுத்தரும்

சிந்தனையைத் தூண்டுகின்ற வாதம் தரும்
சினிமாவை தரம்பிரித்து விருந்து தரும்

நல்லதமிழ் குழந்தைகட்கு சொல்லித்தரும்
நாவூறச் சமைக்கும் விதம் காட்டித் தரும்

விதம் விதமாய் அனைவருக்கும் நிகழ்ச்சி தரும்
வீட்டுக்கு இது வேண்டும் என்ற எண்ணம் தரும்

TAMIL TELEVISION NETWORK
5-7 Rue Emile Zola, 93120 La Corneuve
Tel: 01 48 39 34 29 Fax: 01 48 39 31 36




பிரதி திங்கள் புதன் வெள்ளி மாலை 7.30 மணிக்கு

பிரதி சனி ஞாயிறு மாலை 7.30 மணிக்கு




செவ்வாய், வியாழன் இரவு 10.30 மணிக்கு

திங்கள் முதல் வெள்ளி மாலை 6.30 மணி

பிரதி செவ்வாய் வியாழன் மாலை 7.30 மணிக்கு

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.00 மணிக்கு

மருத்துவ ஆலோசனை




திங்கள் முதல் வெள்ளி

வாரம் ஒரு கதை

**GERMANY**
**LEEMA**
மக்கள் களஞ்சியம்
MARIENKIRCH PLATZ 05, 41460 NEUSS
Tel. 02 131 54 6311 / Fax: 02 131 54 6312

**FRANCE**
**TTN**
5-7 Rue Emile Zola, 93120 La Courneuve
Tel: 01 48 39 34 29 / Fax: 01 48 39 31 36

**LUNE INFORMATIQUE**
5, Rue Perdonnet, 75010 Paris
Tel. & Fax: 01 53 26 76 70

**U.K.**
**TTN**
JANANI CREATIONS LTD.
South Bank House
Room No 445, Black Prince Road,
London SE1 7SJ

**SWITZERLAND**
**NEW MILLENNIUM COMPUTER & ELECTRONIC**
Telistr. 31, 8004 ZURICH
Tel. 00 41 1 240 25 08 / 00 41 79 28 77 369
Fax: 00 41 1 240 30 85

**NORWAY**
**THAINILAM KALAIYAGAM**
POST BOKS 6678, RODELOKKA
0502 OSLO
Tel: 99003154 (Kumar)

**DENMARK**
**Mrs. SHANTHY**
GRUNDTVIG VEG 681 TH, 7400 HERNING
Tel. & Fax: 097 21 46 85 / Mobile: 022 45 72 19

**HOLLAND**
**SUNRISE IMPORT & EXPORT**
ZOUTMANSTRAAT 23, 2518 GL DEN HAAG
Tel. 062 915 1259 (NADES) / Fax: 070 35 10 19

**ITALY**
**PEOPLE SHOP**
KURUNATHAN GENGATHARAN
VIA DABTE 218, 90141 PALERMO
Tel. & Fax: 00 39 091 6824056

# ஐந்து வருடங்களுக்கு முந்திய தப்புக்கணக்கில் மீண்டும் சிறீலங்கா அரசு

மட்டக்களப்பிலிருந்து நடேசன்

சமாதானத்திற்காக யுத்தம் செய்வதாக சர்வதேச சமூகத்தின் முன் வாக்கு மூலம் அளித்து விடுதலைப் புலிகளை சமாதானத்தின் விரோதிகளாக சித்தரித்து வந்த சிறீலங்கா அரசு, ஒரு தலைப் பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பின் நீடிப்பை சற்றும் எதிர்பார்க்க வில்லை. எனினும் விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாக காய்களை நகர்த்திய நிலையை சமாளிக்கும் வகையில், அவர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் அல்ல, முன்னரும் யுத்த நிறுத்தம் என்று கூறி தம்மை பலப்படுத்தினார்கள் என சிறீலங்கா அரசு கூறுவது மட்டுமல்ல கினிஹிர இராணுவ நடவடிக்கையையும் ஆரம்பித்தது. எதிரி யுத்த நிறுத்தம் செய்யும் போது, இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு ஓரடி வைத்தால், சிங்கள மக்களுக்கு அதனை பெரும் வெற்றியாக பிரச்சாரம் செய்து வருகிறது. போர்ச் சூழலில் தந்திரோபாய ரீதியில் நிலத்தை பிடிப்பதும் பின்வாங்குவதும் போரியல் வரலாற்றில் புதுமையானதல்ல. சத்ஜெய மூலம் புலிகளிடமிருந்து கைப்பற்றிய கிளிநொச்சியை ஓயாத அலைகள் மூலம் புலிகள் கைப்பற்றினார்கள். மக்கள் இல்லாத மண்ணாக அப்போது இருந்த கிளிநொச்சியில் இன்று மக்கள் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோல ஓயாத அலைகள் மூலம் புலிகள் கைப்பற்றிய சாவகச்சேரியை மக்கள் இல்லாத மயான பூமியாக படையினர் மீண்டும் கைப்பற்றியுள்ளனர்.

எனவே படைத் தரப்பினர் மீண்டும் ஆனையிறவைக் கைப்பற்றினாலும் கூட அவர்களால் போரை முடிவுக்கு கொண்டு வரமுடியாது. கடந்த 24 வருட அனுபவங்களை கருத்தில் கொள்ளாது, வீராப்பு பேசும் சிறீலங்கா அரசு, இப்போது விடுதலைப் புலிகள் பலவீனமுற்றுள்ளனர், புதிதாக உறுப்பினர்கள் சேர்வதில்லை, இதனாலேயே யுத்த நிறுத்தத்தை பிரகடனம் செய்துள்ளனர் என்பதுடன், இராணுவ சமபலத்தில் நவீன ஆயுதங்கள், மதி நுட்பமான திட்டமிடல் மூலம் படையினர் கையே ஓங்கியுள்ளது என்ற கருத்தையும் தெரிவித்து வருகிறது. 1995ம் ஆண்டு இறுதியில், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது புலிகள் தந்திரோபாயமாக பின் வாங்கிய போதும், மன்னார் நெடுஞ்சாலை திறப்பிற்கான எடிபல நடவடிக்கையின் போதும் புலிகள் எதிர்த்தாக்குதலில் ஈடுபடவில்லை. இதனை புலிகள் மிகவும் பலவீனப்பட்டு போயிருப்பதாகவே சிறீலங்கா அரசு பிரச்சாரம் செய்தது. தப்புக்கணக்கின் அடிப்படையில் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து, ஆப்பிழுந்த குரங்கின் நிலையை அடைந்தது. சர்வதேச அழுத்தம் காரணமாக விடுதலைப் புலிகள் சமாதான நடை முறைகளுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளித்ததையும் ஐந்து வருடங்களுக்கு முந்திய தப்புக்கணக்கில் சிறீலங்கா அரசு கணக்கு பார்த்து வருகிறது. அரசின் இனவாத பிரச்சார பீரங்கியென வர்ணிக்கப்படும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, படைத்துறை தளபதி லெப் ஜெனரல் பலகல்ல வரை புலிகளின் சமாதான முயற்சியை மேற்கண்டவாறே விமர்சித்து வருகின்றார்கள்.



சந்திரிகா

இவர்களின் கருத்துக்கு ஒத்துப்போகும் வகையிலேயே சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா, அரச தொலைக்காட்சியின் 'ஜன மண்டலி' நிகழ்ச்சியில் கடந்த வாரம் உரையாற்றும் போது கருத்து தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பு பாரிய பின்னடைவே எதிர்நோக்கியிருப்பதாகவும், ஐம்பது சதவீத உறுப்பினர்களை இழந்திருப்பதுடன் சிலர் வெளியேறியும் உள்ளனர் எனவும், யுத்தத்தில் எதிர் நோக்கி வரும் பின்னடைவு காரணமாகவே இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ள சிறீலங்கா ஜனாதிபதி, அரசுக்கு சர்வதேச ரீதியில் பெருகி வரும் ஆதரவும் இதற்கு காரணமாக அமைந்திருக்கலாமென்றும் தெரிவித்துள்ளார். மேலும் பிரித்தானியா அரசு இந்தியா, அமெரிக்கா வரிசையில் பயங்கரவாத பட்டியலில் புலிகளை உள்ளடக்கி தடைசெய்தால் பாரிய நிதி நெருக்கடியை எதிர் நோக்கலாமென்பதாலுமே ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை பிரகடனம் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா, ஈழம் பற்றியோ பிரிவினை பற்றியோ பேசக் கூடாது. கடந்த காலங்கள் போல் இனப்பிரச்சினைக்கு அப்பாற்பட்ட விடயங்களைப்பற்றி பேசக் கூடாது, தமிழ் மக்களின் பிரச்சினை பற்றியே பேச வேண்டும், அரசின் நிபந்தனைகளுக்கு ஏற்பவே பேசவேண்டும் என்று தெரிவித்துள்ளதுடன், பேச்சு ஆரம்பம் முடிவு பற்றிய கால வரையறை பற்றியும் தீர்மானிக்கப்பட்ட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர்தின உரையில் தெரிவித்த 'நல்லெண்ண புறச் சூழல் பற்றி' ஒன்றுமே குறிப்பிடவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பு பாரிய பின்னடைவே எதிர்நோக்கியிருப்பதாகவும், ஐம்பது சதவீத உறுப்பினர்களை இழந்திருப்பதுடன் சிலர் வெளியேறியும் உள்ளனர் எனவும், யுத்தத்தில் எதிர் நோக்கி வரும் பின்னடைவு காரணமாகவே இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளனர் என்று சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா ஜனாதிபதி, பிரதமர், பௌத்த மகாசங்கங்கள் மற்றும் பேரினவாத சக்திகள் விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் சத்தியத்தை தர்மத்தை நியாயத்தை தெரிந்தும் தெரியாதவர்களாக கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள். உள்நாட்டு பிரச்சினையாகவுள்ள இனப்பிரச்சினையின் விளைவாக எழுந்த போரில், விடுதலை புலிகளை அடக்குவதற்கு யுத்த தளவாடங்கள் இராணுவ ஆலோசனைகள், பயிற்சிகளுக்கு சர்வதேச சமூகத்திடம் கையேந்துகின்றார்கள். கால் நூற்றாண்டுக்கும் மேலாக இராணுவ நெருக்குவாரங்களுக்குள் தமிழ் மக்கள் சிக்கி அழிந்து கொண்டிருப்பது கண்டு நோர்வே போன்ற மேற்கு நாடுகள் சமாதான வழியில் தீர்க்க முற்படும் போது, வெளிநாட்டு தலையீடு கூடாது. நோர்வே புலிகளின் கையாள் என்று பௌத்த மகா சங்கம் முதல் சிஹல உறுமய வரை கருத்து தெரிவிக்கின்றன. கடந்தவாரம் நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க் அவர்களைச் சந்தித்த பௌத்த பிக்குகள், 'தலையிடக் கூடாதென்று' நேரடியாக கூறியுள்ளனர். மனுக்குலத்தை இறைவன் பாதங்களில் சரணாகதியடையச் செய்யவேண்டிய பௌத்த துறவிகளுக்கு மதக்கடமைகள் புரிய நேரமில்லாது இனவாத அரசியல் சகதியில் குளித்து வருகிறார்கள்.

இந்நிலையில், சமாதான தீர்வுக்கான பந்தை சிறீலங்கா அரசுக்கு அடித்து களைத்துபோன விடுதலைப் புலிகள் இப்போது சர்வதேச சமூகத்திடம் அப்பந்தை அடித்துள்ளார்கள். இந்த நிலையில் பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தால் அடக்கப் போவதாக பிரதமரும் சூளுரைத்திருக்கிறார். சில நிபந்தனைகளுடன் பேசலாம். ஆனால் பேச்சு வார்த்தையில் ஏற்படும் நம்பிக்கைகளை பொறுத்தே போர் நிறுத்தம் என்று சந்திரிகா தெரிவித்திருக்கிறார். ஆக சிங்கள தேசம் இராணுவத் தீர்விலேயே இன்னமும் நம்பிக்கை கொண்டிருக்கிறது. ஆனால் அரசாங்கமென்ற போர்வையில் சிங்கள தேசம் சர்வதேச மட்டத்தில் மேற்கொண்டு வரும் பரப்புரைகளின் சாயம் வெளுத்து வருகிறது. எனினும் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு மேலும் வெகுஜன ரீதியான பலத்தை கொடுப்பதன் மூலம் தமிழர்கள் தரப்பின் தர்மத்தை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தும் பாரிய பொறுப்பு ஈழத் தமிழ் மக்களுக்கு உண்டு. சிங்கள சமூகம் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படும் நிலையில் தமிழ் சமூகம் சாத்வீக போராட்டத்தின் போது கொண்டிருந்த போர்க் குணத்தை மறந்து எல்லாம் புலிகள் பார்த்துக் கொள்வார்களென்று எண்ணி இருக்கிறார்கள். சர்வதேச சமூகம் இன்று காட்டி வரும் கரிசனையை தக்கவாறு பயன்படுத்த வேண்டும்.



போர் மூலம்தான் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
(மக்கள் கடை அருகில்)
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
அனைத்து அச்சு வேலைகளும் குறித்த நவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
திங்கள் முதல் - சனி வரை 09.00 - 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris _ Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

# நில இழப்பும் அரசியல் வெற்றியும்

**கொழும்பிலிருந்து ரீ.தேவராஜ்**

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை போர்க்களத்தில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் போன்று அரசியல் களத்தில் வெற்றிகளைக் குவிக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் அண்மைக் காலமாக விடுதலைப் புலிகள் இத்துறையிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்று வருகின்றனர் என்பது மறுப்பதற்கில்லை. இத்தகைய அரசியல் வெற்றிகளுக்காகவும் சர்வதேச நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்காகவும் விடுதலைப் புலிகள் அரசியல் காய் நகர்த்தலை மேற்கொண்டு வருகின்றனர். புலிகளைப் பொறுத்து போர்க்களத்தில் போர் நிறுத்த காலத்தில் இழந்த பகுதிகளை மீளக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. இது கடந்தகால வரலாறு கற்றுத்தந்த பாடங்கள். ஆனால் சர்வதேச சமுகத்தை உதாசீனம் செய்தோ கணக்கில் எடுக்காமலோ தொடர்ந்து செயற்பட முடியாது. அதே வேளையில் கடந்த காலங்களைப் போலல்லாது தற்போது சர்வதேச சமூகம், தமிழர் குறித்தும், தமிழர்களின் போராட்டம் குறித்தும், உரிமை குறித்தும் அதிக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. இதன் காரணமாக சர்வதேச சமூகத்தின் இலங்கை குறித்த அணுகு முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த அணுகு முறையானது தமிழர்கள் பால் அவர்களது போராட்டத்திலுள்ள நியாயத்தை உணர்த்துவதாகவும் உள்ளது.

சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நிலையிலும் அதனை மேலும் வளர்த்தெடுக்க வேண்டிய நிலையிலும் தமிழ்ச் சமூகமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் உள்ளனர். இந்த ஒரு பின்னணியிலேயே விடுதலைப் புலிகள் தாம் வெற்றி கொண்ட பகுதிகளை அரச படையினரிடம் 'தாரைவார்த்து' வருகின்றனர். அத்துடன் உயிரிழப்புகளையும் சந்தித்தும் தாங்கிக் கொண்டும் உள்ளனர். இதுவரை காலமும் சர்வதேச ரீதியிலான அனுதாபம் ஆதரவு என்பன சிறீலங்கா அரசினை நோக்கியதாகவே இருந்துள்ளது. இந்தப் போக்கிலும் மாறுதல்கள் தென்படத் தொடங்கி விட்டன. இந்த மாறுதல்கள், சர்வதேச அழுத்தமாக சிறீலங்கா அரசின் மீது விழத்தொடங்கி விட்டது. எனவே சர்வதேச அழுத்தத்தை சிறீலங்கா அரசின் மீது மென்மேலும் திருப்பும் வகையிலான காய் நகர்த்தலிலும் விடுதலைப் புலிகள் ஈடுபட வேண்டிய நிலையில் உள்ளனர்.

விடுதலைப் புலிகளின் போராட்ட வடிவத்திற்கு வலு சேர்ப்பதாக, பல்கலைக்கழகச் சமூகத்தினதும் தமிழ்ச் சமூகத்தினதும் 'பொங்குதமிழ் நிகழ்வுகள்' அமைந்துள்ளன. உண்மையில் பொங்கு தமிழ் நிகழ்வு இலங்கையிலுள்ள தமிழர்களை மாத்திரமல்ல, உலகளாவிய ரீதியிலும் தமிழர்களை விழிப்படையச் செய்து, தட்டியெழுப்பியுள்ளது. சர்வதேச சமூகத்தினதும் தமிழ் மக்களினதும் எதிர்பார்ப்பு ஆதங்கங்களைக் கணக்கில் எடுப்பதாக சிறீலங்கா அரசு தன்னை இன்னும் பக்குவப்படுத்திக்கொள்ளவில்லை. அத்துடன் விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த நீடிப்பை நிராகரித்து நிற்பதுடன், அரசாங்கத்தரப்பும், படைத்தரப்பும் தொடர்ந்தும் யுத்த மொழியையே பேசி வருகின்றனர். யுத்தத்திற்கு நாடோ நாட்டின் பொருளாதாரமோ ஈடு கொடுக்கும் நிலையிலோ அல்லது தாங்கும் நிலையிலோ இல்லை என்பது தெரிந்தும், சிறீலங்கா அரசு போர்ச்சூழலுக்குள் இருந்து கீழிறங்கி வரமறுப்புத் தெரிவித்து வருகின்றது.




மட்டக்களப்பு மாணவர்களின் எழுச்சிப் போராட்டம்

ஆனால் கொழும்பில் நிலை கொண்டுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை ஏற்றுக் கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. புலிகளின் போர் நிறுத்த காலநீடிப்பை சிறீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளாதது தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் தருவதாக அமைவதுடன், விசனம் கொள்ளவும் வைத்துள்ளது. போர்நிறுத்த நீடிப்பை அரசாங்கம் நிராகரித்ததை அடுத்து கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுத்ததுடன், மாணவர்கள் ஏந்தவேண்டியது பேனையா? ஆயுதமா? அரசே முடிவு உன் கையில் என தீர்மானத்தை எடுக்குமாறு சிறீலங்கா அரசைக் கோரி நிற்கின்றனர். இத்தகைய கோரிக்கைகள் வியாபித்துத் தொடரும் என்பதில் ஐயமில்லை. இந்தக் கோரிக்கைகளையும், அழுத்தங்களையும் அரசு தொடர்ந்து உதாசீனம் செய்ய முடியாது.

உண்மையில் விலைவாசி உயர்வு, நிதி நெருக்கடி போன்ற விடயங்களால் உள்நாட்டில் எழுந்துள்ள எதிர்ப்பலைகளுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையிலேயே அரசு, யுத்த நிறுத்தம் குறித்து முடிவெடுக்காது தள்ளிப் போட்டுக் கொண்டு வருவதாகத் தெரிகின்றது. கடந்த மாதம் 26ம் திகதி வெள்ளிகிழமை ஜனாதிபதி சந்திரிகா தனது மாளிகையில் கூட்டிய மாநாட்டில், பொருட்களின் விலை உயர்வு குறித்துக் குரல் எழுப்புபவர்கள் நாட்டில் யுத்தம் ஒன்று நடைபெறுவதை மறந்த நிலையிலேயே பேசுகின்றனர். யுத்தத்துக்காக 3300 கோடி ரூபா மேலதிகமாகச் செலவிடப்படுவதனாலேயே பொருள்களின் விலை உயர்ந்துள்ளது என்று கூறியுள்ளார். அதாவது சமாதானம் பற்றிப்பேசும் போது யுத்தம் பற்றிப் பேசுகின்றார். விலைவாசி உயர்வைப் பற்றிப் பேசும் போது யுத்தத்தைக் காரணம் காட்டுகின்றார். இவ்வாறு யுத்தம் மூலம் சமாதானம் என்ற கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளையில், விலைவாசிக்காக யுத்தத்தைக் காரணம் காட்டுவது என்பது விசித்திரமாக இருக்கின்றது. ஆனால் துரதிர்ஸ்டவசமாக தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அரசியல் கட்சிகளும் மற்றும் சிவில் அமைப்புகளும் இன்றைய அரசின் தவறான போக்கினால் தத்தளித்துக் கொண்டிருக்கும் மக்களையோ நாட்டையோ காப்பாற்ற லாயக்கில்லாத நிலையில் உள்ளன. இத்தகைய ஒரு கையாலாகாத தன்மை, ஜனாதிபதி சந்திரிகா அரசு தொடர்ந்தும் கோலோச்ச வாய்ப்பையும் வசதிகளையும் வழங்குவதாக உள்ளது.

> உண்மையில் பொங்கு தமிழ் நிகழ்வு இலங்கையிலுள்ள தமிழர்களை மாத்திரமல்ல, உலகளாவிய ரீதியிலும் தமிழர்களை விழிப்படையச் செய்து, தட்டியெழுப்பியுள்ளது.

## கதிர்காமத்தில் பொ.ஐ.மு.வின் ஆள்திரட்டல் ஆரம்பம்!

*(04.02.01)*

இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையை சிறீலங்கா அரசு மீண்டும் ஆரம்பித்துள்ளது. கடந்த செவ்வாயன்று கதிர்காமத்தில் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்துள்ளார். இதன்போது உரையாற்றிய சிறீலங்காப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, நாட்டில் இடம் பெற்று வரும் போரில் வெற்றிபெறுவதற்கான திட்டத்தை றுகுணு மக்கள் கதிர்காமத்திலிருந்து ஆரம்பித்திருப்பது மகத்தான சாதனையாகும். சம்பளம், சலுகைகள் ஆகியவற்றுக்கு அடிமையாகாமல் பிரிவினைவாதிகளிடம் இருந்து எமது நாட்டைக் காப்பற்ற முன்வந்துள்ள இளைஞர்களைப் பாராட்ட வேண்டும். அவர்களின் தியாக சிந்தையை ஏனையவர்களும் முன்மாதிரியாகக் கொண்டு படையில் இணைய முன்வர வேண்டும். இதன் மூலம் விரைவில் இந்த நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கும் போரை முடிவுக்குக் கொண்டு வந்துவிடலாம் எனக் கூறியுள்ளார்.

படையில் ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையை சிறீலங்கா அரசும், இராணுவத் தலைமையகமும் ஆயிரக்கணக்கான தடவைகள் மேற்கொண்ட போதிலும் எதிர்பார்த்த அளவில் வெற்றிபெறவில்லை. அவ்வாறு இணைந்து கொண்டவர்களும் படையில் இருந்து தப்பியோடும் நிலையே கடந்த காலங்களில் அதிகமாகக் காணப்பட்டுள்ளது. இந் நிலையில் தற்போது கிராமம் கிராமமாகச் சென்று அங்கு ஆட்சேர்க்கும் நிலையங்களை அமைத்து படைக்கு ஆட்ச்சேர்க்கும் நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## கண்டியில் ஐ.தே.கவின் பாதயாத்திரை ஆரம்பம்!!

*(05.02.01)*

சிறீலங்காவின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினர் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றைக் கண்டித்து அரசுக்கு எதிராக பாத யாத்திரை ஒன்றை ஆரம்பித்துள்ளனர். கண்டி தலதா மாளிகையில் இருந்து நேற்று ஆரம்பமான இப் பாதையாத்திரை கொழும்பு வரை நடைபெறவுள்ளது. நேற்று ஆரம்பமான இப் பாதையாத்திரையில் சுமார் இருபதாயிரம் பேர்வரை கலந்துகொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதயாத்திரையில் பங்கு பற்றியோர் சிறீலங்கா அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பிச் சென்றனர். 'யுத்தத்தை உடனடியாக நிறுத்து! நாட்டை ஆள முடியாவிட்டால் பதவி விலகு' போன்ற கோசங்களை எழுப்பியவாறு சென்றனர். நேற்று பிற்பகல் 4 மணியளவில் மாவனல்லையை பாதயாத்திரை வந்தடைந்ததுடன் இடைநிறுத்தப்பட்டு, இன்று மீண்டும் அங்கிருந்து ஆரம்பமாகியது. அது இன்று மாலை கல்கமுவவை வந்தடைந்ததும் இடைநிறுத்தப்பட்டு, நாளை காலை மீண்டும் ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் இப்பாதயாத்திரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை 9ம் திகதி கொழும்பை வந்தடையும் எனவும் அன்று கொழும்பு நகர மண்டபத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டமும் கூட்டமும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இன்று இப் பாதையாத்திரை மாத்தளைப் பகுதியில் வந்து கொண்டிருந்தவேளை பாதையாத்திரையில் கலந்துகொண்டவர்கள் மீது இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதில் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து தெரியவரவில்லை.

முன்னாள் ஜனாதிபதியும் ஐ.தே.கட்சியின் தலைவருமான காலம்சென்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில், கொழும்பில் இருந்து கண்டிக்கு தமிழருக்கு எதிராக பாதயாத்திரை சென்றிருந்த அதே ஐ.தே.கட்சியினர், ஆட்சியிலுள்ள அரசிற்கு எதிராக கண்டியில் இருந்து கொழும்பிற்கு ரணில் தலைமையில் இன்று மீண்டும் பாதயாத்திரையை ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது

*(05.02.01)*

சிறீலங்காவின் உள்ளூராட்சித் தேர்தல் முறையை மறுசீரமைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதால் அதுவரை தேர்தல் நடத்தப்படமாட்டாது எனவும், அடுத்த வருடம்(2002) ஏப்ரல் மாதம் 13ம் திகதி தேர்தல் நடைபெறும் எனவும் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் நந்தமித்திர ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை, தேர்தல் நடத்தினால் பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வியைச் சந்திக்குமென்பதாலேயே தேர்தலைப் பின்போட தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

Palm Beach
RESTAURANT
10%OFF ALL TAKE AWAY ORDERS
P.Sivarupan
Proprietor
17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

# ஈழப்போர் சிறீலங்கா பொருளாதாரத்தில் நெருக்கடியை ஏற்படுத்துமா?

## - ஒரு வாதத்திற்கான சில தரவுகள் -

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## 95ல் ஒரு சதுரக் கிலோ மீற்றரை கைப்பற்ற இராணுவத்திற்கு ஆறு இலட்சம் செலவு! இன்று 4, 5 கோடி செலவு

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

பெருகிவரும் போர்ச் செலவீனம் இலங்கையின் பொருளாதாரத்தை விரைவில் அழித்துவிடும் எனவும், இல்லை, சரியான முறையில் பொருளாதாரத்தை நிருவகித்தால் எவ்வளவு காலத்துக்காயினும் போரைத் தொடரலாம் எனவும் இரு வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. இவ்விரண்டு கருத்துக்களுக்கும் ஆதரவாக பல ஆய்வாளர்கள் நீண்டகாலமாக எழுதியும், பேசியும் வந்துள்ளனர். முதலில் போர்ச்செலவை இலங்கைப் பொருளாதாரத்தால் ஒரு கட்டத்துக்கு அப்பால் தாக்குப்பிடிக்க முடியாது எனக் கூறுபவர்களுடைய கருத்துக்களைப் பார்ப்போம்.

சிறீலங்கா அரசின் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 25சத வீதத்திற்கு மேல் போருக்கான செலவு செல்லுமெனில், சிறீலங்கா அரசிற்கு பொருளாதாரத்தின் உட்கட்டுமானத்தை சீராக பேணமுடியாது. இங்கு உட்கட்டுமானம் எனும் பொழுது போக்குவரத்து வசதிகள், தொலைத்தொடர்பு, கல்வி என்பன கருதப்படுகின்றன. ஒரு பொருளாதாரம் இயங்குவதற்கு அதனுடைய உட்கட்டுமானத்தை பேணுவதும், விருத்தி செய்வதும் இன்றியமையாதது எனப் பொருளியல் வல்லுநர்கள் கூறுவர். இந்த வகையில் சிறீலங்காவில் போர்ச்செலவு காரணமாக அதனுடைய பொருளாதாரம் இயங்குவதற்கான உட்கட்டுமானம் படிப்படியாக சிதைவடைந்து வருவதாகவும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அங்கு முதலிடுவதற்கு எதிர்பார்க்கும் புதிய உட்கட்டுமான வசதிகளை (பெரும் சாலைகள், களஞ்சியங்கள், இறங்குதுறைகள் என்பன...) செய்ய முடியாது இருப்பதாகவும், இதன் காரணமாக வேலைவாய்ப்புகள், புதிய தொழில்கள் என்பன இல்லாதுபோய் மக்களிடையில் அரசியல் அதிருப்தி ஏற்பட்டு, கிளர்ச்சிகளால் பொருளாதாரம் கவிழும் நிலை தோன்றும் என்பது ஒரு சாராருடைய வாதம். இதுவே தற்பொழுது நடைபெற்று வருகின்றது என அவர்கள் கூறுவர்.

கடந்த வாரம் செய்யப்பட்ட ரூபாய் மதிப்பிறக்கம், அதையொட்டி மக்கள் விடுதலை முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் சிங்கள மக்களிடையில் ஏற்படுத்திவரும் கிளர்ச்சிகள் நிலைமையை இன்னும் நெருக்கடிக்குள்ளாக்க வாய்ப்புண்டு. குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணி, 1971ம் ஆண்டிலும் 1988 இலும் பெரும் வன்முறையாக வெடித்த ஆயுதக் கிளர்ச்சிகளை நடத்திய ஒரு இயக்கம். மாக்சியக் கோட்பாடுகளின் அடிப்படையில் இலங்கையில் முதலாளித்துவத்திற்கு எதிரான ஒரு சோசலிச மக்கள் ஆட்சியை நிறுவுவதே அதனுடைய உறுதியான குறிக்கோள். அதிகரித்துவரும் விலைவாசிகளும் வேலையில்லாத் திண்டாட்டமும் இப் பிரச்சினைகளை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முடியாத ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய பலவீனங்களும் கட்டுக்கோப்பான இயக்க அமைப்பைக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணிக்கு மிகவும் வாய்ப்பாக இன்று அமைந்துள்ளன. வருடாவருடம் ஆயிரக்கணக்கில் அதிகரித் துவரும் ம.வி.மு.வின் முழுநேர உறுப்பினர் தொகையே இதற்கு அத்தாட்சி. தலைநகரின் முக்கியமான தொழிற்துறைகளிலும் கட்டுநாயக்கா, பியகம ஆகிய இடங்களிலுள்ள சுதந்திர வர்த்தக வலயங்களிலும் ம.வி.மு.வின் புரட்சிகர தொழிற்சங்கங்களே இன்று பலம் பெற்றுள்ளன. சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழிற்சங்க நடவடிக்கை எதுவும் எடுக்கமுடியாது என்ற அரசின் சட்டத்தையும் மீறி ம.வி.மு.வின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இது மட்டுமல்லாது கொழும்பு மற்றும் காலித் துறைமுகங்களிலும் ம.வி.மு.வின் தொழிற்சங்கமே இன்று பலம் பெற்றுள்ளது. இதனுடைய ஒட்டுமொத்த விளைவு, வெளிநாட்டு முதலீட்டாளர்களை 'மூட்டை கட்ட' வைத்துவிடும். புதிய முதலீடுகள் வருவதும் முற்றாக தடைப்பட்டுவிடும். சிறீலங்காவின் பங்குச் சந்தை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவது முதலீட்டாளர்களின் தொடர்ந்த வெளியேற்றத்தையே காட்டுகின்றது. இதுமட்டுமன்றி பெருகிவரும் ம.வி.மு.வின் அரசியல் வலு உள்நாட்டு முதலீட்டாளர்களையும் பெரும் வர்த்தக 'நிறுவனங்களையும் அச்சம் கொள்ள வைத்திருக்கின்றது. எனவே இவர்களும் தமது முதலீடுகளை கணிசமாக மேற்குநாடுகளுக்கு மாற்றுவதிலும் தமது உள்ளூர்த் தொழிற்பாடுகளை சுருக்கிக் கொள்வதிலும் குறியாக இருக்கிறார்கள். எனவே ரூபாய் நாணய மதிப்பிறக்கம் எதிர்பார்த்த பலனை அளிக்காது எனவும் ஈழப்போர், இறுதியில் சிறீலங்காப் பொருளாதாரத்தை சமாளிக்க முடியாத அளவிற்கு வீழ்ச்சியடையவைத்துவிடும் என்று வாதிடுபவர்கள் கூறுகின்றனர்.

ரூபாய் நாணயம் மதிப்பிறக்கப்பட்டால் சிறீலங்காவில் ஏற்றுமதிக்காக உற்பத்தியாகும் பொருட்களின் விலை வெளிநாடுகளில் வெகுவாகக் குறையுமெனவும், இதனால் அவற்றிற்கு வெளிநாடுகளில் கேள்வியதிகரிக்கும் எனவும், இது சிறீலங்காவினுடைய ஏற்றுமதிப் பொருளாதாரத்தை விரிவாக்கவும் பலப்படுத்தவும் ஒரு நேரடி ஊக்கியாக அமையுமென்பதும் சந்திரிகா அரசின் நிலைப்பாடு. எனவே ஏற்றுமதிப் பொருளாதாரம் வளர்ச்சியடைய சிறீலங்காவினுடைய அந்நியச்செலவாணி இருப்புகள் பெருமளவு அதிகரிக்கும். இது தற்போது பெருமளவு போர்த்தளவாடங்களையும் எரிபொருளையும் கடந்த வருடம் வாங்கிக் குவிக்கவேண்டி ஏற்பட்டதால், வீழ்ச்சியடைந்துள்ள தனது அந்நியச் செலவாணி இருப்புகளை மீண்டும் அதிகரிக்க உதவுமெனவும், இதன் மூலம் மீண்டும் ஒரு பொருளாதார சமநிலையை ஏற்படுத்திவிடும் எனவும் சிறீலங்கா அரசு கூறுகின்றது. வலுவான ஒரு உற்பத்தி அடித்தளத்தைக் கொண்ட பொருளாதாரத்திற்கே இந்த உத்தி செல்லுபடியாகும். ஆனால் சிறீலங்காவின் ஆடை உற்பத்தி 'மட்டுமே' இலங்கையில் ஓரளவு ஏற்றுமதித் துறைக்கென வளர்ச்சியடைந்த தொழிலாகவுள்ளது. அத்துடன் மேற்படி மக்கள் விடுதலை முன்னணியின் அச்சுறுத்தல் காரணமாக, ரூபாய் மதிப்பிறக்கத்தை பயன்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் புதிய ஏற்றுமதித் தொழில்களை தொடங்க முன்வரமாட்டார்கள் என எதிர்த்தரப்பினர் மறுக்கின்றனர்.

அத்துடன் ரூபாய் மதிப்பிறக்கம், அரசு கூறுவது போல் விவசாயத்துறைக்கு ஒரு ஊக்கியாக அமையாது என்பது அவர்களுடைய நிலைப்பாடு. ரூபாய் மதிப்பிறக்கம் காரணமாக வெளிநாடுகளிலிருந்து தற்பொழுது பெருமளவில் இறக்குமதியாகும் உணவுப் பொருட்கள் இலாபகரமற்றவையாகிவிடும். இதனால் உள்நாட்டு விவசாய உற்பத்திகளுக்கு கேள்வியதிகரிக்கும். இது உள்ளூர் விவசாய வளர்ச்சிக்கு வழிசமைக்கும். ஆகவே கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளும் பணப்புழக்கமும் அதிகரிக்கும் என சிறீலங்கா மத்திய வங்கிப் பொருளியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் சிறீலங்காவில் விவசாயத்திற்கு தேவையான முக்கிய உள்ளீடுகளான கிருமிநாசினிகள், உரவகைகள், உழவு இயந்திரங்கள், எரிபொருள் என்பன வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதியாவதால் ரூபாய் மதிப்பிறக்கம் அவற்றின் விலைகளை கடுமையாக ஏற்றிவிடும். அதனால் உள்ளூர் விவசாயிகள் அனேகமாக தொழிலில் ஈடுபடுவதை குறைத்துக் கொள்வதற்கும், நிறுத்திக் கொள்வதற்குமே வாய்ப்பதிகமுண்டு என்பது எதிர்க்கருத்தாளரின் கூற்றாகும்.

இதேவேளை இவ்வாண்டு, வடக்கில் போரை ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து போர்ச் செலவீனத்தை வரவு செலவுத்திட்டத்தின் 15 சதவீதமாகவாவது குறைத்துவிடலாம் எனவும், அதன் மூலம் மீண்டும் பொருளாதாரச் சமநிலையை சமாளிக்கக்கூடிய அளவிற்கு சீர்படுத்தி விடலாம். இதற்கு நோர்வே மூலம் நடைபெறக்கூடிய அமைதிப் பேச்சுவார்த்தைகள் அடித்தளமாக அமையுமென சிறீலங்கா அரசின் பொருளாதாரத் திட்டமிடலாளர்கள் சிலர் இவ்வாரம் கருத்து வெளியிட்டுள்ளனர். ஒருபுறத்தில் போர் நிறுத்தத்திற்கு உடன்படவே மாட்டோம் என அறுதியிட்டுக்கூறி படையினரை உசாராக வைத்துக்கொண்டு, இன்னொரு புறம் பேச்சுவார்த்தை மூலம் ஒரு அமைதிச் சூழலை ஏற்படுத்தினால் பொருளாதாரத்தை குறுகிய காலத்தில் வலுப்படுத்தி விடலாம். அதேவேளை இறுதியில் பேச்சுவார்த்தைகள் பிழைத்தாலும், போரை 'மீண்டும் மேலதிக படை வலுவுடன்' கொண்டு நடத்துவதற்கு தேவையான, ஒரு பலமான பொருளாதாரத்தை உருவாக்கி விடலாம் எனவும் சிறீலங்கா அரசினுடைய உள்நோக்கம் அமைந்திருப்பதை மேற்படி பொருளாதாரத் திட்டமிடலாளர்களின் கூற்றுகளை வகுத்துத் தொகுத்துப் பார்க்கும் பொழுது ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. ஆனால் எதிர்க்கருத்தாளர்கள் ஈழப்போரின் ஒவ்வொரு கட்டத்திலும் வடக்கில் ஒரு சதுரக்கிலோமீற்றரை கைப்பற்றுவதற்கான செலவு 100—200 மடங்கு என ஏறிச் செல்வதையே சுட்டுகின்றனர்.

அதாவது 1995ம் ஆண்டு சூரியக்கதிர் நடவடிக்கை தொடங்கியபோது படையினருக்கு குடாநாட்டில் ஒரு சதுரக் கிலோ மீற்றர் நிலத்தை கைப்பற்ற 6 இலட்சமளவில் செலவிட வேண்டியிருந்ததாகவும் தற்பொழுது தென்மராட்சியில் நடைபெறும் சண்டைகளில் அதேயளவு நிலத்தை கைப்பற்ற ஏறத்தாழ 4-5 கோடிவரை குறைந்த பட்சம் செலவிட வேண்டியுள்ளதாகவும் சில போரியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இங்கு இரு தரப்புக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றையும் இவை சம்பந்தப்பட்ட வேறு கருத்துக்களையும் தகவல்களையும் தேடினால் இன்னும் தெளிவான பல விடங்கள் உங்களுக்கு கிடைக்கலாம்.

*(பிரபல இராணுவ ஆய்வாளர் டி.சிவராம்)*

**உங்கள் ஜாதக குறிப்புக்கள் கைவசம் இல்லையா? கவலையை விடுங்கள்**

கம்பியூட்டரின் உதவியுடன் நாங்கள் அவற்றைக் கணித்துத் தருகிறோம்.
உங்கள் பிறந்த திகதி, பிறந்த நேரம், பிறந்த இடம் இவை மட்டும் இருந்தால் போதுமானது.
பிறந்த நேரம் தெரியாதவர்களுக்கு நியூமராலஜி மூலம் எதிர்காலப் பலன்கள் கணித்துத் தரப்படும்.
உங்கள் குழந்தைகளின் ஜாதகக்குறிப்புக்கள், ஜாதகபலன்களை கணித்துக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கெள்ள வேண்டிய முகவரி

**Pega Star -Co Verleger**
**Mr. A. Thevaraj**
**Hasenberg str. 47**
**70176 Stuttgart/ Germany**
**Tel: 0049 + 711 - 6157028**
**Fax: 0049 + 711-6157030**
**E-Mail: theva@t-online.de**

ஜாதகக்குறிப்பு + ஜாதகப்பலன்கள் (15 பக்கங்கள்) கணித்துத் தருவதற்கு தபால் செலவு உட்பட தொகை 56 DM, 50 Swiss FR, 40 Ca $ மட்டுமே!
படிவத்தை நிரப்பி அனுப்பவும்

*Fullname:* ..............................
*Date of Birth:*.............. *Time of Birth:*..............
*Place of Birth:* ..............................
*Address:*..............................
..............................
*City/ Date:*.............. ______________
*Signature*

Name: A. Thevaraj
Bank: Deutsche Bank Stuttgart
Konto Nr: 962056800 BLZ 60070024
Name: Antonippillai Thevaraj

Pub.Gr

# கோழி இறைச்சி விற்றவர் சிறையில்!

ஆபிரிக்காவில் உள்ள கானா நாட்டில் குமாசி என்ற நகரில் வசித்து வந்த இளைஞரின் தொழில், கோழிகளை உரித்து உணவகங்களுக்கும், உணவு விடுதிகளுக்கும் விற்று வருவதுதான். குவா பெனாமனு என்றழைக்கப்படும் அந்த இளைஞரிடம்; பல உணவகங்களும், விடுதிகளும் கோழி இறைச்சியை வழமையாக பெற்று வந்தன. ஆனால் சில வேளைகளில் அவர் கொடுக்கின்ற இறைச்சி- வழமையான கோழி இறைச்சியின் ருசிகளைக் கொண்டிருக்கவில்லை. சந்தேகம் கொண்ட உரிமையாளர்கள் அந் நபரை கண்காணித்த போதுதான் கோழி என்று கூறி அவர் விற்று வந்த இறைச்சி என்ன என்று கண்டுபிடித்துள்ளனர்.

கழுகுகளைப் பிடித்து அவற்றை உரித்து கோழி இறைச்சிகளுடன் விற்றுவந்துள்ளார். இவர் மீது தொடுக்கப்பட்ட வழக்கு, நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டதால் தற்போது ஆறுமாதச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட வேண்டிய பறவைகளின் பட்டியலில் உள்ள கழுகை கொன்றதற்காகவே இத் தண்டனையை வழங்கியுள்ளதாக நீதிமன்றம் கூறியுள்ளது.

## பலதும் பத்தும்



மனிதர்கள் மட்டும்தான் முதுகில் ஏறி சவாரி செய்வதா? நாம் அவர்களின் மூதாதையர்கள் ஏன் நாம் அவ்வாறு பயணம் செய்யக்கூடாதோ என்று குட்டி கேட்டதாலோ என்னவோ; மனிதர்கள் நடமாடும் வீதியில் 'ஜாலி' யான பயணம்.

# 110 இலும் ஆசை வரும்!

சவுதி அரேபியாவில் 110 வயது இளைஞனுக்கு மீண்டும் அந்த ஆசை வந்துள்ளது. அப்துல்லா என்ற இந்த தாத்தாவின் ஆசையை வைத்தியரிடம் எடுத்துக்கூறியபோது, இவரைப் பரிசோதித்த வைத்தியர் தாம்பத்தியத்தில் ஈடுபடக்கூடிய ஆரோக்கியத்துடன் இருக்கின்றார் என சான்றிதழும் வழங்கிவிட்டார்.

தற்போது மூன்றாவது திருமணத்திற்குத் தயாராகிவரும் இவருக்கு; ஏற்கனவே இரு மனைவிகள் மூலம் பிறந்த பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என 70 இற்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றார்கள். வெகுவிரைவில் சிரியா நாட்டு இளம்பெண் ஒருவரை மணம் முடிக்க உள்ள அப்துல்லா, தேன் நிலவை எங்கே வைக்கலாம் என்றும் ஆராய்ந்து வருகிறாராம்!

# கைத்தொலைபேசியைப் பாவித்தவருக்கு 70 கசையடிகள்

சவுதிக்கார்களுக்கு கசையடியை விட்டால் வேறு தண்டனையே கிடையாது போலும். இல்லை இல்லை குற்றங்களுக்கு ஏற்ற வகையில் அவர்களின் தண்டனைகளும் வேறுபடுவதுண்டு. கை, கால், தலைகளை இழந்தவர்களும் ஏராளம். சரி விடயத்துக்கு வருவோம். அண்மையில் கைத்தொலைபேசியைப் பாவித்த ஒருவருக்கு 70 கசையடிகள் வழங்கப்பட்டன. அடடா... கைத்தொலைபேசியைப் பாவிப்பதும் பிழையா..?

ஆனால் எங்கே பாவித்தார் என்பதுதான் முக்கியமானது. ஓர் உள்ளூர் விமான சேவையில் ஈடுபட்டிருந்த விமானத்திற்குள் சிப்பந்திகளின் எச்சரிக்கையையும் மீறி தொலைபேசியை பாவித்த ஓர் இராணுவ அதிகாரிக்குத்தான் இந்தத் தண்டனை. விமானங்களில் கைத் தொலைபேசிகள் பாவிக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே. ரியாட் விமான நிலையத்தில் இருந்து விமானம் புறப்படுவதற்கு ஓடுபாதையில் சென்றுகொண்டிருந்த வேளையே இச் சம்பவம் இடம்பெற்றது. மேற்படி அதிகாரி, சிப்பந்திகள் தொலைபேசியை நிறுத்துமாறு பல தடவைகள் கூறியபோதும் அதனைக் கேட்காது பாவித்துள்ளார். இதனால் விமானப் புறப்பாடுகள் அரைமணி நேரம் தாமதமாகின. மேற்படி நபர், விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளால் விமானத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டார். இவர் இராணுவத்தில் கப்டன் பதவியில் உள்ள ஒருவராம். சாதாரண சட்டங்களையே மதிக்கத் தெரியாத இவருக்கு 70 கசையடிகள் வழங்கப்பட வேண்டும் என சவுதிநீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியது. நவம்பர் மாதம் இதேபோன்று தொலைபேசியைப் பாவித்த ஒருவருக்கு 20 கசையடிகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற பல மனித உரிமை அமைப்புக்கள் சவுதி அரேபியாவின் கடுமையான தண்டனைகளை பல தடவைகள் கண்டித்துள்ளன. அந்நாட்டின் நீதித்துறையில் சர்வதேச சமூகம் தலையிட்டு தண்டனைகளை மாற்றுவதற்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என மேற்படி அமைப்புகள் கோரிவருகின்றன.

# வாறாரு... வாறாரு... அரசியல் கோமாளி!

மரம் சும்மா இருந்தாலும் காத்து விடாதெண்டு சொல்லுறவை. நானும் விக்கிரமநாயக்காவை விட்டுட்டு வேறை விசயத்துக்கு போவமெண்டுதான் பாக்கிறன். ஆனால் மனுசன் விட்டாத்தானே..! நுணலும் தன் வாயால் கெடும் எண்டு, தங்கட கோமாளிக் கூத்துகளை அவையளே மைக் வைச்சு அறிவிக்கினம், அதைக் காது குடுத்து கேக்காமல் போனா எப்பிடி?

போனகிழமை பைத்தியத்துக்கு வைத்தியம்பாக்கிற அங்கோடயிலை நிண்டு பேசின விக்கிரமநாயக்காக இன்னும் இப்படியொரு வைத்தியசாலை கட்டவேணும் எண்டு சொல்லியிருக்கிறார். அதெண்டா உண்மைதான். அநாதை விடுதியை திறந்து வைக்கப்போனவர், வழக்கமா திறப்பு விழாக்களிலை பேசினதைப் போல, இது மேலும் மேலும் வளர்சியடைஞ்சு நாடு முழுக்க கிளை பரப்பவேணும் எண்டு சொன்ன மாதிரி இல்லாமல், நாயக்கா இதை மாதிரி இன்னொரு வைத்தியசாலை திறக்கவேணும் எண்டு சொன்னதிலை நியாயமிருக்குத்தான்! முன்னம் சிங்கள அரசின்ரை




அகராதியிலை சமாதானம் பேசுறவையும் சமாதானத்திற்கு குரல் கொடுக்கிறவையும் பயங்கரவாதியளா மட்டும்தான் தெரிஞ்சவை, இப்ப பைத்தியக்காரராயும் தெரியினம் போல? அகிம்சையைப் போதித்த புத்தரை பின்பற்றுறம் எண்டு சொல்லுற பிக்குகள் வெட்டரிவாள், வீச்சரிவாள் மட்டுமில்லை வெடிகுண்டு, துப்பாகியளோட அலையிற நாட்டிலை இருந்தெல்லோ இந்தக்குரல் வந்திருக்கு ஆனபடியா இதொண்டும் அதிசயமில்லைதான்.

இதுக்கை போனகிழமை கொழும்புக்கு வந்த நோர்வேத் தூதரை நாயக்கா சந்தித்து மணித்தியாலக் கணக்காக ஓதோதெண்டு ஓதியிருக்கிறார். மனிசன் இவர் சொல்லுறதையெல்லம் மௌனமா இருந்து கேட்டுட்டு, போகேக்கை நன்றி எண்டு மட்டும் சொல்லிவிட்டு போயிருக்கிறார். வெளியிலை வந்த நாயக்கா, தன்ரை அறிவை வைச்சு சொன்னது என்ன தெரியுமோ...? எரிக் தன்னோட ஒண்டும் கதைக்கேலை, ஏனெண்டால் அவருக்கு சரியான கூச்சமாம். இதைவிட நாயக்காவின்ரை இன்னொரு முசுப்பாத்தியை கேளுங்கோ... வரப்போற காதலர் தினத்துக்கு (பெப்ரவரி–14) சிங்களப் பிள்ளையளையெல்லாம் ஆமியளைக் காதலியுங்கோ எண்டு சொல்லியிருக்கிறார். அப்பதான் அவைக்கு வீரம் வந்து சண்டை பிடிப்பினமாம். அதாலை இந்தமுறை காதலர் தின அன்பையும் அன்பளிப்புகளையும் சண்டைபிடிக்கிற ஆமியளுக்கு வழங்குங்கோ எண்டு சொல்லியிருக்கிறார். சமாதானம் எப்ப வரும் நிம்மதியா எப்ப இருக்கலாம் எண்டு சனங்கள் அங்கலாய்ச்சுக்கொண்டு திரிய, நாயக்கா கொடுக்கை இழுத்துக் கட்டிக்கொண்டு சண்டைதான் வேணும் எண்டெல்லோ அடம்பிடிக்கிறார். இவரை நம்பித்தான் நாட்டோட பிரதமர் பொறுப்பை ஒப்படைசிருக்கெண்டதை நினைக்க அதிர்ச்சியாத்தான் கிடக்கு!

இதுக்கை சிங்கள உறுமையாவும் சண்டையை நிப்பாட்டினால் ஐஞ்சாறு லட்சம் பேர் வேலை வாய்ப்பை இழந்து போடுவினம், ஆனபடியா சண்டையை நிப்பாட்டாமல் தொடந்து அடிபடுங்கோ, தாங்களும் ஆதரவு தாறோம் எண்டு சொல்லியிருக்கினம். ஆளாளுக்கு அவையள்தான் சண்டைக்கான காரணங்களையும் கூறிக்கொண்டு, அதற்கான ஏற்பாடுகளையும் செய்துகொண்டு வருகினம். தமிழ்ச் சனங்கள்ளயும் தேடிப்போய் அழிக்கினம், ஆனா தங்கட பகுதிகளுக்கை மட்டும் குண்டைக்கிண்டை வைச்சுப்போடாதையுங்கோ எண்டு புலியளிட்டை கோரிக்கை விடுகினம். சிங்கள தேசத்தை எண்டைக்கும் அழிக்கப்போறது புலியளோ தமிழ்ச்சனமோ இல்லை. ஆட்சியிலை உள்ளவையும் இனவாதியளும்தான்.

ஆனபடியா... குரங்கின்ரை கையிலை பூமாலையை கொடுத்தவை – கொடுக்கிறவை தான் சிந்திக்கவேணும்.



## விடிவிற்காக உயிர்களை...

### லெப்ரினன்ட் கேணல் பொன்னம்மான்

ஆயிரமாயிரம் புதிய புலிகளை உருவாக்கி போராட்ட விருட்சத்தை உரம் பெறச் செய்த சாதனையாளன் பொன்னம்மான். ஆரம்பகாலங்களில் விடுதலைப் போராட்டத்தை ஆயுதரீதியில் வலுப் பெறச் செய்த சிறந்த தொழிநுட்பவியலாளன் பொன்னம்மான். சக போராளிகளின் நண்பனாய், தாயாய், தந்தையாய், தனயனாய் ஆசிரியனாய், மருத்துவனாய்.... எல்லாமுமாய் நிறைந்து விளங்கியவன் பொன்னம்மான்.

23.12.56 இல் பிறந்த யோகரத்தினம் குகன் என்கிற அற்புதனே, மாவீரன் பொன்னம்மான். 70 களின் ஆரம்பத்தில் இருந்தே விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுடன் இணைந்து தோழோடு தோழ் நின்று விடுதலைக்காய் உழைத்த பொன்னம்மான் அவர்கள், மிகச் சிறந்த தொழிநுட்பவியலாளனாகவும் விளங்கினார். இது தவிர ஏராளமான புதியவர்களை விடுதலைப் புலிகளுடன் இணைத்து ஆயுதப் பயிற்சி கொடுத்து இயக்க வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்.

இந்திய மண்ணில், விடுதலைப்புலிகளின் முதலாவது பயிற்சியணியின் பொறுப்பாளனாக இருந்த இவர், இயக்க விதிமுறைகளுக்கேற்ப சிறந்த வீரர்களாய் தன் பயிற்சியாளர்களை உருவாக்கினார். இவரது முதலாவது பயிற்சி அணியிலேயே தளபதிகளான கேணல் கிட்டு, விக்ரர், பதுமன், கேடில்ஸ் போன்றோரும் இருந்தனர். தமக்கான பயிற்சிகளை முடித்துக்கொண்ட பொன்னம்மான் அவர்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் பயிற்சிப்பாசறைகளை நிறுவி, மேலும் பல நூறு புலிவீரர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து, வெடிமருந்துகளைக் கையாள்வதில் வல்லுநர்களாக்கி, இயக்கத்துக்குத் தேவையான மேலதிக ஆயுதங்கள், வெடிகுண்டுகள் செய்யக்கூடியவர்களாகவும் போராளிகளை உருவாக்கினார். போராட்டத்திற்கு ஆரம்ப காலங்களில் கை எறிகுண்டுகள் கணிசமான அளவு தேவைப்பட்ட காலகட்டத்தில், சாத்தியமற்றது எனக் கூறப்பட்ட நிலையை மாற்றி, 85ஆம், 86ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மாதாமாதம் ஆயிரக் கணக்கில் எறிகுண்டுகளைத் தயாரித்துக்கொடுத்தார் பொன்னம்மான் அவர்கள்.



வரலாற்றுச் சிறப்பு மிக்க திருநெல்வேலித் தாக்குதல், உமையாள்புரத் தாக்குதல் என்பவற்றோடு, மேலும் பல தாக்குதல்களில் பங்குகொண்ட பொன்னம்மான் அவர்கள், நாவற்குழி இராணுவமுகாம் மீதான தாக்குதலுக்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே வீரச்சாவினைத் தழுவிக்கொண்டார். அவரது அந்த இறுதிக் கணங்கள் விடுதலைப் போராட்டப் பாதையில் மிக முக்கியமானவை, வீரம் செறிந்தவை.

மிகவும் பலம் பொருந்தியதாக விளங்கிய நாவற்குழி இராணுவ முகாமை தாக்கியழிக்க கேணல் கிட்டுவும் ஏனைய தோழர்களும் திட்டமிட்டனர். இதில் பொன்னம்மான் அவர்களும் முக்கிய பங்காற்றிக்கொண்டிருந்தார். இராணுவ முகாமுக்கு நீர் விநியோகம் செய்யும் 'பௌசர்' வண்டிபோன்று இன்னோர் வண்டியை தயார்செய்து அதில் குண்டினைப் பொருத்தி உள்ளே அனுப்பி வெடிக்கவைத்து முகாமைத் தாக்கி அழிப்பதென்பது திட்டம். ஆனால் முகாமின் வாயில் காவலர்கள் 'பௌசர்' வண்டியைத் தீவிரமாக பரிசோதித்த பின்னரே உள்ளே செல்ல அனுமதிப்பர். எனவே வழமையாக நீர் கொண்டுசெல்லும் வண்டிபோன்றே குண்டு கொண்டு செல்லும் புதிய வண்டியும் இருக்கவேண்டும். அடிபட்டு நசுங்கி, துருப்பிடித்திருந்த அப்பழைய வண்டிபோன்றே புதிய வண்டியையும் பலத்த சிரமத்தின் மத்தியில் செய்து முடித்தனர். ஏனைய தோழர்கள். இதில் குண்டு பொருத்தும் பணியை பொன்னம்மான் எடுத்துக்கொண்டார். 'பௌசரின்' நீர்க்கொள்கலனை இருபகுதிகளாகப் பிரித்து அடிப்பகுதியில் வெடிகுண்டு நிரப்பப்பட்டு, மேற்பகுதியில் நீர் நிரப்பி உள்ளே அனுப்புவதாக பொன்னம்மான் திட்டமிட்டிருந்தார். அதன்படி வெடிகுண்டும் நிரப்பப்பட்டுவிட்டது. இரவு பகல் கண்ணயராது விழித்திருந்து சகல வேலைகளும் முடிக்கப்பட்டுவிட்டது. பொன்னம்மான் அவ்விடத்திலேயே தூங்கிவிட்டார். அதிகாலையில் வெடிமருந்து நிரப்பிய வாகனம் தயாராக நின்றது.

14.02.1987 இராணுவமுகாமுக்கு தண்ணீர் கொண்டுசெல்லப்படும் இறுதி நேரமான 6.30 மணி தாக்குதல் நேரமாக கணிக்கப்பட்டது. தாக்குதல் குழுக்களுக்கான நிலைகளைத் தயார் செய்யவென கிட்டண்ணாவும் வாசுவும் சென்றுவிட்டனர். முகாமினுள் குண்டு வாகனம் வெடித்தவுடன் ஜொனி, கேடில்ஸ், சூசை தலைமையில் 3 லொறிகளில் தாக்குதல் நடத்தியபடியே முகாமினுள் செல்வதற்கான சகல ஒழுங்குகளையும் செய்துவிட்டு, அனைத்துக் குழுக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி கட்டளைகயை வழங்கக்கூடிய ஓர் இடத்தை கிட்டண்ணா தெரிவு செய்தார். குண்டு நிரப்பப்பட்ட வாகனத்துடன் இருந்த பொன்னம்மானிடம் இருந்து வாசுவுக்கும், கேடில்சுக்கும் அழைப்பு வந்தது. 'பௌசரில் இருந்து சிறிது தண்ணீர் ஒழுகிக்கொண்டு இருக்கிறது. ரஞ்சனையும் அழைத்துக்கொண்டு வாருங்கள்.

மாலை 5 மணி - தாக்குதற் குழுக்களைச் சரிபார்த்துக்கொண்டிருந்தார் கிட்டண்ணா. தாக்குதல் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது திடீரென பாரிய சத்தம். பூமியதிர்வென்று ஏற்பட்டது போன்ற பிரமை. எதுவுமே புரியாது கிட்டண்ணா, பொன்னம்மானை தனது 'வோக்கி'யில் அழைத்தார், கேடில்சை அழைத்தார். பதிலில்லை. வாசுவின் தொடர்பில்லை. ஜொனியின் தொடர்பு கிடைத்தது. சத்தம் கேட்ட இடத்துக்கு அவரை அனுப்பினார்.

அங்கு எல்லாம் தூசி மயம். எல்லாம் உருக்குலைந்த நிலையில் லொறிக்குள் 5 தோழர்கள் இறந்துபோய்க் கிடந்தார்கள். நீர் நிரப்பும் போது 'பௌசர்' வெடித்திருக்கிறது. என்ன நடந்தது என்பதை அறிய யாரும் உயிருடன் இல்லை. இரவிரவாக பௌசரை வடிவமைத்த கேடில்ஸ், வாசுரஞ்சன் இவர்களுக்கும் மேலாகப் பொன்னம்மான், யாருமே உயிருடனும் இல்லை, உடற் கூறுகளும் இல்லை. தமிழ் மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காய் தம்மை காற்றோடு காற்றாக கலந்துவிட்டனர்.

– கதிரவன்



# மீண்டும் யாழ். மண்ணில் பதிந்த எம் தடங்கள்

## பாகம் – 32

மாலதி படையணியினரிடம் அறிந்து கொண்ட விடயங்கள் ஏராளமாக உண்டு. எனினும் இப் பகுதிகளுக்கு அப்பால் யாழ்ப்பாணத்தின் காட்சிகளைத் தர வேண்டியுள்ளது.

தனங்கிளப்பு, அரியாலை, முள்ளி, கோயிலாக்கண்டி ஆகிய முகாம்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் உள்ள நிலமைகளை அறிய முயற்சித்தேன். முதலில் தனங்கிளப்பு இராணுவ முகாமுக்கே செல்ல முடிந்தது. கடந்த 10,11 ஆம் திகதிகளில் நடைபெற்ற தாக்குதல்களைத் தொடர்ந்து இந்த முகாம் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டது. 12 ஆம் திகதி இந்த முகாமைப் பார்வையிட முடிந்தது.

நாங்கள் வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது கிபிர் விமானங்கள் வந்துவிட்டன. பாதுகாப்பான ஓரிடத்தில் நின்றுகொண்டோம். அவை மூன்று தடவைகள் குண்டுகளை வீசிவிட்டுச் சென்றன. கிபிர் வந்தபோது நாம் சென்றுகொண்டிருந்த பாதையில்தான் குண்டுத் தாக்குதல் நடந்திருந்தது. முதல் தாக்குதலில் நடுவீதியில் கிணறுபோன்ற பெரிய பள்ளம். அதற்கு அருகில் இன்னொன்று. கொஞ்சம் தள்ளி மற்றொன்று. அன்றைய தினம் அது மூன்றாவது சுற்றுத் தாக்குதல். காலையில் ஏற்கனவே இரு தடவைகள் அவை குண்டுவீசிவிட்டுச் சென்றிருந்தன.

கிபிரைக் கண்டு நாம் விரைந்து கொண்டிருந்தபோது வீதியில் ஒரு போராளி தனியாக நின்று கொண்டிருந்தார். குண்டுத் தாக்குதல் முடிந்து நாம் மீண்டும் திரும்பிச்சென்றபோதும் அவர் அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருந்தார். குண்டு வீச்சு நடந்த முறையைப் பார்த்தபோது இவர் எவ்வாறு உயிர் தப்பினார் என்று ஆச்சரியப்பட்டோம். அப்பகுதி தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. அவரது உடைகளும் ஆங்காங்கே எரிந்திருந்தது. எம்மோடு வந்த ஒரு போராளி இச்சம்பவம் பற்றி அவரிடம் விசாரித்தபோது தான் வேறுவழியின்றி அவ்விடத்திலேயே விழுந்து படுத்துவிட்டதாகக் கூறினார். தனக்கு வழங்கப்பட்டிருந்த பணிபற்றிக் குறிப்பிட்ட அவர் கிபிர் வருவதற்காக தான் அவ்விடத்தைவிட்டுச் சென்றால் குறிப்பிட்ட பணியை நிறைவேற்ற முடியாமல் போயிருக்கும் என்றும் கூறினார். அவரது கடமை உணர்வு எம்மை ஆச்சரியப்படவைத்தது. போர்க்களத்தின் காட்சிகள் ஒவ்வொன்றுமே இவ்வாறுதான் வரலாறுகளைக் கொண்டுள்ளது.

தொடர்ச்சியாக சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட்டவாறே சென்ற நாம் அறுகுவெளி முகாமைக் கடந்து சென்றோம். காப்பரண்களில் இருந்த மரங்கள் எல்லாம் உக்கிப்போயிருந்தன. இந்த முகாம் வீழ்ச்சியடைந்து கொஞ்சக் காலமாகிவிட்டது என்பதை அம் முகாமின் தோற்றத்திலிருந்து அறியக்கூடியதாக இருந்தது. விமான மற்றும் எறிகணைத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டவாறே சென்ற நாம் அங்கிருந்த களமுனைத் தளபதி குட்டியைச் சந்தித்துச் சில விபரங்களைக் கேட்டறிந்தோம்.

### களமுனையில் இருந்து

AA 32/9 KM என்று எழுதப்பட்டிருந்த தூரத்தைக் காட்டும் கல்லைக் கடந்து செல்லும்போது வீதியின் குறுக்கே பாரிய பள்ளம் வெட்டப்பட்டிருந்தது. அதனுள் மறைப்பிற்காக அமைக்கப்பட்டிருந்த கிடுகுவேலி காணப்பட்டது. அதைத் தொடர்ந்து ராதிகா களஞ்சியம் என்ற கடை காணப்பட்டது. முன்னர் இருந்த இக்கடை இராணுவ வேலிக்குள் போய்விட்டது. வீதியின் எதிர்ப்பக்கமாக நகரும் பதுங்குகுழிகள் காணப்பட்டன. வீதியெங்கும் அரைகுறை வாழ்க்கையில் முறிந்த பனை, தென்னை மரங்களைக் காணமுடிந்தது. ஆங்காங்கே பல சைக்கிள்கள் காணப்பட்டன. வீதியின் வலது பக்கமாக சிறிய குளம் ஒன்று காணப்பட்டது. இடது பக்கமாக சீமெந்தினால் கட்டப்பட்ட பதுங்குகுழியொன்றும் காணப்பட்டது. இவ்வாறாக காவலரண்கள், நகரும் பதுங்குகுழிகள் என்று 250 மீற்றர் தூரத்தைக் கடந்து சென்று பிரதான கட்டடத்தைச் சென்றடைந்தோம். பூசப்படாத ஒரு சீமெந்து வீடு தனங்கிளப்பு - சாவகச்சேரி வீதிச்சந்தியில் உண்டு. அதன் முன்னுக்கு பாதுகாப்பிற்கான சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

அங்கு பக்கற் சாப்பாடுகள், படுக்கைகள், இராணுவ சஞ்சிகைகள், மெழுகுசீலைகள், காலணிகள், சீருடைகள், மருந்துப் பொருட்கள் போன்றவற்றுடன் ஏனைய இராணுவ எச்சங்களும் சிதறிக் காணப்பட்டது. வீட்டினுள்ளே பனைமரங்கள் மற்றும் மண்மூட்டைகள் அடுக்கப்பட்டு எறிகணைப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் சீமெந்தினால் ஆன நீளமான பதுங்குகுழியும் காணப்படுகின்றது. மிகவும் இருட்டான இப்பதுங்கு குழிக்குள் டோர்ச் லைற்றின் உதவியுடன் ஒவ்வொரு படியாக இறங்கிச் சென்றோம். மிக ஒடுக்கமான பாதை வழியே சென்றால் இறுதியில் ஒரு அறையினுள் தொலைத்தொடர்பு சாதனங்கள் காணப்பட்டன.

இந்த அறைக்கு அப்பாலும் இன்னும் சில அறைகள் உள்ளன. எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வெளியே வந்து பார்த்தால் குளிப்பதற்கான தொட்டி காணப்பட்டது. சுற்றிவர வேலி அமைக்கப்பட்டிருந்தது. இப்பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கும் என்பதை உணரமுடிந்தது.

11 அதிகாரிகளும், 210 இராணுவத்தினரும் அங்கு இருந்ததாக எம்முடன் வந்த போராளி ஒருவர் கூறினார். இதைப்பற்றி அங்கு எழுதிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அந்த முகாமில் சிங்களப்படைப்பிரிவின் 7வது படைப்பிரிவே தங்கியிருந்திருந்தது. இதனை வெளிப்படுத்தும் விளம்பரப் பலகை மற்றும் கல்லால் ஆன சிறிய மேடைகள் என்பன அங்கு காணப்பட்டன.

அந்த இடத்தில் தமிழீழத் தேசியக் கொடியேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. களமுனைத் தளபதி குட்டி பிற்பகல் 3.23 க்கு தேசியக் கொடியைப் பறக்கவிட்டார். அதனைத் தொடர்ந்து அங்கே உள்ள சந்திக்குச் சென்றோம்.

சந்தியில் பீப்பாக்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. பத்து மீற்றருக்கு ஒரு காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. வீதியின் அரைப்பகுதிக்குச் சற்றுக் கூடுதலாக காவலரணிற்குள் இருந்தது. சந்தியில் இருந்து பார்த்தால் சாவகச்சேரியின் அனைத்துக் கட்டடங்களும் தெரிந்தன. தனங்கிளப்பிற்கும் தச்சன் தோப்பிற்கும் இடையில் வயல்வெளிதான் உண்டு. சாவகச்சேரியின் உயரமான கட்டடங்களில் இருந்து பார்த்தால் இங்குள்ள சகல நடமாட்டமும் தெரியும், அவற்றை ஒவ்வொன்றாக பார்த்தபடி சென்றோம்.

[தொடரும்]


இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் கு.வீரேஸ்வரன் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்



### தவராசன் சிந்துசன்

**இடம்:** 45144 Essen, Germany.
**வயது:** 05 (24.10.1995)
**பாடசாலை:** Essen தமிழாலயம்
**பொழுதுபோக்கு:** சித்திரம் வரைதல், தொலைக்காட்சி பார்த்தல், விளையாடுதல் (Memory)
**உறுப்பினர் எண்:** G133




## சுயசரிதை

### நான் ஒரு மரங்கொத்தி

*நீங்கள் அடிக்கடி பார்க்கும் பறவைகளில் ஒன்றுதான் நானும். என்னைப் போன்ற மரம்கொத்திக்கு பொன் முதுகு மரங்கொத்தி என்று பெயர். நான் பெயருக்கேற்ற பொன் நிற முதுகைக் கொண்டனான். என்னுடைய கொண்டை சிவப்பு நிறத்திலும், முகம் கறுப்பாகவும் இருக்கும்.*

*என்னுடைய முக்கிய உணவு மரப்பட்டையின் உள்ளும், அடி மரத்தின் துளைகளிலுமுள்ள புழு பூச்சிகளாகும். என்னுடைய உறுதியான அலகுகள் உளியின் முனையைப்போல் உள்ளன. மரப்பட்டையைக் கொத்துவதற்கும், துளைப்பதற்கும், புழுக்கள் உள்ள மரப்பட்டைகள் உள்ளனவா என்று தட்டிப் பார்ப்பதற்கும் என்னுடைய உறுதியான அலகுகள் உதவுகின்றன.*

*எனக்குத் தேவையான இரை உள்ள இடங்களை அறியவும் இரைகளைப் பற்றுவதற்குமே மரத்தினைக் கொத்துகின்றேன்.*

*- செல்வி சுபாஜினி துரைராசா*
*Rodez, France.*

## பழமொழி முற்றம்

★ ஆலயத்திற்கு அருகிலிருப்பவன் இறைவனைத் தரிசிக்க இறுதியாகத்தான் வருவான்.
★ மரணமே உலகின் முதலாளி.
★ செல்வங்களை விட செல்வாக்கு மேலானது.
★ மூடின வாயில் ஈ நுழையாது.
★ பசியுள்ள கண் நெடுநேரம் பார்க்கும்.
★ நீடித்த நோய்களுக்கு பொறுமைதான் மருந்து.
★ நெருப்பு ஒருபோதும் நெருப்பை அணைக்காது.
★ விருந்தாளிக்கு உணவு வேண்டாம். அவனை அன்பாக வரவேற்றால் போதும்.
★ இளமையைப் பாராட்டிப் பேசினால் அது மேன்மையடையும்.
★ செயலே புகழ் பரப்பும் வாய் அல்ல.




## கதை முற்றம்

### சுற்றுச் சூழல் கெடுமானால்...

ஓர் அரசனின் அரண்மனைத் தோட்டத்தில் அருமையான மா மரம் ஒன்று இருந்தது. அது மிக இனிப்பான பழங்களைத் தந்தது.

அதன் பழங்களைப் பல நாட்டு அரசர்களுக்கும் அன்பளிப்பாக அனுப்பி வைத்தான் அவன்.

'இதைப் போன்ற சுவையான பழத்தை நாங்கள் சாப்பிட்டதே இல்லை. இப்படியே ஆண்டுதோறும் அனுப்பி வையுங்கள். நம் நட்பு தொடரும்' என்று எல்லா அரசர்களும் கடிதம் எழுதினார்கள்.

இதனால் மகிழ்ந்தான் அரசன்.

புகழ் பெற்ற அறிஞர் ஒருவர் அரசவைக்கு வந்தார். 'அரசே! நீங்கள் யாராலுமே செய்ய இயலாத அரிய செயல் என்று எதைக் கருதுகிறீர்கள்' என்று கேட்டார்.

'அரண்மனைத் தோட்டத்து மா மரம் மிக இனிப்பான பழங்களைத் தருகிறது. அத கசப்பான பழங்களைத் தருமானால் அதையே அரிய செயலாகக் கருதுவேன்' என்று பெருமையுடன் சொன்னான் அரசன்.

அதற்கு அறிஞர், 'அரசே! நீங்கள் சொல்வது அரிய செயலே அல்ல; எளிய செயலே. அரண்மனைத்தோட்டத்தை என் பொறுப்பில் விடுங்கள். மூன்றாண்டுகளுக்குள் அந்த மா மரம் கசப்பான பழங்களைத் தருமாறு செய்கிறேன்' என்றார்.

அரசனால் நம்ப முடியவில்லை. 'இன்றிலிருந்து மூன்றாண்டுகள் அரண்மனை தோட்டம் உங்கள் பொறுப்பில் இருக்கும். அதற்குள் நீங்கள் சொன்னதை நிறைவேற்றவேண்டும். இல்லாவிட்டால் உங்கள் உடலில் உயிர் இருக்காது' என்றான் அவன்.

மூன்றாண்டுகள் கழிந்தன. அரசவைக்குக் கூடை நிறைய மாம்பழங்களைக்கொண்டு வந்தார் அறிஞர்.

'அரசே! நீங்கள் சொன்ன மரத்தில் விளைந்த பழங்கள் தாம் இவை. சுவைத்துப் பாருங்கள்' என்று நீட்டினார்.

அதிலிருந்து ஒரு பழத்தை எடுத்துக் கடித்தான் அரசன். அதன் கசப்பு தாங்காமல் துப்பினான்.

வியப்பு அடைந்த அவன், 'அறிஞரே! நீங்கள் தந்த பழங்கள் என் மா மரத்தின் பழங்களே. என்ன மாயம் செய்தீர்? எப்படி அதன் சுவையை உங்களால் கசப்பாக்க முடிந்தது?' என்று கேட்டான்.

'அரசே! அந்த மா மரத்தைச் சுற்றிக் கசப்புச் சுவையுடைய செடி கொடிகளை நட்டேன். அவையே அந்த மரத்தின் வேர்களிலும் இலைகளிலும் படர்ந்தன. சுற்றுச் சூழல் கசப்பாக இருந்ததனால் அந்த மரத்தின் பழமும் கசக்கிறது. தீயவர் தொடர்பினால் நல்லவரும் தீயவராவது போல' என்றார் அறிஞர்.

'என் மா மரம் பழையபடி சுவையான பழங்கள் தர வழியே இல்லையா?' என்று வருத்தத்துடன் கேட்டான் அவன்.

'அந்த மா மரத்தின் சுற்றுச் சூழலை மீண்டும் நல்லதாக ஆக்குங்கள். மூன்றாண்டுகளில் நல்ல சுவையான பழங்கள் தரும்' என்றார் அவர்.

மகிழ்ந்த அரசன் அவருக்கு நிறைய பரிசுகள் தந்து அனுப்பி வைத்தான்.

## கண்டுபிடியுங்கள்

### கடந்த வார விடை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொ | | | | க் | | |
| தெ | | | பி | | | கா |
| எ | | | யோ | | | யா |
| எ | | | | | யா | |
| ம | | | | | ர் | |
| உ | | | | | | |
| தா | | | | யா | | |
| சொ | | | யா | | | |

கீழே உள்ள எழுத்துகளின் துணைகொண்டு எட்டு நாடுகளைக் கண்டுபிடியுங்கள் முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | |
|---|---|---|---|
| சி | | | வே |
| பொ | | | னா |
| ச | | ர் | |
| ந | | | யா |
| சா | | | யா |
| கொ | | கோ | |
| க | | | ன் |
| மா | | | |

## வினா-விடை முற்றம்

### கடந்தவார விடைகள்:

1. மொகஞ்சதரோ, கரப்பா.
2. மண்ணெண்ணெய் நன்றாக சுத்திகரிக்கப்படாதது.
3. 1776.
4. பாலூட்டி வகையைச் சேர்ந்தது.
5. சீனா.
6. மரணதண்டனை விதிக்கப்பட்டு நஞ்சு அருந்தி இறந்தார்.

### இவ்வார வினாக்கள்

1. முற்கால அரசர்கள் பயன்படுத்திய போர் ஆயுதங்கள் எவை?
2. அரிசியில் உள்ள உயிர்ச்சத்து எது?
3. ரேடியத்தின் தன்மை யாது?
4. செவ்விந்தியரின் சொந்த தேசம் எது?
5. பல நாடுகளையும் கைப்பற்றி கிரேக்கப் பேரரசை உருவாக்கிய மன்னன் யார்?
6. எறும்பிடம் இருந்து மனிதன் கற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு பாடங்கள்?

*அடுத்தவாரம் விடைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.*

### சிறு கதை

‘காலையும் கையையும் கொண்டுபோன ஷெல் இந்த உயிரையும் கொண்டு போகாமல் விட்டுதே... இஞ்ச கிடந்து அழுந்தி உத்தரிக்கிறபலன் இருக்கேக்க ஏன் கொண்டுபோகுது?.. விதியும் வேளையும் வரவேணுமே...’ கடவுளுக்கு தன் நிந்தனையையும் வாஞ்சையையும் எடுத்தியம்பி மனம் நொந்தான்.

கமலா சாரத்தைத் தலையாலே போட்டு தன் சாரத்தைத் தானே கட்டுகின்ற கைவழத்திற்கு, பின்நின்று இறுக்கமாக மடித்துவிட்டாள். சாரத்தை சாதாரணமாக இறுக்கிச் செருகிக் கட்டுவது போலன்றி கொழும்பில் மூட்டை சுமக்கும் தொழிலாளர்கள் மடித்துவிடும் பாணியை ஏற்கனவே

# எதிர்பார்ப்புகள்

வேந்தன் மனைவிக்குப் பழக்கியிருந்ததால் சாரத்தை உடுத்துவிடுதல் அவளுக்கு சுலபம்.

அன்றைய பொழுது மிகவும் பிரகாசமாயிருந்தது. சூரியனும் வேலைநிறுத்தம் செய்யாமல் தாராளமாக சூடு பரப்பிக்கொண்டிருந்தான். இராணுவத்திற்கும் போராளிகளுக்கும் இடையே நடந்துகொண்டிருந்த தாக்குதல்கள் சற்றுத் தணிந்திருந்தது. மக்கள் மனங்களில் சின்ன அமைதி. தற்காலிகமானதெனினும் அதுவும் பெரிய ஆறுதல்தான்.

ஆறாத புண்களுக்கும் இனிக் கீறப்போகும் காயங்களுக்கும் மருந்துதேட, உணவுப் பொருட்களைத் தேடிப்பிடித்துக்கொண்டுவந்து சேர்க்க மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம். நாளையோ, மறுநாளோ ஆகாய, தரை, கடல் மார்க்கமாகத் தாக்குதல் தொடரலாம். அதற்கிடையிலான இந்த இடைவேளையில் இராணுவம் ஆயுதங்களையும் உணவுப் பொருட்களையும் சேர்க்க, மக்களும் அத்தியாவசியங்களைச் சேர்த்துக் கொண்டு தயாராவது வழமையான ஒரு நிகழ்வு.

சாவைநோக்கிய அந்தப் போராட்ட சீவியத்தில் மக்களிடையே சின்னக் குதூகலம், பரபரப்பு, ஓட்டம், அமளி அங்கே மா கொடுக்கிறார்கள், இங்கே பருப்பு வந்திருக்காம், அங்கு மண்ணெண்ணை கிடைக்குமாம், அரிசி வந்திருக்காம். கண்டும் கேட்டும் பலரும் பல திசையுமாய் சிதறிப்பறந்து கொண்டிருந்தனர். இங்கே அந்தத் தேடலும் கமலாவினுடையதாகையால் காலையிலிருந்தே இயந்திரமாக இயங்கிக்கொண்டிருந்தாள். காலை உணவாக றொட்டிசுட்டு பிள்ளைகளுக்குக் கொடுத்து பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டாள். வீடு பெருக்கி பாத்திரங்கள் கழுவி கணவனைக் குளிப்பாட்டி உடுப்பு மாற்றிவிட்டு உணவு மற்றும் தேவைகளையெல்லாம் அவனருகில் தயார் நிலையில் வைத்து நாகம்மாவீட்டிற்குப் போகத் தயாரானாள்.

பள்ளிக்கூடத்திற்குப்போன பிள்ளைகள் ஆசிரியர்கள் வராததினால் திரும்பினர். ‘அம்மா இண்டைக்கு ரீச்சேர்ஸ் ஒருத்தரும் வரயில்ல. எல்லாப் பிள்ளயளும் திரும்பிப்போகுதுகள் நாங்களும் வந்திட்டம்’ பிருந்தியும் பிருந்தனும் கோரஸ்பாடினர்.

‘சரி அப்பாவோட இருந்து கேட்டுப்படியுங்கள் நான் ஆச்சிவீட்ட போயிற்றுவாறன்’ கமலா நாகம்மா வீட்டிற்குப்போனாள்.

கமலாவின் கணவன் வேந்தனுக்கு மூன்று வருடத்திற்கு முன் இராணுவம் ஏவிய ஷெல் இருகாலையும், ஒரு கையையும் சிதைத்துவிட்டுப்போனது. சிகிச்சையின் பின் முழங்காலுக்குக் கீழ்ப்பகுதியும் கையின் மணிக்கட்டுப் பகுதியும் அகற்றப்பட்டது. ஆரோக்கியமான மனிதர்கள் படும் அவஸ்த்தைக்கு, அங்கவீனர்களும், கூட இருப்பவர்களும் அனுபவிக்கும் வேதனை, அவலம்... சொல்லிலடங்கா.

மனைவி பிள்ளைகட்கு மட்டுமல்ல இன அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் போதெல்லாம் வேந்தனை வண்டியில் வைத்துத் தள்ளிக்கொண்டு தூக்கிக்கொண்டு போவோர்க்கும், மொத்தத்தில் இரக்கமுள்ளவர்க்கும் இறக்கிவைக்க முடியாத பாரமாகவே இருந்தான். ‘அடுத்தவருக்கு இடைஞ்சலையும் துன்பத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கிறேனே’ என சதா நொந்துகொள்வான்.

வேந்தனின் சகோதரர்கள் அகதியாய்போய் மேலைநாடுகளில் வசதியாய் வாழ்கின்றனர். இவன் பெற்றோர்க்கு துணையாகி அவர்கள் மடிந்தபின் இப்படியானான். பிரான்சில் உள்ள சகோதரன் ஒருவனுக்கு அங்கங்களிழந்த இவனது போட்டோவை அனுப்பி, அதைக்காட்டித்தான் ‘றெபியூஜி காட்’ கிடைத்ததாம். அடிக்கடி கடிதம் போடுவான்.

....அண்ணனால்த்தான் எனக்குக் காட் கிடைத்தது. வாழ்நாள் முழுக்க அண்ணனுக்கு உதவிசெய்துகொண்டே இருப்பேன். காட்கிடைத்ததின் பின் அதிர்ஷ்டவசமாக நல்லவேலை செய்கிறேன்...


... நான் பணமனுப்புகிறேன். அண்ணனுக்குப் பொய்க்கால் செய்து பொருத்தவும். அண்ணி கவலைப்பட வேண்டாம், இப்படியாய் உருக்கமாய், பிரதியுபகாரப்பண்பாய், பரிவாய், கடமையுணர்வாய், பொறுப்பாய் பல கடிதங்கள்.

அதன் நிமித்தம் அவனனுப்பிய பணத்தில்தான் பொய்க்கால் பொருத்தியதும், தள்ளுவண்டி வாங்கியதும். இவ்வளவோடு அவனுதவி நின்றுபோகுமென்று எவரும் நினைக்கவில்லை. திருமணம் செய்த பின் தான் தமையனுக்கு உதவாமல்விட்டது வேந்தன் குடும்பத்தினர்க்கு நன்கு தெரியும். கனடாச் சகோதரங்களும் ‘வேந்தன் அண்ணனாலதான அவனுக்குக் காட் கிடைச்சது. அவன் பாக்கட்டும்! என்று முகத்தைத் திருப்பினர். பண உதவி கேட்டு வலியுறுத்திக் கடிதம் எழுதினால் கடன்சோலி, அது இது என்றுசொல்லி அடுத்தமாதம்.. அடுத்தமாதம் என்று கடன்காசைக் கேட்பதுபோல் எழுதுவார்கள். இரும்பு விளையும் மண்ணில் இருப்பவர்களின் இதயங்களும் இரும்பானதோ! என எண்ணத்தோன்றும்.

நாகம்மாவும் புருசனும் முப்பொழுதும் துயில்விரும்பும் மூப்படைந்தவர்கள். அவர் பிள்ளைகள் அனைவரும் மேற்கு நாடுகளுக்குத் தப்பி ஓடிவிட்டனர். தாய் தகப்பனை தம்மோடு அழைப்பதற்கு முயன்றனர். விமானத்தில் பிரயாணம் செய்யக்கூடிய ஆரோக்கியமற்றவர்களாகையால் தூதுவராலயங்கள் விசாகொடுக்க மறுத்துவிட்டன. இதனால் இவர்களது பராமரிப்பு, பந்தோபஸ்த்து, பாதுகாப்புப் பணிகள் கமலாவிடம் ஒப்படைக்கப்பட்டன. ஒப்படைக்கப்பட்ட பணியைக் கமலா மிகுந்த விசுவாசத்தோடும், தூய அன்போடும், நேசத்தோடும் செய்யலானாள். நாகம்மாவின் மகளானாள் பரிவான பணிவிடைகளால். நாகம்மாவின் பிள்ளைகள் கமலாவிற்கு நேரடியாக பணமனுப்பியும் கடிதம் போட்டும் நிலைமையை கிட்ட வைத்து கவனித்தனர். இந்த ஊதியத்தில் கமலாவின் குடும்பமும் வாழ்வு கண்டது, நாகம்மா கிழவியும், கிழவனும் கமலாவின் அன்பில் ஆரோக்கியமாயிருந்தனர். கமலா வேலைகளைச் செவ்வனே செய்து முடித்து சமைத்து சாப்பாட்டைப்போட்டு ‘டைனிங்’ ரேபிளில் மூடிவைத்துவிட்டு வந்தாள். படலைக்குவெளியே வருகையில் ‘சங்கக்கடையில அரிசி வந்திருக்கு போய்வாங்கடி தங்கைச்சி... ரெண்டு கிலோதான் குடுக்கினம்...’ கமலாவை கேற்றிற்கு வெளியே கண்ட யோகவதி மென்மையான தொனியில் சொன்னாள்.

‘சனமா இருக்கோ அக்கா...?’

‘ஓமடி தங்கைச்சி சனமாத்தானிருக்கு கெதியாப்போ?’



‘இந்தச் சந்தர்ப்பத்தவிட்டால் பிறகு தேடி அலைய ஏலாது... தேடித்திரிய ஆம்பிளையா இருக்கு.’

அவசரப்பட்டாள் - பதட்டப்பட்டாள்.

‘வீட்டில ஒரு சுண்டு அரிசியுமில்ல...காசுமில்ல... என்ன செய்யிறது?.... அம்மாட்ட கேட்டுப்பாப்பமோ?

ஒருவாறு மனதை அமைதிப்படுத்திக் கொண்டு நாகம்மாவீட்டு கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே போனாள். நடையில் அவசரத்தைக் காட்டிக்கொண்டு.

‘என்னடி மேனே ஆமி வந்திட்டானோ?’

‘இல்லயம்மா...’ விடயத்தைச் சொன்னதும், கிழவி அவசரமாக அறைக்குள்போய் பெரியதாள்களை எடுத்துவந்து கமலாவின் கைக்குள் திணித்து ‘கெதியாப்போமேனே....’ கிழவி உசார்ப்படுத்தியது.

★ ★ ★

‘மாமா அத்தையில்லையோ?’ எதிர்வீட்டுப் பூமணியின் மகள்.

‘ஏன்... என்னத்துக்கு?’ வேந்தனின் மகள்.

‘சங்கக்கடையில அரிசிவந்திருக்காம். எங்கட அம்மா வாங்கப்போயிற்றா... அதுதான் உங்களுக்குச் சொல்ல வந்தனான்.’

விரைவாகச் சொல்லி விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தியது.

சிறியதுகளின் உரையாடலைக்கேட்ட வேந்தன் ‘மெய்தானா பிள்ள...’ உரத்தக்குரல் கொடுத்து கவனத்தைத் திருப்பினான்.

‘ஓம் மாமா கெதியாப் போனால்த்தான் வாங்கலாம்.’

வேந்தன் குடும்பத்தில் அயலவர் வைத்திருக்கும் கருணை இப்படியான சந்தர்ப்பங்களில் முதலுதவி.

நாகம்மாவிடம் காசையும் வாங்கிக் கொண்டு ஒரு கடகப்பெட்டியையும் எடுத்து கூட்டுறவுக்கடைநோக்கி நடந்தாள் கமலா.

கடிதம் விநியோகித்துக்கொண்டுவந்த சுந்தரம் கடிதமொன்றை கமலாவிடம் நீட்டி வேந்தனைப்பற்றி குசலம் விசாரித்தார்.

‘சுகமாயிருக்கிறார்.. இரத்த உறவெல்லாம் பசப்பும் பம்மாத்துமாப் போச்சுதண்ண, கடித உறையை புரட்டிக்கொண்டே’ எந்தப் பரதேசி போட்டிருக்குதோ!...

....ஓ ...பிரான்சில இருந்து வந்திருக்கு.....

கனகாலத்துக்குப்பிறகு கடிதம் போட்டிருக்கிறான்.

கடிதத்தைப் பிரிக்கவும், படிக்கவும் விருப்பற்று, அதன் உள்ளடக்கத்தைப் புரிந்தவளாய் இடுப்பில்ச் செருகினாள். கடையால் வீடு திரும்பியதும் கடிதத்தை வேந்தனிடம் கொடுத்தாள். வேந்தன் கடிதத்தைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினான்.

*அன்புமிகு வேந்தன் அண்ணன்; அக்கா, மற்றும் பிள்ளைகள் யாபேரும் அறிய, கடந்தமாதம் தங்கள் கடிதம் கிடைத்து சுகமறிந்தோம். உடன் பதில் போடாமைக்கு மன்னிக்கவும். மேலும் இங்கு நாங்கள் சொல்லவொண்ணாத் துயரத்திற்கு உட்பட்டிருக்கின்றோம். ஏற்கனவே உங்களுக்குத் தெரியும் இவர் மிகுந்த குடியென்று எல்லோரும் குடியைக் குடிக்கிறார்கள், இங்கே இவரைக் குடி குடிக்கின்றது. ஒருவருடமாக அடிக்கடி இரண்டு மூன்று நாட்கள் வைத்தியசாலையில் இருந்து விட்டு வருவார். இதையெல்லாம் உங்களுக்கு நான் தெரியப்படுத்தவில்லை. உங்கள் துயரத்தின் முன் இது எம்மாத்திரம்.*

*இப்போது இரண்டு கிழமையாக வாட்டில் இருக்கிறார். கடுமையாகத் தானிருக்கின்றது. மூன்று நாட்கள் பேச்சே இல்லாமலிருந்தார். ஒட்சிசன் ஏத்தினார்கள். தற்சமயம் கதைக்கிறார் கதைப்பது விளங்குது. உலகத்தில் எல்லாம் மாறுதலடைகின்றது, திருந்துகிறது. இவர் கலியாணம் முடிக்கும்போது இருந்த குடிதான் இன்றும். குழந்தை பிறந்தபின்னும் குறையவில்லை. உங்களுக்கு ப்ணமனுப்ப முடியாதிருக்கின்றேன். இனிச்சுகமாகிவந்து வேலைசெய்ய இயலாதென நினைக்கின்றேன். இங்கு சரியான கடன். நினைக்கும்போது தலைவெடிக்கும்போல....*

*இவ்வண்ணம்*
*மச்சாள்/ சகோதரி*

என்று முடிந்திருந்தது!

சு. கருணாநிதி – பிரான்ஸ்

# பாரிசில் தவிர்க்கப்பட்ட இரத்தக்களறி

பாரிசின் புறநகர்ப் பகுதியான லா டி பென்ஸ் சாதாரணமாக பிரான்சின் நியூயோர்க் என அழைக்கப்படும் ஒன்றாகும். ஏராளமான வானுயரமான கட்டடங்கள் எழுந்து நிற்க, நடுவே புதுமையை எடுத்துக் காட்டும் கட்டடங்கள் அமைந்திருக்க மைதானம் போன்ற வெளி; அப்பகுதிக்குள் தினசரி பல மில்லியன் மக்கள் வந்துபோகும் அங்காடித் தொகுதி. இப்படியான அழகான அந்த பகுதியில் 27 சனியன்று இடம்பெற இருந்த மாபெரும் இரத்தக்களறி பொலிசாரினதும் பாதுகாப்பு அதிகாரிகளினதும் துரித நடவடிக்கைகளினால் தவிர்க்கப்பட்டது.



பாரிசில் இருந்து சில கிலோ மீற்றர்கள் தூரத்தில் உள்ள இரண்டு நகரங்களின் இளைஞர்கள், லா டி பென்சில் கூடி தங்களது கணக்கை தீர்த்துக்கொள்ளும் முயற்சிகளை தயார் செய்தனர். சுமார் 13 முதல் 17 வயது வரையிலான இளைஞர்களே இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டார்கள். வழக்கமாகவே அப்பகுதியில் உல்லாசப் பயணிகளும் சாதாரண மக்களுமாக பல ஆயிரம் பேர் தினசரி கூடுவது வழக்கம். அதுவும் பிரான்சில் மலிவு விற்பனை காலம் நடந்துகொண்டிருக்கும் இக்காலப் பகுதியில் அந்த அங்காடித் தொகுதிக்கு வந்து செல்லும் மக்களோ பல மில்லியன்கள். கீழே தொடருந்து நிலையமோ எப்போதுமே நிறைந்திருக்கும். சனியென்றால் கேட்கவே தேவையில்லை. அன்றும் அப்படித்தான். எல்லா இடமும் நிரம்பியிருந்தது. அந்த உல்லாசப் பயணிகளும் சாதாரண மக்களும் நின்றிருந்த அந்த வெளியில் சில இளைஞர் குழுக்களும் திடீரென தோன்றத் தொடங்கின. சுமார் 300 வரையிலான இளைஞர்கள் இரண்டு குழுவாக கூடி தனித்தனியாக நின்றிருந்தனர். அப்பகுதியில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராக்களின் ஊடாக இந்த மாற்றத்தை அவதானித்தனர். உடனடியாக பிராந்தியத்தின் பொலிஸ் தலைமையகத்திற்கு இளைஞர் கூட்டம் பற்றி தகவல் கொடுக்கப்பட்டது. ஏற்கனவே அப்பகுதியில் பொலிஸ் அதிகாரிகளும் கடமையில் இருந்தனர். உசாராகிய பொலிசார் தொடருந்தில் இருந்து இறங்கியவர்களில் சந்தேகத்திற்கு இடமானவர்களையும் வெளியே நின்றிருந்தவர்களை நோக்கியும் சோதனை நடவடிக்கைகளை முடுக்கிவிட்டனர். அதுவரை நேரமும் அப்பகுதியில் கூடி சத்தமிட்டுக்கொண்டிருந்த இளைஞர்கள் மெதுவாக இடங்களைவிட்டு நகரத்தொடங்கினர். குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரும் விசேட பொலிஸ் அணியினரும் திடீரென சோதனைகளில் ஈடுபட்டு சிலரை கைது செய்தனர். சுமார் 30ற்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். இளைஞர்கள் நின்றிருந்த பகுதியில் 25 சமையலறையில் பாவிக்கும் கத்திகள் ஏராளமான கம்பிகள், சீமெந்து நிரப்பப்பட்ட குழாய்கள்,, பேஸ்போல் விளையாடும் துடுப்புக்கள், ஒரு கைத்துப்பாக்கி ஏராளமான சிறு கத்திகள், சிறு கைக் கோடாலிகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டன. ஆனால் எந்த இளைஞனும் கைது செய்யப்படுகையில் அவனிடம் எந்த ஆயுதமும் இல்லாத காரணத்தால் அவர்களை ஒன்றுமே செய்யமுடியாத நிலை பாதுகாப்பு பிரிவினருக்கு ஏற்பட்டது. ஆனால், சரியான நேரத்தில் சரியான நடவடிக்கையை மேற்கொண்டதால் சனியன்று ஏற்படவிருந்த ஓர் பெரும் இரத்தக்களறியை பொலிசார் தடுத்து நிறுத்தினர்.

இந்த கணக்கு தீர்க்கும் விடயத்திற்கு மூலகாரணம் என்ன என்பதை அறிய முற்படுகையில், பத்து நாட்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவம் அதன் காரணமாகியது. 20ம் திகதி ஜனவரியன்று மாந்த் லா ஜொலி நோக்கி சென்றுகொண்டிருந்த தொடருந்தில் 'வால்போரே' எனும் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களும் இருந்தனர். 'பொவாசி' எனும் தொடருந்து நிலையத்தில் இவ் இளைஞர்கள் மற்றொரு இளைஞர் குழுவினரால் தாக்கப்பட்டனர். தாக்கியவர்கள் 'சாந்த்லூப்' எனும் பகுதியைச் சேர்ந்தவர்கள். 'வல்போரே' இளைஞர்கள் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு பழிவாங்கும் நடவடிக்கை, மாந்தில் நடந்த விளையாட்டுப் போட்டி ஒன்றில் மேற்கொள்ளப்பட்டது. சாந்த்துலூப்பில் இருந்து சென்ற போட்டியாளர்கள் 24ம் திகதி புதன்கிழமையன்று 40ற்கு மேற்பட்ட வல்போரே இளைஞர்களால் கத்தி, கண்ணீர் புகைக்குண்டு போன்றவற்றால் கடுமையாக தாக்கப்பட்டனர். இதற்கு மீண்டும் பழிவாங்கும் நடவடிக்கை இடம்பெறலாம் என்ற அச்சத்தில், அப்பகுதி முழுவதிலும் உள்ள தொடருந்து நிலையங்களில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. அப்படி இருந்தும் அந்த இளைஞர் குழுக்கள் மூன்றாவது பொது இடமொன்றை தெரிவு செய்து தங்கள் மோதல்களை நடத்த தீர்மானித்திருந்ததை யாருமே எதிர்பார்த்திருக்க வில்லை. ஆனாலும் தகுந்த சந்தர்ப்பத்தில் பொலிசார் ஏற்பட இருந்த ஆபத்தை தடுத்து நிறுத்தியமை மக்களினதும் அப்பகுதி வர்த்தகர்களினதும் வரவேற்பை பெற்றுள்ளது.

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



## நிதர்சினி சிறீதரன்

தோற்றம்: 15.03.1987 மறைவு: 12.02.1999

திதி: 20.01.2001

மகளே !
உன் குயில்பாட்டு
எம் நெஞ்சமெல்லாம்
இசைத்துக்கொண்டேயிருக்கும்.
குத்திக் குதறி
உன் உயிர் குடித்த
கொலைக் கரங்கள்
உன் மரணத்தின்
பின்னான வாழ்வால்
மெல்ல... மெல்ல...
துடித்துத்... துடித்து..!
செத்துக்கொண்டேயிருப்பர்.

திரு. திருமதி. சிறீதரன் கமலா குடும்பத்தினர்.
*Tel: 01 39 88 27 99*
*10, Chemin Bas, 95190 Goussainville, France.*

Pub.Fr.

# ஈழமுரசு
Eelamurasu Weekly

# சிறுவர் முற்றம்

**உறுப்பினர் படிவம்**

ஈழமுரசு சிறுவர்முற்றம் பகுதியில் உங்கள் பிள்ளைகளை இணைத்துக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். கீழே உள்ள படிவத்தினை பூரணப்படுத்தி உங்கள் பிள்ளைகளின் ஆக்கத்துடன், அவர்களது நிழற்படத்தையும் இணைத்து ஈழமுரசு முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

முழுப்பெயர்:- ....................................

முகவரி:- ....................................

....................................

பிறந்த நாள்:- ....................................

கல்வி கற்கும் தமிழ்ப்பாடசாலை:- ....................................

பொழுது போக்கு:- ....................................

இங்கே உங்கள் பிள்ளையின் நிழற்படத்தை ஒட்டுங்கள்

நாள்:.................... கையொப்பம் பெற்றோர் அல்லது பிள்ளைகள்

....................................

செயலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

உறுப்பினர். எண்:- ....................................

EELAMURASU 22, Rue Perdonnet 75010 PARIS FRANCE



# ஈழமுரசு
சந்தா

சந்தா தொடர்புகளுக்கு:

**EELAMURASU S.A.R.L,**
**22 Rue Perdonnet,**
**75010 Paris, France.**
**Tel:00 33 1 40 37 63 63**
**Fax:00 33 1 40 37 64 64**

**விண்ணப்பப் படிவம்**

சுவிசிற்கான சந்தா *(தபாற் செலவுடன்)*

12 மாதம் → 130 Sfr ☐

06 மாதம் → 70 Sfr ☐

பெயர்: ....................................

முகவரி: ....................................

....................................

தொலைபேசி எண்: ....................................



# தமிழ்ப் பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு

அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம் (ITEC) தமிழ்நாடு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, தை 2001ல் ஆரம்பிக்கும் பட்டப்படிப்பு வகுப்புகள்

புலம் பெயர் மாணவர்களின் கல்வித் தேவை கருதி தமிழியலில் B.A (3 ஆண்டுகள்), M.A (2 ஆண்டுகள்) கற்கை நெறிகள் திறந்த வெளிப் பல்கலைக்கழக அமைப்பு (Open University Scheme), கல்வி விரிவக அமைப்பு (Extension Learning Programs) இரண்டிலும் ஆரம்பிக்கப்படுகின்றன.

## திறந்த வெளிப் பல்கலைக் கழக அமைப்பு (Open University Scheme)

இது ஒழுங்கான கல்வியைப் பெறமுடியாத மாணவர்களுக்காகவும், பள்ளியிலிருந்து விலகியவர்களுக்காகவும் வகுக்கப்பட்டது. இவ் அமைப்பில் இணைய எல்லா நாடுகளிலிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பள்ளிப் படிப்பை நிறைவு செய்யாத மாணவர்கள் B.A, M.A கற்கை நெறியில் சேர இத் திட்டம் வழிகோலுகிறது. எனினும், மாணவர்களுக்கு வயது தொடர்பான பின்வரும் தகைமை இருக்கவேண்டும்.

அ. B.A. தமிழியல்: 01.07.2000 ல் 18 வயது நிறைந்திருக்கவேண்டும்.

ஆ. M.A தமிழியல்: 01.07.2000 ல் 21 வயது நிறைந்திருக்கவேண்டும்.

## கல்வி விரிவக அமைப்பு (Extension Learning Programs)

இவ் அமைப்பில் சேர்வதற்குக் குறைந்த பட்சக் கல்வித் தகைமைகள் வருமாறு.

அ. B.A தமிழியல்; மாணவர்கள் 12 ஆண்டுக் கல்வித் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ஆ. M.A தமிழியல்: மாணவர்கள் பட்ட நெறித்தேர்ச்சி (B.A.B.com., Bsc, B.E.A) பெற்றிருக்கவேண்டும்.

## விண்ணப்பத் தொடர்புகளுக்கு:

**ITEC**
**Stennerstr 27, 33613 Bielefeld**
**Germany**

**Phone: (0049) 521892240**
**Fax: (0049) 5219891586**
**e-mail: itec.va @t-online.de**

# கலைந்த சொற்கள் எண்: 69

கீழ் உள்ளவற்றில் 141 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர் கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச்சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாகவும், சில சொற்கள் இரு முறையும் இருக்கின்றன.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | ம் | ம் | லு | பி | ம் | ம் | வி | ம் | ப | ம் | ம் | தை | ணி | ம் | டு |
| லா | ரு | ள | ம் | ன் | க | ர | ய | ட | ம் | த | ல் | ச | ட | க | ண் |
| ம் | ள | வ | க | ன | ய | வா | க | தி | ந் | த | ம | கு | பா | இ | வ |
| ய | ர | ப | ம் | ம் | தா | து | ல் | த | த் | ரி | ம | ண | ப் | பெ | ண் |
| தி | ச | ல் | த | த் | ளி | மா | ச | கி | த் | ச | இ | ம் | மா | இ | பொ |
| த் | வ | ரை | த் | இ | த் | ம | ச | த | ல் | ம் | ய | ம | ச | லை | மா |
| ப | கை | லா | சி | தி | த | ர | ல் | லி | த | தி | பு | னி | த | ன் | ம் |
| ம் | ங் | ல் | ரை | பி | ல் | ம் | பா | த் | த் | வு | ரி | பி | த் | த | ம் |
| ச | ல | வ | ரு | ட | ம் | ம் | ச | பா | பி | த | ற | ச | ம | த | ல |
| றை | ச | கா | க | ம் | ல | த | ம் | ம் | ச | ப் | ல் | ம் | ந் | இ | ல் |
| வ | ல | ம் | ல | நி | ம | ச | த | ம | பு | வி | ச | சா | த | ம | வெ |
| ரு | ச | ச | க் | சி | லா | ப | ம் | ட | ட் | வ | ற | வி | ம் | ந் | ம் |
| க | ஞ் | ல் | க | னை | ச | ப | ல | ம் | வ | ர் | க | து | ப | ய | ம |
| ச | த் | த | ம் | ன | ன் | மு | கா | கா | யி | ம் | மு | ன | தி | த் | இ |
| ப | ரு | த் | தி | றி | ப | ற | லா | று | ல | ச | க | ப | க | த | து |
| ழ | பூ | வ | ற் | ற | ல் | சீ | ற் | ற | ம் | ம் | மூ | வ | ள் | ள | ல் |
| ம | ர | சி | ம் | ப | லா | சி | கு | சி | ல் | பா | டி | சு | ட | ர் | ம் |
| னை | ண | னி | ம் | ம | க் | க | ள் | த | வ | தி | ல | க | ம் | வு | ல |
| பு | ம் | ழ | கு | ட | கு | வா | ர் | ம் | ர | த் | பா | க | ம் | ல் | ட |
| து | ந் | ழை | கு | ங் | வி | ட | ப | ப | இ | த | மா | ன | த | த | ண் |
| தை | ந் | ழ | கு | கு | ப | டி | ம் | ர | கா | ல் | ணு | டு | ந் | ரி | ம |
| ம் | ய | ம | இ | ம் | ரு | ப | மு | ம் | ப | லி | வா | இ | சொ | ச | இ |
| ல | ம் | தி | பா | ப | ர | க் | இ | பொ | அ | அ | னு | ழ் | க் | ல | ட |
| ந | த | யி | ர | ம் | ஞா | கு | க | ரு | ம் | பு | ல | கை | க் | ங் | க் |
| ய | ந் | லி | ம் | வ | ன | வ | வ | ள் | ப் | ச | க | கு | வ | கை | கை |
| சு | ப | கா | ரி | ய | ம் | ம் | ய | ணி | ண் | பு | ம் | க | க் | ழு | ம |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாரம் | ஞானம் | காரம் | பாகம் | சுடர் | லாபம் | பத்தியம் | சம்மதம் | சபித்தல் | சமயம் | சமநிலம் |
| சகித்தல் | சகுணம் | சத்தியம் | குங்குமம் | சமாதானம் | சமாளித்தல் | சயனித்தல் | சலித்தல் | தாளித்தல் | சாந்தம் | வெல்லம் |
| தசமம் | மந்தம் | சிற்றின்பம் | வற்றல் | சிற்றுயிர் | சம்பாத்தியம் | மணமாலை | மடங்கு | வண்டு | மரித்தல் | பித்தம் |
| சிற்றன்னை | சிவத்தல் | சிலகாலம் | சில்லறை | தம்பதிகள் | சிலாபம் | சபலம் | பலகாலம் | தாயகம் | சஞ்சலம் | வல்லாரை |
| தும்மல் | விபத்து | சம்பாதித்தல் | சம்மதம் | சத்தம் | வட்டம் | மகுடம் | மணப்பெண் | பதியம் | கவளம் | புனிதன் |
| மக்கள் | திரவம் | பருவம் | சித்தம் | மாத்திரை | பவளம் | தகரம் | விரயம் | விம்பம் | தந்தம் | பின்னம் |
| சலங்கை | துவாரம் | மாமரம் | மரித்தல் | சபதம் | கருவறை | கலக்கம் | வருடம் | பிறப்பு | கர்வம் | முன்னம் |
| பல்லாக்கு | பருத்தி | பங்குனி | மகுடம் | படர்தல் | சிதம்பரம் | பரம்பொருள் | பம்பரம் | குருக்கள் | குழம்பு | குழந்தை |
| மதியிலி | சீற்றம் | பூரணம் | பழமனை | குழைந்து | கும்பம் | திரவம் | பக்குவம் | இமயம் | சுயநலம் | பந்தம் |
| முடிவிடம் | இருப்பு | அருவம் | இரவல் | இதமான | தினமும் | முகமூடி | திலகம் | வானுலகம் | கரும்பு | வாடுதல் |
| வாலிபம் | புண்ணியம் | சலங்கை | இலக்கு | மழுக்கம் | இடக்கை | மசக்கை | சொந்தம் | சரிதல் | மண்டலம் | வள்ளல் |
| தளர்வு | பாசம் | காவல் | நிலம் | மடம் | திடம் | இடம் | இகம் | பாசம் | பாடம் | களம் |
| வலம் | பிரிவு | தம்பி | துறவி | கசம் | காலம் | இல்வாழ்க்கை | | சுபகாரியம் | | |

மேலுள்ள அட்டவணையில் பல பழமொழிகள் கலைந்திருக்கின்றன. அவற்றில் 3 பழமொழிகளை எழுதி அனுப்பவும். நீங்கள் எழுதும் பழமொழிகளில் மேலுள்ள எழுத்துக்களை தவிர, வேறெந்த எழுத்துக்களையும் சேர்க்கக்கூடாது. முடியுமா ?

1: ..........................................................................................................

2: ..........................................................................................................

3: ..........................................................................................................


பெயர்:..........................................................................................................

முகவரி:..........................................................................................................

..........................................................................................................

பிறந்த நாள்:.............................................. சந்தாதாரராயின் சந்தா எண்:..............................

## கலைந்த சொற்கள் எண்–68 விடைகள்



ஈழமுரசின் சென்ற கலைந்தசொற்கள் பகுதிக்கு 200 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) திருமதி மாலா தங்கராஜா
58239 Schwerte,
Germany.

2) யோகா சிறீதரன்
59071 Hamm,
Germany.

3) செல்வன் ம. மதுசன்
8400 Ebeltoft,
Denmark.

4) திரு. சிறீதரன் நிரூஜன்
45478 Mulheim AN Ruhr,
W.Germany.

5) ஆறுமுகம் கனகராஜா
60486 Frakfurt,
Germany.

LUNE

இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

கலைந்த சொற்கள் எண்-69 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 70ம், 22 - 28 பெப்ரவரி 2001 ஈழமுரசில் வெளிவரும்.

**தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா**

கலைந்த சொற்கள் எண்-69 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: **16.02.2001**
(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

**கலைந்த சொற்கள்**
**Eelamurasu**
**22, Rue Perdonnet,**
**75010 Paris, France.**

# மைலந்தனை படுகொலை

## இராணுவத்தைக் காக்க அரசு இழுத்தடிக்கும் விசாரணை

(மட்டக்களப்பிலிருந்து
எஸ். ஜெயானந்தமூர்த்தி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 92ம் ஆண்டு பலரையும் திடுக்கிட வைத்த மைலந்தனை படுகொலைச் சம்பவத்தின் வழக்கு விசாரணை கடந்தவாரம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமானபோதிலும் ஒரு சாட்சி வெளிநாட்டில் வேலை செய்வதால் ஆனி மாதத்திற்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு ஆறு வருடகாலமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் தவணை போடப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு — பொலனறுவை மாவட்டத்தின் எல்லையில் மைலந்தனைக் கிராமம் உள்ளது. இக்கிராமத்திற்கு அருகில் புனாணை சிறீலங்கா படைமுகாம் இருந்தது. 1992ம் ஆண்டு ஆகஷ்ட் மாதம் எட்டாம் திகதி யாழ்ப்பாணம் அராலித்துறையில் அமுக்க வெடியில் யாழ். படைத்தளபதி மேஜர் ஜெனரல் கோபேகடுவ பலியானதற்கு பழிவாங்குமுகமாக மறுநாள் மைலந்தனையில் சிறீலங்கா படையினர் நடத்திய கொடூரமான மனிதவேட்டையில் 35 பொதுமக்கள் பலியானதுடன் 10 பேர் வரையில் காயமடைந்தனர்.

அன்று நண்பகல் மைலந்தனைக் கிராமத்திற்குச் சென்ற படையினர் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்களையும் வீடுகளில் இருந்தவர்களையும் ஒரு இடத்திற்கு அழைத்து கத்தியால் வெட்டியும், பொல்லுகளால் அடித்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குலிலிருந்து பலர் தப்பியோடி காடுகளுக்குள் மறைந்து கொண்டனர். இத்தாக்குதலை நடத்திவிட்டுப் படையினர் சென்றபின்பே அவ்விடத்திற்கு காட்டுக்குள் மறைந்திருந்தவர்கள் சென்று பார்த்த போது ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக பலர் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். பின்னர் இவர்கள் சடலங்களை அவ்விடத்திலே விட்டுவிட்டு கையில் அகப்பட்ட பொருள்களையும் காயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு காட்டுவழியாக நடந்து சென்று வாழைச்சேனையை அடைந்தனர். மறுநாளே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இச்சடலங்கள் வாழைச்சேனைக்கு எடுத்து வரப்பட்டன. இப்படுகொலைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களெனக் கருதப்பட்ட புனாணை படைமுகாமைச் சேர்ந்த சிறீலங்காப் படையினர் 92ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் 24 படையினர் அடையாளம் காட்டப்பட்டனர். இவர்களுக்கு எதிரான வழங்கு 02.04.1993 அன்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் சந்தேக நபர்களான படையினர் மட்டக்களப்பு நீதிமன்றில் வழக்கு நடைபெறுவதால் தமக்குப் பாதுகாப்பில்லையெனவும் வழக்கை வேறிடத்திற்கு மாற்றுமாறும் தமது சட்டத்தரணிகள் மூலம் மனுத்தாக்கல் செய்ததை அடுத்து இவ்வழக்கு பொலனறுவை நீதிவான் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு அங்கு 11.10.1993 அன்று வழக்கு விசாரணைகள் ஆரம்பமானது.

இந்த வழக்கில் சாட்சிகளின் நலனைக் கவனித்து வந்த மேர்ஜ் என்ற நிறுவனம் பொலனறுவைக்கு வழக்கு மாற்றியதை ஆட்சேபித்ததுடன் சாட்சிகளுக்குப் பாதுகாப்பில்லையெனவும், இக்கொலைச் சம்பவம் மட்டக்களப்பு நீதிபரிபாலன எல்லைக்குள் நடைபெற்றுள்ளதால் மட்டக்களப்பிலேயே நடத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்து மனுத்தாக்கல் செய்தது. ஆனால் மட்டக்களப்புக்கு மாற்றப்படாமல் பொலனறுவை நீதிவான் நீதிமன்றிலே தொடர்ந்து நடைபெற்றதுடன், 08.03.94 அன்று சந்தேக நபர்களான 24 படையினரில் மூவர் இக்கொலைச் சம்பவத்தில் சம்பந்தப்படாதவர்களெனத் தீர்ப்பளித்து அவர்களை விடுதலை செய்ததுடன் 21 பேருக்கும் எதிரான வழக்கை மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்துவதாக நீதிமன்றம் உத்தரவிட்டது. பின்னர் 1995ம் ஆண்டில் கொழும்பு மேல் நீதிமன்றுக்கு வழக்கு மாற்றப்பட்டபோதிலும் சாட்சிகளின் சாட்சியங்கள் சிங்களத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்படாத காரணத்தினால் சுமார் ஆறு வருடகாலமாக தவணை போடப்பட்டு வந்துள்ளதே தவிர வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. சாட்சிகளின் நன்மை கருதி இந்த வழக்கை மட்டக்களப்பு மேல் நீதிமன்றுக்கு மாற்றுமாறு மேர்ஜ் நிறுவனம் மீண்டும் மனுத்தாக்கல் செய்தபோதிலும், இவ்வழக்கு மட்டக்களப்புக்கு மாற்றப்படவில்லை. இந்த வழக்கின் சாட்சிகள் தற்போது வாழைச்சேனை விநாயகபுரத்திலுள்ள அகதிமுகாமில் வசித்து வருகின்றனர். இவர்கள் ஒவ்வொரு தவணைக்கும் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்குச் சென்று வரவேண்டியுள்ளது.

அகதி முகாமில் அன்றாடம் சாப்பாட்டுக்கே வழியில்லாது திண்டாடும் இவர்கள் கொழும்புக்குச் சென்றுவருவதில் பல பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். படையினருக்கு எதிரான சாட்சிகளாக உள்ள இவர்களுக்குத் எந்தவித பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. அத்துடன் போக்குவரத்துக்குக்கான செலவு மாத்திரமே நீதிமன்றத்தினால் வழங்கப்படுகின்றதே தவிர தங்குமிடம், உணவு என்பனவற்றை இவர்களே கவனிக்க வேண்டி உள்ளது. எனினும் கடந்த காலங்களில் மேர்ஜி சில உதவிகளை வழங்கிவந்தது. ஆனால் இவர்கள் வழக்குக்குச் சென்று வரும் நாட்களில் குடும்பத்திற்கு வருமானம் இல்லாததால் அவர்கள் பெரும் கஸ்டங்களை அனுபவித்து வருகின்றனர். வயல்வேலைகளிலும் காட்டுக்குச் சென்று விறகு சேகரித்து விற்றும் கூலி வேலை செய்துமே தமது வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர்.

> **படையினருக்கு எதிரான சாட்சிகளாக உள்ள இவர்களுக்குத் எந்தவித பாதுகாப்பும் வழங்கப் படவில்லை.**

தற்போது இந்த வழக்கின் சாட்சிகளின் நலனை மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் கவனித்து வருகின்றது. இது தொடர்பாக இந்த அமைப்பின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில், சாட்சிகள் வாழைச்சேனையில் இருந்து ஒவ்வொரு தவணைக்கும் பல கஸ்டங்களுக்கு மத்திலேயே கொழும்புக்குச் சென்று வருகின்றனர். எமது நிறுவனமும் பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்தே இவர்களின் நலனைக் கவனித்து வருகின்றது. இந்த வழக்கு உண்மையில் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் பொதுமக்களின் நலனைக் கவனத்தில் எடுக்காமல் படையினரின் நலனை மாத்திரமே கவனத்தில் கொண்டுள்ளனர். அத்துடன் இக்கொலை வழக்கின் சாட்சிகளுக்கு எந்தவிதப் பாதுகாப்புமில்லை. தனியாக வந்து தனியாகச் செல்கின்றனர். இதுவும் அவர்களுக்கு ஒரு பிரச்சினையாக உள்ளது என்றார். இந்த வழக்கின் சாட்சிகளில் ஒருவரான இராசன் கிட்ணன் (50) தெரிவிக்கையில், நாங்கள் நீண்டகாலமாக இந்த வழக்குத் தொடர்பாக அலைந்து திரிகின்றோம். ஆனால் இதுவரை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதனால் நம்பிக்கை இழந்தவர்களாகவே உள்ளோம். அத்துடன் இந்த வழக்குச் சென்று வரும் ஒவ்வொரு வேளையிலும் எங்களுக்கும் பணச்செலவு ஏற்படுகின்றது. இதனால் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றோம் என்றார். பொதுமக்கள் படுகொலையில் படையினர் சம்பந்தப்பட்டுள்ளது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த வழங்கு வேண்டுமென்றே காலம் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. இதுபோல் வடக்குக் கிழக்கில் இடம் பெற்ற பொதுமக்கள் படுகொலையுடன் படையினர் சம்பந்தப்பட்ட பல சம்பவங்கள் உள்ள போதிலும் உடனடியாக வழக்கு விசாரணையோ அல்லது சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை.

மட்டக்களப்புக் கொக்கட்டிச்சோலையில் 28.01.1987 அன்று இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தில் 180 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. இச்சம்பவத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் கப்டன் குடலிகமே தலைமையிலான படையினர் என ஆணைக்குழு தெரிவித்ததுடன், இவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யமுடியும் எனவும் ஆலோசனை தெரிவித்திருந்தது. ஆனால் இவருக்கு எதிராக அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக இவர் வேலை நீக்கம் செய்யப்பட்டு ஒரு கூட்டுத்தாபனத்தில் தலைவர் பதவி வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

> **வடக்குக் கிழக்கில் இடம் பெற்ற பொதுமக்கள் படுகொலைச் சம்பவங்களுடன் நேரடியாகப் படையினர் ஈடுபட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரே தவிர இவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை துரிதப்படுத்தப்படவோ தண்டனை வழக்கவோ இல்லாமல் காலம் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.**

1994ம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள குமரபுரத்தில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் 8 படையினர் சந்தேக நபர்களாகக் காணப்பட்டு கைதானதுடன் இவர்களுக்கு எதிரான வழக்கும் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்கிற்கான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை. இதனால் வழக்கு விசாரணை

இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. கிருசாந்தி கொலை வழக்கின் மரண தண்டனைக் கைதிகள் செம்மணி புதைகுழி தொடர்பாக பல படை அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்த போதிலும், அவர்கள் மீது இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மட்டு. வந்தாறு மூலை கிழக்குப் பல்கலைகழகத்தில் இயங்கி வந்த அக்தி முகாமில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 05.09.1990 அன்று 150 பேரும், அதே மாதம் 23ம் திகதி 16 பேரும் படையினரால் கைதாகிக் காணாமல்போயுள்ளனர். இதேபோல் சத்துருக்கொண்டானில் 09.09.1990 அன்று அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் இவர்கள் திருப்பி வரவேயில்லை. இப்பொது மக்கள் அங்குள்ள படைமுகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்ட பின்னர் புதைக்கப்பட்டுள்ளதாக இச் சம்பவத்திலிருந்து தப்பிச் சென்ற ஒருவர் கூறியுள்ளார். சித்தாண்டி முருகன் கோயில் அகதி முகாமில்வைத்து 02.08.1990 அன்றும் 28.08.1990 அன்றும் இடம் பெற்ற சுற்றிவளைப்பில் 64 பேர் படையினரால் கைதாகிக் காணாமல் போயுள்ளனர். இக்கைது மற்றும் காணாமல் போனது தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை செய்து இதில் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அண்மையில் இடம் பெற்ற மிருசுவில் படுகொலைச் சம்பவத்திலும் இதுவரை 12 படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இந்த வழக்கு விசாரணையும் எந்தளவுக்கு முன்னெடுத்துச் செல்லப்படும் என்பது புரியவில்லை.

எனவே வடக்குக் கிழக்கில் இடம் பெற்ற பொதுமக்கள் படுகொலைச் சம்பவங்களுடன் நேரடியாகப் படையினர் ஈடுபட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரே தவிர இவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை துரிதப்படுத்தப்படவோ தண்டனை வழக்கவோ இல்லாமல் காலம் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. இக்கொலை வழக்குகளின் காலம் இழுத்தடிக்கப்படும் வேளையில் சாட்சிகளின் ஞாபக மறதி மற்றும் சலிப்புத் தன்மையாரணமாக சில வேளைகளின் தள்ளுபடி செய்யப்படவும் இடமுண்டு என சிரேஸ்ட சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார். இதே நிலைதான் மைலந்தனைப் படுகொலை வழக்குக்கும் ஏற்படும என்றே தோன்றுகிறது.

# புத்திசிகாமணி பதில்கள்

★ இரண்டாயிரமாம் ஆண்டு தமிழ் இலக்கியத்துக்கு புகலிடத்தமிழ் இலக்கியம்தான் தலைமையேற்கும் என முன்பொருமுறை மூத்த ஈழத்து இலக்கியவாதி மு.பொன்னுத்துரை கூறியிருந்தாரே. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

*ச. கஜேந்திரன்*
*ஒஸ்லோ - நோர்வே*

❢ அவரது எதிர்பார்ப்பின் நியாயத் தன்மையை எம்மால் உணர முடிகின்றது. பல்லாயிரக்கணக்கான ஈழத்துத் தமிழர்கள் பல்வேறு நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் சூழலில் அந்தந்த நாடுகளின் உயரிய கலை இலக்கிய வடிவங்களை உள்வாங்கவும் பிரதிபலிக்கவும் ஈழத்து கலை இலக்கியப் படைப்பாளிகளுக்கு இருக்கும் வாய்ப்பினை நாம் மறுதலிக்க முடியாதல்லவா. அத்துடன் புலம்பெயர் வழி அவலங்களும் வாழ்வனுபவங்களும் உச்ச இலக்கியப்படைப்புகள் உருவாக கருவூலங்களாகவும் உள்ளன.

★ சிறீலங்காப் படையினரின் ஆனையிறவு நோக்கிய பயணம் தற்போது எந்த நிலையில் இருக்கிறது?

*க. கலைச்செல்வன்*
*டூட்டிங் - லண்டன்*

❢ புலிகளின் போர் நிறுத்தமும் அவர்களின் கனவுப் பயணத்திற்கு கைகொடுக்காத நிலையில் ஆரம்பத்திலேயே தடுமாறிப்போய், வெறும் வெற்[று]றி அறிக்கைகளுடன் நிற்கிறது.

★ கடந்த ஆண்டு சிறந்த தமிழ் திரைப்படமாக படையப்பாவை தமிழக அரசு தெரிவு செய்துள்ளது சரியா?

*சி. மோகன்*
*சார்சல் - பிரான்ஸ்*

❢ தமிழக ஆட்சியாளர்களின் எதிர்கால அரசியலுக்கு அந்தத் தெரிவு தேவைப்படுகிறது.

★ 04.02.2001 சிறீலங்காவின் சுதந்திரதினமாம். சில வரிகளில் இதுபற்றிக் கூறுங்கள்?

*இ. ஐங்கரன்*
*சுக் - சுவிஸ்*

❢ வைரமுத்துவின் கவிதை வரிகளை சிறிது மாற்றிச் சொல்லலாம்.

**04.02.1948**
**தமிழர்கள்**
**வேட்டிக்கனவுகளுடன்**
**இருந்தபோது**
**சிங்களப்பேரினவாதிகளால்**
**அவர்கள்**
**கட்டியிருந்த கோவணமும்**
**களவாடப்பட்டது!**

★ சிறீலங்கா அரசு தனது பணத்தின் பெறுமதியை மிதக்கவிட்டுள்ளது பற்றி...?

*தி. நளாயினி*
*பிராங்பேட் - ஜேர்மனி*

❢ நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரின் விளைவுதான் இது. தமிழர்களின் நியாயமான உரிமைகளைத் தரமறுக்கும் சிறீலங்கா அரசு, நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்து தேசத்தையும் அந்நியரிடம் விற்றுக்கொண்டிருக்கிறது.

★ அரசிற்கு ஆலோசனை வழங்குவதைவிடுத்து இனப்பிரச்சினைக்கு தீர்வுத்திட்டத்தை முன்வைக்குமாறு புலிகளுக்கு அழுத்தம் கொடுங்கள் என தமிழ் கட்சிகளுக்கு அரசு கோரிக்கை விடுத்துள்ளது பற்றி....?

*சி. ரவீந்திரன்*
*துலூஸ் - பிரான்ஸ்*

❢ அது கோரிக்கை அல்ல! எச்சரிக்கை. எமது காலைப் பற்றிக்கொண்டு வாயை மூடிக்கொண்டிருங்கள். இல்லாவிட்டால் விபரீத விளைவுகளை எதிர்கொள்வீர்கள் என அரசு தமிழ் கட்சிகளுக்கு விடுத்திருக்கும் ஒருவகை மிரட்டல்.

★ தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானியா அரசு தடைசெய்யுமா?

*பா. நர்மதா*
*ரொறன்டோ - கனடா*

❢ செய்யாது என்றே எதிர்பார்க்கிறேன். பெரும்பான்மைக்கு மதிப்பளிக்கும் ஜனநாயக பாரம்பரியம் கொண்ட நாடு பிரித்தானியா. தமிழ் தேசியத்தின் அபிலாசைகளை பிரதிபலிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்ய முன்வராது என்றே எதிர்பார்க்கலாம். அத்துடன் தனியரசுகளாக வாழ்ந்த தமிழ் மக்களை தனது நிர்வாகத்தேவைக்காக பிரித்துவிட்ட பிரித்தானியாவுக்கு, எமது பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு உதவவேண்டிய தார்மீகக் கடமையும் உண்டல்லவா.

★ பூமியதிர்ச்சியை முன்கூட்டியே தெரிந்து கொள்வதற்கு வழியே இல்லையா?

*ஆ. சங்கரி*
*சூரிச் - சுவிஸ்*

❢ இதுவரை இல்லை. சில ஆரூடங்கள் கூறப்படுவதுண்டு. ஆனால் குறிப்பிட்ட இடத்தில், திகதியில், நேரத்தில் இந்த இயற்கைச் சீற்றம் நடைபெறும் என்று முன்னறிவிப்புச் செய்ய மனிதனால் இன்னும் முடியவில்லை.

★ புகலிடத்தில் எமது பிள்ளைகள் தமிழ் மொழியை கட்டாயம் படிக்கத்தான் வேண்டுமா?

*த. கலைச்செல்வி*
*கேளின் - ஜேர்மனி*

❢ பெற்றதாயை மதிக்கத்தான் வேண்டுமா? என்பது போல் உள்ளது இக்கேள்வி. நிகழ்காலத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திலும் புகலிடத்திலும், தாயகத்திலும் தமிழ் சமூகத்தில் ஏற்படப்போகும் பல மாற்றங்களுக்கும், புகலிடத்தமிழ் சிறார்களுக்கு தமிழ்க் கல்வியை கற்பித்தலே அத்திவாரத்தை ஏற்படுத்திக்கொடுக்கப்போகிறது.

**கேள்விகளை அனுப்ப விரும்புபவர்கள்**
**புத்திசிகாமணி பதில்கள்**
**CHEZ EELAMURASU**
**22, Rue Perdonnet,**
**75010 Paris - France.**
அல்லது **E.Mail-eelamurasu@noos.fr**
**எனும் முகவரிக்கு அனுப்பவும்.**


# முதலாம் வருட நினைவு அஞ்சலி



**செல்வி தாட்சாயினி மன்மதராஜா**

மலர்வு:
07.04.1984

உதிர்வு:
21.01.2000

திதி: 08.02.2001

வானத்து வெண்ணிலவே...எம்
பொன்வண்ணத் தேரே....
ஞானத்தில் சிறந்தவளே...எம் செல்வ
மகளே....
எம் மோனத்தைக் கலைத்துவிட்டு...நீ....
கானல் நீராய் போனதெங்கே....?

தத்தித் தத்திவரும் உன்னுயிர்த்
தங்கை கண்ணில் படுவதேனோ.....
சுத்திச் சுத்தி அவள் கைகோர்த்து
நடப்பதும் ஏனோ...
பித்துப் பிடித்துத் துடிக்கும்
எம் கண்ணில் புலப்படாயோ...
கத்திக் கதறி அழும் எமக்காறுதல்
தாராயோ....
புத்தி கெட்டுத் தவிக்கின்றோம்..... எம்
செல்வமே...
பத்தி எரியுது கண்ணம்மா எம்
வயிறுகள்...
கத்தி முனையாய் உறுத்துதே உன்
பிரிவுதான்...
உன்னுயிர் தங்கை கண்ணில்
தோன்றும்... நீ...
எம் எண்ணத்திலும் ஆற வாராயோ.....?
எப்பிறவியிலும் நீயே எம் திரவியமாய்
வந்துதிக்க வரம் வேண்டும்

*அப்பா, அம்மா, தங்கை உற்றார் உறவினர்கள்*

*தகவல்: ரவி, ராசா -சுவிஸ்*
*தொலைபேசி: 021 646 12 93*

# இலக்கியம்தான் எனது அஸ்திவாரம்

## 'தென்பாண்டிச் சிங்கம்' இயக்குநர் இளையபாரதி

கலைஞரின் 'தென்பாண்டி சிங்கம்' தொலைக் காட்சித் தொடரை இயக்கிய இளையபாரதி, 'விசாரணைகள்', 'சூரியனைத் தொடாத சூரியகாந்திகள்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இப்போது 'மரணத்தின் நட்சத்திரங்கள்' எனும் கவிதைத் தொகுதியை வெளியிட உள்ளார். பல்வேறு பத்திரிகைகளில் உதவியாசிரியராக பணியாற்றியுள்ளார். சில திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார். சில திரைப்படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றியிருக்கிறார். தொலைக்காட்சித் தொடர்களை இயக்கி வருகிறார். இப்படி பல்வேறு பரிமாணங்களைக்கொண்ட இளையபாரதி இணையத்தளம் 'சுவடி'க்காக வழங்கிய அனுபவங்களில் இருந்து...



வறுமை, கண்ணீர், பிரச்சினை... இதுதான் நான் பிறந்த குடும்பச் சூழல். அப்பா சாமிநாதன் சாதாரண விவசாயி. எனக்கு பத்து வயது இருக்கும்போது மாயூரம் நகராட்சிப் பூங்காவில் கலைஞர் பேசியதைக் கேட்டேன். அது, எம்.ஜி.ஆர். பிரிந்துபோயிருந்த நேரம். கலைஞரின் பேச்சும் தோற்றமும் என்னை வெகுவாக வசீகரித்தன. கலைஞரின் எழுத்துக்களில் பெரிய ஈடுபாடு ஏற்பட்டது. அப்போது 'நெஞ்சுக்கு நீதி' முதல் பாகம் வெளிவந்தது. அதை நூலகத்துக்குச் சென்று தவறாமல் படித்தேன். அந்த இனம்புரியாத சின்ன வயதிலேயே எனக்கொரு வேகம் ஏற்படக் காரணமாக இருந்தது கலைஞர்தான்.

கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி', கண்ணதாசனின் 'வனவாசம்', தொ.மு.சி. ரகுநாதனின் 'புதுமைப்பித்தன் வரலாறு', வெ. சாமிநாத சர்மாவின் 'கார்ல் மார்க்ஸ்' இந்த நான்கு நூல்களும்தான் வறுமையிலிருந்தும் கஷ்டத்திலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் ஒரு மனிதன் மீண்டு வைராக்கியத்தோடு சாதனைகளை செய்யமுடியும் என்பதை மெய்ப்பித்தன. 'சிகரம்' இதழில் பணியாற்றினேன். அதுவும் நின்றுவிட்டது. இன்குலாப், இளவேனில் போன்றவர்களின் எழுத்துக்கள் என் பார்வையை மாற்றின. ஜெயகாந்தன், புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி ஆகியோரின் எழுத்துக்கள் அறிமுகமாகி என் பார்வையை மேலும் விசாலப்படுத்தின. அப்போதுதான் என் முதல் கவிதைத் தொகுதியான 'விசாரணைகள்' நூலைக் கொண்டு வந்தேன். அதில் இலக்கியத் தரம் எதுவும் இல்லை. ரொம்ப அசட்டுத்தனமான நூல் அது. அப்போது கோமல் சுவாமிநாதனைச் சந்தித்தேன். அவர் என் கவிதைகளைப் படித்துப் பாராட்டினார். அதோடு, அவருடைய 'அனல் காற்று' படத்திலே எல்லா பாடல்களையும் எழுதுகிற வாய்ப்பையும் கொடுத்தார். அவரது 'அசோகவனம்', 'ஒரு இந்தியக் கனவு', 'யுத்தகாண்டம்' ஆகிய மூன்று படங்களிலும் பணியாற்றினேன். அவருடைய நாடகங்களில் பங்குகொண்டேன். இவையெல்லாம் எனக்கு நல்ல பயிற்சியாக அமைந்தன.

திடீரென அப்போது ஜெயகாந்தன் மீது மிகுந்த காதல் ஏற்பட்டுவிட்டது. அவரின் எழுத்தாலும் பேச்சாலும், தோற்றத்தாலும் வசீகரிக்கப்பட்டு ஆட்கொள்ளப்பட்டேன் என்றே சொல்லவேண்டும். பிறகு எடிட்டர் லெனின் அறிமுகம் கிடைத்தது. அவரின் மூலம் சிறுமுகை ரவியின் நட்பு கிடைத்தது. அவரின் 'ராகங்கள் மாறுவதில்லை' படத்தில் பணியாற்றினேன். 'அலை ஓசை' எனும் தலித் பிரச்சினையைப் பேசிய படம் அது. அதில் தலித்துகள் ஆலயப் பிரவேசம் செய்கிற காட்சிக்கு இளையராஜாவின் இசையில் ஒரு பாடல் எழுதினேன். அந்தப் பாடல் இளையராஜாவுக்கு ரொம்ப பிடித்திருந்தது.

**✪ திரைப்படத்துறை சார்ந்த உங்கள் வளர்ச்சியைச் சொன்னீர்கள். இலக்கியத்தில் உங்கள் வளர்ச்சிப் போக்கைத் தெரிந்துகொள்ளலாமா?**

திரைப்படத் துறையில் நான் செயல்பட்டாலும் இலக்கியம்தான் என்கு அஸ்திவாரம். 1986ல் 'சூரியனைப் பார்க்காத சூரியகாந்திகள்' எனும் இரண்டாவது கவிதைத் தொகுதியைத் தயாரித்தேன். அதை கலைஞர்தான் வெளியிட வேண்டும் என்ற பிடிவாதத்தோடு, சின்ன குத்தூசியின் உதவியால் ஆற்காட்டாரின் மூலமாக கலைஞரைச் சந்தித்தேன். அப்போது, கலைஞர் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலும், அண்ணா அறிவாலயம் கட்டுவதிலும் தீவிரமாக இருந்தார். தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்கிறார். அதனால், கலைஞரின் அறிமுகம் கிடைப்பதற்கே ஆறு மாதங்கள் ஆகிவிடுகிறது. அதற்குப் பிறகுதான் அந்த நூலை கலைஞர் வெளியிட்டார். உண்மையில், எனக்கு திருப்தி அளித்த கவிதைத் தொகுதி அது கிடையாது. ஆனாலும், கலைஞர் அதை உயர்வாகப் பேசி, என் பெயருக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறார். பின்பு அவரின் 'ஒரே ரத்தம்' படத்தில் பாடல் எழுத வைக்கிறார். அதன்பின் ஆற்காட்டார் எனக்காகவே 'காவலுக்குக் கெட்டிக்காரன்' எனும் படத்தை எடுத்தார். அந்தப்படம் சுமாராகத்தான் ஓடியது. அது மட்டும் நன்றாக ஓடியிருந்தால், சூழ்நிலை வேறுமாதிரியாக மாறியிருக்கும். இந்தச் சூழலில் தமிழக அரசியல் சூழலில் ஒரு மோசமான நிலை ஏற்பட்டது. அப்போது எனக்குச் சின்ன இடைவெளி கிடைத்தது. அப்போதுதான் கோமல் சுவாமிநாதன் என்னை ஒரு பத்திரிகை நடத்த அழைத்தார். அதுதான் சுபமங்களா, இதற்கிடையில், குங்குமத்தில் நூற்றுக்கணக்கான பேட்டிகள் எடுத்திருக்கிறேன்.

ஒருவருடைய வாழ்க்கையையும் அவரின் பின்புலத்தையும், அவர்கள் எப்படி உருவானார்கள் என்பதையும் தெரிந்துகொள்வதில் எனக்கு ரொம்ப சந்தோசம் இருந்தது. பாவை சந்திரனோடு சேர்ந்து குங்குமம், வண்ணத்திரை, முத்தாரம் போன்ற பத்திரிகைகளில் எல்லாம் எழுதினேன். முத்தாரத்தில் தொடராக வெளியிடுவதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் வி.பி. சிந்தனிடம் நான் எடுத்த பேட்டியை தமிழ் புத்தகாலயம் 'நான் ஏன் கம்யூனிஸ்ட் ஆனேன்' என்ற சிறு புத்தகமாக வெளியிட்டிருக்கிறது. இத்தகைய பின்புலம்தான் என்னை கோமலோடு இணைந்து 'சுபமங்களா' பத்திரிகையில் பணிபுரிய காரணமாய் அமைந்தது. தமிழில் தீவிரமான இலக்கியப் பத்திரிகையாகவும், எல்லாருக்குமான மேடையாகவும் ஜனநாயகபூர்வமாக அது அமைந்தது. அதில் வெளிவந்த பேட்டிகள் ரொம்ப முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன. அடுத்த இதழ் பேட்டி யாருடையது என்று கேட்கிற அளவுக்கு அமைந்தது. அதையெல்லாம் பின்னர் தொகுத்து நர்மதா பதிப்பகம் 'கலைஞர் முதல் கலாப்ரியா வரை' என்ற நூலாக வெளியிட்டது. இந்நூல்தான் தமிழ் படைப்பாளிகளின் ஆவணமாக பதிவுகளாக அமைந்துள்ளது. வெளிப்படையாக விவாதிக்க முடியாத சில காரணங்களால் 'சுபமங்களாவை' தொடர முடியவில்லை.

**✪ புதுமைப்பித்தன் அவரது மனைவிக்கு அந்தரங்கமாக எழுதிய கடிதங்களை நூலாக வெளியிட்டது சரியில்லை என்றொரு கருத்து இருக்கிறதே?**

புதுமைப்பித்தன் 1932ல் திருமணம் செய்துகொள்கிறார். 1948 இறந்துவிடுகிறார். 16 வருடம் தனது மனைவியைப் பிரிந்து எழுத்து வாழ்க்கைக்காக, பத்திரிகை வாழ்க்கைக்காக, சினிமா வாழ்க்கைக்காக ஒவ்வொரு விடுதியாக தங்கியிருக்கிறார். இது மிகப்பெரிய சோகமில்லையா?

**தலித்துகள் ஆலயப் பிரவேசம் செய்கிற காட்சிக்கு இளையராஜாவின் இசையில் ஒரு பாடல் எழுதினேன். அந்தப் பாடல் இளையராஜாவுக்கு ரொம்ப பிடித்திருந்தது.**

இதை அந்தக் கடிதங்கள் மூலமாக அறியமுடிகிறது. இன்றைக்கு சுதந்திர இந்தியாவில் நிறைய பிரச்சினைகள் இருந்தாலும், எல்லோருக்கும் இரண்டாயிரம் ரூபாய் வருமானத்துக்கான உத்தரவாதம் இருக்கிறது. ஆனால் அடிமை இந்தியாவில் புதுமைப்பித்தனும் பாரதியும் சோற்றுக்கு போராடியிருக்கிறார்களே? 'உன் கூந்தல் எண்ணெய்க்காக ஒரு ரூபாய் எம். ஓ. பண்ணுகிறேன். அடுத்த தடவை ஐந்து ரூபாய் அனுப்புகிறேன் என்று எழுதுகிறார். இதெல்லாம் அந்தக் கடிதங்களின் மூலமாகத்தான் அறியமுடிகிறது.

**✪ 'மரணத்தின் நட்சத்திரங்கள்' என்கிற கவிதைத் தொகுதியை வெளியிட இருக்கிறீர்களே... அது பற்றி?**

என்னுடைய முதல் கவிதைத் தொகுதி என்று இதைத்தான் நான் குறிப்பிடுவேன். இந்தப் புத்தகத்தைத் தயார் செய்து வைத்திருக்கிறேன். கலைஞர் வெளியிட இருக்கிறார். அவரின் பல்வேறு அரசியல் காரணங்களி

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)

*சந்திப்பு: சூரியசந்திரன்*

# கிடைக்கப் பெற்றோம்

## தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி ஆண்டுமலர்





கனடா - தமிழ்க்கலை தொழில் நுட்பக்கல்லூரியின் 8ம் ஆண்டு சிறப்பு மலர் எம் கரம் கிடைக்கப்பெற்றோம். கல்லூரி உருவாக்கத்தின் நோக்கங்கள், செயற்பாடுகள், சாதனைகள் என்பன விபரிக்கப்பட்டுள்ளதுடன் பல்வேறு ஆக்கங்களும் இதில் பதிவாகியுள்ளன. கல்லூரி மாணவர்களின் ஆக்கங்கள் நிறைந்த 'மாணவமணி' என்கின்ற பகுதி, இதில் சிறப்பாக இணைக்கப்பட்டுள்ளது. ஏராளமான ஆசிரியர்கள், மாணவர்களின் புகைப்படங்கள் கல்லூரியில் வளர்ச்சித்தன்மையை வெளிப்படுத்தி நிற்கிறதெனலாம்.

தொடர்புகளுக்கு:

**Tamil ART Academy College**
**2130 Lawrence Avenue East - Suite 200**
**Scarborough, Ontario MIR 3A6, Canada**

## மலேசிய பொங்கல் மாநாட்டுச் சிறப்பிதழ்




மலேசியத் தமிழர் பண்பாட்டு இயக்கமும், மலேசிய தமிழ் நெறிக்கழகமும் மலேசிய திராவிட கழகமும் ஏற்பாடு செய்து நடாத்திய 'தை முதல் நாளே தமிழாண்டுத் தொடக்கம்' என்கின்ற உலகப் பரவுரை மாநாட்டுச் சிறப்பிதழ் கிடைக்கப்பெற்றோம். தமிழர் சார்பாகவும், தைப்பொங்கல் சார்பாகவும் ஏராளமான தகவல்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகள், கவிதைகள் என்பனவும் இடம்பெற்றுள்ளன. தமிழர் தொன்மை சார்ந்த தீவிர தேடல்கள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

தொடர்புகளுக்கு:

**Tamil Panbaham**
**198 B 2nd Floor**
**JLN Tun Sambanthan' Brickfields**
**50470 Kuala Lumpur, Malaysia.**



**உங்கள் முழுமையான எதிர்காலத்தைக் கூறுகிறேன்**



உங்களது துரதிர்ஷ்டத்தையும் கஷ்டங்களையும் நீக்கி எதிரிகளிடம் இருந்து உங்களை பாதுகாக்க நான் அனுபவங்களையும், தேர்ச்சியையும் கொண்டுள்ளேன்.

- ★ உறவுகள்
- ★ பொருளாதாரம்
- ★ தொழில்துறை
- ★ வீட்டு நலம்
- ★ திருமணம்
- ★ வர்த்தகம்
- ★ பொறாமை

போன்றவற்றில் உங்களுக்கு உதவ உத்தரவாதம் அளிக்கின்றேன்.

**PROTECTION POUCHES AVAILABLE**

**285, DUDLEY ROAD, WOLVERHAMPTON, WV2 3JU, ENGLAND. TEL: 01902621182**

Pub.Lon.

# வில்லியம் ஹார்லி



# உலக வரலாற்றில் பதிவானவர்கள்

**உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன. மைக்கேல் ஹெச் ஹார்ட் எழுதிய 'புதிய வரலாறு படைத்தோரின் வரிசைமுறை 100' என்ற நூல் மணவை முஸ்தபாவால் தமிழில் பதிப்புச் செய்யப்பட்டது. அதில் இருந்து தொகுக்கப்படுகின்றது.**

இரத்தம் சுற்றோட்டமாகப் பாய்கிறது என்பதையும் இதயம் இயங்கும் முறையினையும் கண்டுபிடித்த தலைசிறந்த ஆங்கிலேய மருத்துவ அறிஞர் வில்லியம் ஹார்வி.

இவர், 1578ஆம் ஆண்டில் இங்கிலாந்திலுள்ள ஃபோல்க்ஸ்டோன் நகரில் பிறந்தார். 'விலங்குகளில் இதயம் மற்றும் இரத்தத்தின் இயக்கம் பற்றிய உடற்கூற்று ஆய்வு' (An Anatomical Treatise on the movement of the heart and Blood in Animals) என்ற இவரது தனிச் சிறப்புவாய்ந்த நூல் 1628-ம் அண்டில் வெளியிடப்பட்டது. இது உடலியல் வரலாற்றில் மிகவும் முக்கியமான நூலாகப் போற்றப்படுகிறது. உண்மையில், இது நவீன உடலியல் அறிவியலுக்கு முதற்படியாக அமைந்தது எனலாம். இந்நூலின், அடிப்படையான முக்கியத்துவம், இதன் நேரடியான பயன்பாடுகளைச் சார்ந்திருக்கவில்லை. மாறாக, மனித உடல் எவ்வாறு செயற்படுகிறது என்பதை அறிந்து கொள்வதற்கு இது எந்த அளவுக்குத் துணை புரிகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது.

இன்றைய மக்களாகிய நாம், இரத்தம் சுற்றோட்டமாகப் பாய்கிறது என்று அறிந்த செய்தியின் பின்னணியில் வளர்ந்துள்ளோம். எனவே, இரத்தம் சுற்றோட்டமாகப் பாய்கிறது என்பதை உண்மையென ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகையில், ஹார்வியின் கொள்கை நமக்கு ஐயத்திற்கிடமின்றி சரியெனத் தோன்றுகிறது. ஆனால், இன்று இத்துணை இயல்பானதாகவும், தெளிவுடையதாகவும் தோன்றுகிற இந்தக் கொள்கை முந்தைய உயிரியலறிஞர்களுக்கு அத்துணை நம்பத்தக்கதாகப் புலப்படவில்லை. உயிரியல் பற்றி முன்னணி எழுத்தாளர்கள் எழுதிய கருத்துகள் முரண்பட்டவையாக இருந்தன. (அ) உணவு, இதயத்தில் இரத்தமாக மாற்றப்படுகிறது. (ஆ) இதயம் இரத்தத்தைச் சூடாக்குகிறது. (இ) இதயத்திலிருந்து இரத்தத்தைக் கொண்டுசெல்லும் தமனிகளில் (Arteries) காற்று நிரம்பியிருக்கிறது. (ஈ) 'உயிர்சுரப்பு நீர்களை' (Vital Spirits) இதயம் உற்பத்தி செய்கிறது. (உ) தமனிகள், இதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் சிரைகள் (Veins) இரண்டிலுமே இரத்தம் ஏற்றமும் இறக்கமும் பெறுகிறது. இரண்டிலுமே இரத்தம் சில சமயம் இதயத்தை நோக்கியும், சில சமயம் இதயத்திலிருந்து வெளியேயும் பாய்கிறது.

காலென் (Galen) என்ற தலைசிறந்த பண்டைய கிரேக்க மருத்துவர், தாமே உடல் உறுப்புகளை அறுத்துப் பல பகுப்பாய்வுகளைச் செய்தவர், இதயம், இரத்த நாளங்கள் குறித்து அவர் கவனமாகச் சிந்தித்தவர். அவர்கூட, இரத்தம் சுற்றோட்டமாகப் பாயக்கூடும் என்று கருதவில்லை. உயிரியலைத் தமது முக்கிய ஆய்வுத் துறைகளில் ஒன்றாகக் கொண்டிருந்த அரிஸ்டாட்டில்கூட அவ்வாறு கருதியதில்லை. ஹார்வியின் நூல் வெளியான பிறகுங்கூட, மனித உடலில் இரத்த நாளங்களைக்கொண்ட ஓர் அடைப்புள்ள இரத்த ஓட்ட மண்டலத்தின் வழியாக இரத்தம் இடைவிடாது ஓடிக்கொண்டிருக்கிறது என்பதையும், இரத்தம் பாய்வதற்கான விசையை இதயம் அளிக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்ள பல மருத்துவர்கள் மறுத்தார்கள்.

ஹார்வி முதலில் ஓர் எளிமையான கணிதக் கணிப்பினைச் செய்து, இரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறது என்ற கொள்கையை வகுத்தமைத்தார். இதயம் ஒவ்வொரு தடவையும் துடிக்கும் போது, இதயத்திலிருந்து வெளியே பாயும் இரத்தத்தின் அளவு சுமார் இரண்டு அவுன்ஸ் என இவர் மதிப்பிட்டார். இதயம் ஒரு நிமிடத்திற்கு 72 தடவைகள் என்ற வீதத்தில் துடிப்பதால் ஒவ்வொரு மணிநேரத்திலும், ஏறத்தாழ 345 கிகி. இரத்தம் இதயத்தின் இடது மேலறையிலிருந்து புறப்படும் மகா தமனியில் (Aorta) பாய்கிறது என்றும் இவர் கணக்கிட்டார். ஆனால், 245 கி.கி. என்பது ஓர் இயல்பான மனிதனில் உடல் எடையை விட இன்னும் பேரளவுக்கு மிகுதியாகும். எனவே, ஒரே அளவு இரத்தம், இதயத்தின் வழியாக இடைவிடாது சுழன்று வருகிறது என்பது ஹார்விக்குப் புலனாயிற்று. இந்தக் கருதுகோளை உருவாக்கிய பிறகு, இது குறித்து ஒன்பது ஆண்டுகள் பரிசோதனைகள் நடத்தினார். இரத்தத்தின் சுற்றோட்டம் பற்றிய விவரங்களை தீர்மானிக்க மிகவும் நுட்பமாகக் குறிப்புகளை எடுத்துக்கொண்டு வந்தார்.

ஹார்வி தமது நூலில் தமனிகள் இதயத்திலிருந்து இரத்தத்தை வெளியே எடுத்துச் செல்கின்றன என்றும், சிரைகள் இரத்தத்தை இதயத்திற்கு மீண்டும் கொண்டு வந்து சேர்க்கின்றன என்றும் திட்டவட்டமாகக் கூறியிருந்தார். அப்போது நுண்ணோக்காடி இல்லாதிருந்தமையால், நாடி நாளங்களை இணைக்கும் மயிரிழை போன்ற நுண்புழைத் தந்துகிகளையும் மிகச் சிறிய 'தமனி'களிலிருந்து சிரைகளுக்கு இரத்தத்தைக்கொண்டு செல்லும் நுண்ணிய இரத்த நாளங்களையும் பார்க்க இவரால் முடியவில்லை. எனினும், அவை. இருக்கின்றன என்பதை இவை மிகச் சரியாகவே ஊகித்துக் கூறினார். (ஹார்வி இறந்த சில ஆண்டுகளுக்குப் பின்பு தந்துகிகளை மால்பிகி (Malpighi) என்ற இத்தாலிய உயிரியலறிஞர் கண்டுபிடித்தார்)

இதயத்தின் பணி, தமனிகளுக்குள் இரத்தத்தைப் பாய்ச்சுவது தான் என்றும் ஹார்வி கூறினார். இந்த அம்சத்திலும், மற்ற முக்கிய அம்சங்களிலும் ஹார்வியின் கொள்கை மிகவும் சரியாக இருந்தது. மேலும், தமது கொள்கைக்கு ஆதரவாக ஏராளமான பரிசோதனைச் சான்றுகளையும் கவனமாகத் தொகுத்த வாதங்களையும் அளித்தார். இவரது கொள்கைக்குத் தொடக்கத்தில் கடும் எதிர்ப்பு எழுந்தபோதிலும், இவருடைய ஆயுட் காலத்திற்குள்ளேயே இக்கொள்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கருவியல் பற்றியும் ஹார்வி விரிவாக ஆராய்ச்சிகள் நடத்தினார். இந்த ஆராய்ச்சி, இரத்த ஓட்டம் பற்றிய இவரது ஆராய்ச்சியைவிட முக்கியத்துவம் சற்றுக் குன்றியதாயினும், அற்பமானது அன்று. இவர் சிறந்த கூர் நோக்காளராக விளங்கினார். 'விலங்குகளின் தலைமுறை' (on the Generation of Animals) என்ற இவரது இந்த நூல் 1651 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்நூல்தான், நவீன கருவியல் ஆய்வியலை தோற்றுவித்தது எனலாம். அரிஸ்டாட்டிலைப் போலவே, 'பின் வளர்வதன்றி உறுப்பமைதி முற்றிலுங் கருவிலேயே உருவாயிற்று' என்னும் முன்னுருவாக்கக் கோட்பாட்டை (Theory of performation) ஹார்வி மறுத்தார். 'ஒரு கருவின் இறுதிக் கட்டமைப்புப் படிப்படியாக உருவாகிறது' என ஹார்வி சரியாக வலியுறுத்தினார்.

ஹார்வி நீண்டகாலம் வெற்றிகரமாகவும், பெரும் புகழுடனும் வாழ்ந்தார். இவர், தமது இளம் பருவத்தில் கேம்பிரிட்ஸ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கேயஸ் கல்லூரியில் கல்வி பயின்றார். 1600 ஆம் ஆண்டில், அப்போது உலகிலே மிகச் சிறந்த மருத்துவப் பல்கலைக் கழகமாக விளங்கிய பதுவாப் பல்கலைக் கழகத்தில் மருத்துவம் பயிலுவதற்காக இத்தாலி சென்றார். ஹார்வி பதுவாவில் படித்துக்கொண்டிருந்த போது, கலீலியோ, அங்கு பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். இவ்விருவரும் சந்தித்தார்களா என்பது தெரியவில்லை. ஹார்வி பதுவா பல்கலைக் கழகத்தில் 1602 ஆம் ஆண்டில் மருத்துவப் பட்டம் பெற்றார். பின்னர் இவர்

[தொடர்ச்சி 31—ம் பக்கம்]

# வன்னி மண் 6

## வெற்றிமனை

மார்ச்-2000 ஒளிவீச்சு ஒளிப்பேழையை பார்த்தவர்களுக்கு இந்த விடயத்தை புரிந்துகொள்ள அதிக நேரம் எடுக்காது. இனி அந்த 'வெற்றிமனை' புகலிட மக்கள் முன் வைத்துள்ள வேண்டுகோளை இங்கு தருகிறோம்.

யுத்தம் இம்மண்ணுக்கு அளித்த பரிசுகளில் தலையாயது மனநோய். தொடர்ச்சியான இடம் பெயர்வுகள், இராணுவ தாக்குதல்கள், பொருளாதார நெருக்கடிகள், சமூகத் தாக்கங்கள் போன்றவை மக்களின் வாழ்நிலையை குறிப்பாக பெண்களின் வாழ்வியக்கத்தை மோசமாகப் பாதிப்பவை. இத்தகைய தாக்கங்களினால் மனப்பாதிப்புற்று தமது உறவிழந்து, உரிமையிழந்து, சொத்து சுகம் அனைத்தும் இழந்து, ஊனுறக்கமின்றி தெருவீதிகளில் நிர்க்கதியாக அலையும் ஏராளம் மனநோயாளர்களில் பெண் மனநோயாளருக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களின் ஊன்றுகோலாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் என்ற பெருமையை பெறுவது 'வெற்றிமனை' மகளிர் உளவளத்துணை நிலையமாகும்.

## ஒரு பயணத் தொடர்...

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் பிரதான திட்டங்களில் ஒன்று வெற்றிமனை. பெண் மனநோயாளர்களை அரவணைத்து அவர்கள் தொலைத்துவிட்ட மனங்களை மீளப்பெறும் வகையில் அவர்களின் உடலுக்கும், மனதிற்கும் பயிற்சி கொடுத்து அவர்களையும் சமூக நீரோட்டத்தில் கலந்துவிடச்செய்யும் அயராத பணியில் தனது 9-வது ஆண்டினை நிறைவுசெய்யும் வெற்றிமனையின் தற்போதைய அங்கத்தவர் தொகைகள் 45.

1991ம் ஆண்டு பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவருக்குமாக 'பூரணி' என்ற பெயரில் 15 பெண்களுடன் யாழ்ப்பாணம் உடுவில் என்ற இடத்தில் இயங்கிய இல்லம் சூரியக்கதிர் இடம் பெயர்வின் பின்னர் வன்னிக்கு இடம்பெயர்ந்து வழி தெரியாமல் தவித்த மேலும் 10 பெண்களையும் உள்ளடக்கிய 'வெற்றிமனை' என்ற பெயருடன் விசுவமடுவில் இயங்கியது. 1998 ஐப்பசி மாதம் தொடக்கம் முன்னாள் கிளிநொச்சி அரச அதிபர் திரு. இராசநாயகம் அவர்களின் நிதியுதவியுடன் அக்கராயன் அணைக்கட்டு வீதியிலுள்ள தற்போதைய வாழ்விடத்தில் தனது பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

வெற்றிமனையின் வெற்றிப்பாதைக்கு மனித நேயம் மிக்கவர்களின் உதவியை மேலும் மேலும் நாடி நிற்கிறது இந்நிறுவனம். மனநோய் தீர்ப்பதற்கான மருந்துக்குளிகைகளின் தாக்கம், ஊட்டம் மிக்க உணவளிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்பதனால், இந்நிறுவனத்தின் நாளாந்த உணவுச் செலவு ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுமிடத்து மிகவும் அதிகமானதாகும்.

| | | |
|---|---|---|
| * ஒருநாளைய உணவுச் செலவு | | 5000-00 |
| | காலை உணவு | 1000-00 |
| | மதிய உணவு | 3500-00 |
| | இரவு உணவு | 1000-00 |
| | தேனீர்ச் செலவு | 750-00 |
| * ஒரு பயனாளியைத் தத்தெடுக்க: | | |
| | மாதாந்தச் செலவு | 3000-00 |
| | வருடாந்தச்செலவு | 36000-00 |

மனநலம் பாதிக்கப்பட்ட பெண்களின் தேவைகளை நன்கு உய்த்துணர்ந்து பணமாக, உடையாக ஏனைய பொருட்களாக மருத்துவப் பராமரிப்பாக, உளவளத்துணையாக, கலைநிகழ்வாக, சுயதொழில் வாய்ப்புக்களாக வாரிவழங்கி வரும் மனிதநேயம் தொண்டர்களின் பட்டியலில் தங்களையும் இணைத்துக்கொண்டு அவர்களின் நல்வாழ்வுக்கு உதவுமாறு தயவன்புடன் வேண்டிக்கொள்கின்றது வெற்றிமனை.

### மனிதநேயம் கொண்ட நெஞ்சங்களே!

கீழே விழுந்தவரை தூக்கிவிட
உங்கள் நேசக்கரங்களை நீட்டுங்கள்
நிமிர்ந்து நிற்க வலுவற்று துவண்டு சரியும்
உள்ளங்களுக்கு ஊன்றுகோல்களாக மாறுங்கள்...

இது உங்கள் நிறுவனம்
இதன் வழிகாட்டி, ஒளிகாட்டி பற்றுக்கோடு
அனைத்துமே நீங்கள் தான்!

பணத்தால், பொருளால், நல்ல மனத்தால்
சிறந்த வழிகாட்டுதலால்
நிர்க்கதியாக நிற்கும் அபலைகளுக்கு கை கொடுங்கள்!

உங்கள் தொடர்புகளுக்கு:
**வெற்றிமனை மகளிர் உளவளத்துணை நிலையம்**
அணைக்கட்டு வீதி, அக்கராயன்.

சேமிப்புக் கணக்கு இல:
தேசிய சேமிப்பு வங்கி க/கு இல: 1305
மக்கள் வங்கி க/கு இல: 19407
கிளிநொச்சி, சிறீலங்கா.

[பயணம் தொடரும்...]

# புகலிட நிகழ்வுகள்

## 'பேர்ண் மாநகரில் கிறிஸ்மஸ் ஒளிவிழா'

வருடந்தோறும் பேர்ண் மாநகரில் நடந்துவரும் கிறிஸ்மஸ் ஒளிவிழா இம் முறையும் 7வது தடவையாக கடந்த 16.12.2000 அன்று Bremgarten என்ற இடத்தில் நடைபெற்றது. பேர்ண் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தினால் நடத்தப்பட்ட இவ்விழா, சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத் தலைவரும், அருட்தந்தையுமாகிய சத்தியா சோசைஜொய்சி பெப்பி








தலைமையில் நடைபெற்றது. இம் முறை பிரதம விருந்தினராக Bern Dreifaltikeits Kirche ஆலய பங்குத்தந்தை கலந்து நிகழ்ச்சியை சிறப்பித்தார்.

பெருமளவிலான மக்கள் கலந்துகொண்ட இவ்விழாவில் பெரியவர், சிறியவர்களின் கலை நிகழ்ச்சிகள், இன்னிசை நிகழ்ச்சிகள், மற்றும் G.S அன்ரன் எழுதி, பேர்ண் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக கலைஞர்களும், லவ்சான் மாநில தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக கலைஞர்களும் இணைந்து நடித்த 'உலகம் அறியாத உண்மை' என்ற நாடகமும் இடம்பெற்றது.

தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்காக விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு இம்முறையும் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. இத் தடவை அதிர்ஷ்டலாபச் சீட்டின் விற்பனை மூலம் 7000 சுவிஸ் பிராங்குகள் பெறப்பட்டன. இப்பணத்தில் பேர்ண் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் பராமரிப்பில் இருந்து வரும் மன்னார் தேவன் பிட்டியில் உள்ள சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக 2500 சுவிஸ் பிராங்குகள் மன்னார் ஆயர் ஊடாக அனுப்பப்படவுள்ளது. மிகுதி 4500 சுவிஸ் பிராங்குகள் வன்னியில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்காக யாழ்ப்பாண ஆயர் ஊடாக அனுப்பப்படவுள்ளது. இவ் வருடம் சிற்றூண்டிச்சாலையில் கிடைத்த வருமானம் 2222 சுவிஸ் பிராங்குகள். இப்பணம் கிழக்கு மாகாணத்தில் அல்லலுறும் மக்களுக்காக திருமலை - மட்டுநகர் ஆயர் ஊடாக அனுப்பப்படவுள்ளது.

இம்முறை அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் மூலம் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில்;

**1ம் பரிசு இல: 00428**
**2ம் பரிசு இல: 01904**
**3ம் பரிசு இல: 01150**

*10 ஆறுதல் பரிசை வென்றவர்களின் இலக்கங்கள் வருமாறு:*

*10 ஆறுதல் பரிசு*

*1 வது இல:* 01047, *2 வது இல:* 01414, *3 வது இல:* 01103, *4 வது இல:* 02030, *5 வது இல:* 00134, *6 வது இல:* 01748, *7 வது இல:* 01237, *8 வது இல:* 02429, *9 வது இல:* 00304, *10 வது இல:* 01810

*– பி. அ. வின்சன்.*

## சின்டெல்பிங்கன் தமிழாலய விழா

ஜேர்மனி உலகத் தமிழர் இயக்கக் கல்விப் பணியின் கீழ் இயங்கும் சின்டெல்பிங்கன் தமிழாலயம் தனது 5வது ஆண்டு நிறைவு விழாவை வெகு சிறப்பாக நடாத்திய தமிழாலய மாணவர்கள் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் மேடையேற்றி அனைவரையும் ஆச்சரியப்படவைத்தனர்.

மேற்படி விழா *17.12.2000* பிற்பகல் *3* மணிக்கு அமைதி வணக்கத்துடன் ஆரம்பமானது. உ.த.இ. கல்விப் பணியின் பொறுப்பாளர் திரு.இரா, நாகலிங்கம் மங்கல தீபமேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் தமிழாலய கீதம் பாடினார்கள். செல்வன் ஈழமாறன் குமரன், செல்வி இலக்ஷிதா பாலசுந்தரம் இருவரும் தமிழ், ஜேர்மன் மொழிகளில் வரவேற்புரை வழங்கினார்கள். மாணவர்களின் பேச்சுக்கள், கவிதைகள், பாட்டுக்கள், நடனங்கள், நாடகம், பொதுஅறிவுப்போட்டி என்பன சிறப்பாக நடந்ததுடன், சபையோரை, சிந்திக்கவும், சிரிக்கவும் செய்தன. அத்துடன் ஸ்ருட்காட் தமிழாலயம் கிர்கைம்ரெக் தமிழாலயம், லுட்விக்ஸ் பேர்க் தமிழாலயங்களும் நடனங்கள் வழங்கி விழாவைச் சிறப்பித்தனர். வணபிதா திரு சைபேர்ட், வெளிநாட்டவர் ஆலோசனைச் சபை பொறுப்பாளர் திரு. அமீனி, உ.த.க. பொறுப்பாளர் திரு. இரா.நாகலிங்கம், சின்டெல்பிங்கன் தமிழாலய நிர்வாகி திரு. இ. செல்வராஜா ஆகியோர் தமிழாலய வளர்ச்சி பற்றியும், தாய் மொழியின் அவசியம் பற்றியும், உரை ஆற்றினர். தமிழாலய நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆகிய அனைவரும் பரிசளித்து, கௌரவப்படுத்தப்பட்டனர். இறுதியாக நன்றியுரையுடன் விழா சிறப்பாக நிறைவுற்றது.




*– வீ. ஆர். வரதராஜா*

## 14-ம் ஆண்டு நிறைவு விழா



பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தின் ஆண்டுவிழா கடந்த *07.01.2001* ஞாயிறன்று பாரிஸ் 'எத்தியன் மார்சலில்' உள்ள மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவில் பிரதம விருந்தினராக திரு. அலன் ஆனந்தன் (மாநகரசபை உறுப்பினர்) அவர்களும், சிறப்பு விருந்தினராக கவிஞர் திரு.பாரதிதாசன் அவர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்திருந்தனர்.

மண்டபம் நிறைந்த மக்களுடன் நடைபெற்ற இவ் ஆண்டு விழாவில் பல்வேறு கலை நிகழ்வுகளும் மாணவர்களால் அரங்கேற்றப்பட்டிருந்தன.

### ஈழத் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் - பிரான்ஸ்
### புதிய நிர்வாகம்

ஈழத் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் 2001ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில்,

| | |
|---|---|
| தலைவர்: | திரு. S.N.J. அன்ரனிப்பிள்ளை |
| உபதலைவர்: | திரு. மமான்ஸ் |
| செயலாளர்: | திரு. ந. ரகுநாதன் |
| இணைச் செயலாளர்: | திரு. ஜான்சன் |
| பொருளாளர்: | திரு. இ. யோகேஸ்வரன் |

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதை அறியத் தருகின்றோம்.

*– நிர்வாகம்*

# வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் – [டிகோல் தொடர் - 30]

லெபனான் - சிரியாவில் நிலை கொண்டிருந்த பிரஞ்சுப் படைகளுக்கு, ஜெனரல் Dentz என்பவர் தலைவராகப் பணியாற்றினார். இவர் விஷி அரசுடன் இணைந்து செயல்பட்டார். இட்லரும் - பெட்டெய்னும் சந்தித்துப் பேசிய பிறகு, ஜெர்மன் விமானங்கள், ஈராக்கின் பாக்தாத் நகருக்குச் செல்லும் வழியில், பிரஞ்சு சிரியாவின் டமஸ்கஸ் விமான நிலையத்தில் இறங்கவும் சில வசதிகள் பெறுவதற்கும் Dentz இசைந்தார்.

மேலும் 11.05.41இல், விஷி கடற்படையின் தலைவர் தர்லான் பிரஞ்சு ருனிசியாவையும், பிரஞ்சு சிரியாவையும் ஜெர்மனியருக்குத் திறந்து விட ஒப்புக்கொண்டார்.



இதெல்லாம் டிகோலுக்கு அறவே பிடிக்கவில்லை. ஆங்கிலேயர்களின் கவனத்துக்கு, விஷியின் போக்கை மீண்டும் ஒருமுறை கொண்டுவந்து லெபனான் - சிரியாவை, சுதந்திர பிரான்சு அணிக்குள் கொண்டுவர, இராணுவ நடவடிக்கை எடுக்க, இராணுவ உதவி கோரினார்.

ஆங்கிலேயர்கள் உடனே இவ்வுதவியை அளிக்க முன் வரவில்லை. அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும் என்ற கதையாய், முடிவாக ஆங்கிலேயர்கள் உதவிக்கு வந்தனர். சிரியாவிலும், டக்கார் கதையே மீண்டும் நடைபெற்றது. ஜெனரல் Dentz தனது முழு பலத்தையும், சுதந்திர பிரான்சு, இங்கிலாந்து இராணுவங்கள் மீது உபயோகித்தார். பிரஞ்சு விஷி இராணுவத்தினர், சுதந்திர பிரஞ்சு வீரர்களைத் தாக்கினர். பிரஞ்சு இரத்தம் சிந்தப்பட்டது. ஆனாலும், விஷி இராணுவம் தோற்கடிக்கப்பட்டது. லெபனானும் - சிரியாவும் சுதந்திர பிரான்சுடன் இணைந்தன. தோல்வி கண்ட விஷி இராணுவத்தினரிடையே சுதந்திர பிரான்சு பிரதிநிதிகள் பேச விருப்பம் தெரிவித்தனர்.

ஆங்கில அதிகாரிகள் சுதந்திர பிரான்சு தரப்பினர், விஷி இராணுவத்தினரைச் சந்திக்க வசதி ஏற்படுத்தித் தரவில்லை. ஏறத்தாழ 5500 பேர் மட்டுமே, விஷி தரப்பைவிட்டு நீங்கி, சுதந்திர பிரான்சில் இணைந்தனர். 20.000க்கும் மேற்பட்டவர்கள், பிரான்சுக்குத் திரும்பிப்போக இங்கிலாந்து உதவியது.

மீட்கப்பட்ட லெபனான், சிரிய பகுதிகளில், பிரஞ்சுக் கொடிக்குப் பதில் ஆங்கிலேயரின் யூனியன் ஜாக் கொடி ஏற்றப்பட்டது. போர் நிறுத்த ஒப்பந்தத்தில்கூட, விஷி அரசின் பிரதிநிதிகளும், ஆங்கிலப் பிரதிநிதிகளும் மட்டுமே கையெழுத்திட்டனர்.

சுதந்திர பிரான்சுக்கு, இத்தகைய அவமானங்களை இங்கிலாந்து இராணுவத்தினரும், உயர் அதிகாரிகளும் உருவாக்குவதை, டிகோல், கடுமையாக, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், முழு பலத்துடனும் எதிர்த்தார். பிரான்சின் உரிமைகளைப் பாதுகாத்தார். விட்டுக்கொடுக்கவே இல்லை. இந்தப்போக்கினால், அவர் வெற்றிகளையும் ஈட்டினார். டிகோல் முன்வைக்கும் ஒவ்வொரு கோரிக்கையையும், இங்கிலாந்து ஏற்கும். அது குறித்து, அவரே பின் கண்டவாறு கூறினார்.

'ஆங்கிலேயர்களுடன் பேசினால் மட்டும் நியாயங்கிடைக்காது. மேசையில் ஓங்கித் தட்டவேண்டும் - அப்போதுதான், அவர்கள் பணிந்து வந்து, நியாயத்தை ஏற்பார்கள்.'

விஷியினருக்குப்பின், ஆங்கிலேயர்களை முற்றும் விலக்கிவிட்டு, லெபனான், சிரியா இரு நாடுகளையும் முழுக்க, முழுக்க பிரஞ்சு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்த பிறகு, டிகோல் இந்த இரு நாடுகளிலும், ஆஃரிக்காவில் செய்தது போன்றே, இராணுவ அதிகாரிகளையும், சிவில் நிர்வாக அதிகாரிகளையும் நியமித்தார். ஜெனரல் கத்ரூ, இந்த இரு நாடுகளிலும் சுதந்திர பிரான்சின் மிகப்பெரிய அதிகாரியாகப் பணியாற்றுவார். 41 ஜூலை இறுதி முதல் போர்க்களத்தில், சுதந்திர பிரஞ்சுப் படையினர் பல முனைகளிலும் ஜொலித்தனர். சிலநூறு பிரஞ்சு விமானிகள், பிரஞ்சு விமானங்களிலும், ஆங்கில விமானங்களிலும் சென்று ஜெர்மனியைத் தாக்கினர். இத்தாக்குதல்களில் ஈடுபட்ட பலர் உயிர்த் தியாகமும் செய்தனர்.

ஆஃப்ரிக்காவில், எரித்திரியாவில், பிரஞ்சு ஜெனரல் Monclar வழிகாட்டலில், 3000 சுதந்திர பிரஞ்சு வீரர்கள் இத்தாலியை எதிர்த்துப் போரிட்டனர். ட்சாத் நாட்டில் இருந்து, லெக்லெர்க்கின் வீரர்கள் Murzuk க்கிலும், Koufra விலும் [லிபியாவில்] இத்தாலி, ஜெர்மன் படைகளைத் தாக்கினர்.

*அத்தியாயம் – 7*

**சுதந்திர பிரான்சின் 'உள் நாட்டுக் குழப்பங்கள்'**

மனிதர்களை வழி நடத்துவது என்பது எளிதான காரியம் அல்ல. அவர்களிடையே குறைகள், பிரிவுகள், பொறாமை, சதிவேலைகள் இடம்பெறுவது உண்டு. சுதந்திர பிரான்சிலும் இக் குழப்பங்கள் இருந்தன.

இலண்டனில் வாழ்ந்த பிரஞ்சுக்காரர்களில் பலர், டிகோலின் தலைமையை ஏற்கவில்லை என்பதை முன்பே பார்த்தோம் - இப்படி ஏற்காதவர்கள் அவரைத் தொடர்ந்து தூற்றி வந்தனர். அவர்களுக்கு, அவர் ஒரு ஃபாசிஸ்ட் ஆகவும், ஒரு நெப்போலியன் ஆகவும், ஒரு ஜோன் ஆஃப் ஆர்க்காகவும், ஒரு 14ம் லூய் மன்னராகவும், ஒரு சர்வாதிகாரியாகவுமே தோன்றினார். அவர்கள் நடத்தி வந்த ஓரிரு பிரஞ்சு செய்தித்தாள்களில் இக்கருத்துக்களை வெளியிட்டனர். ஆங்கிலேயர்களுக்கு இத் தாக்குதல்கள் மகிழ்ச்சியும் - திருப்தியும் அளித்தன. பின்னாளில், அமெரிக்கர்களும் இப்படியே நடந்துகொள்வார்கள்.

இது இப்படி இருக்க, Carlton Gardens சிலேயே சில பிரச்சினைகள் எழத்தான் செய்தன. அட்மிரல் Muselier பிரச்சினைக்குரியவர் ஆனார். பிரச்சினைகளை உருவாக்கினார். டிகோல், ஆஃப்ரிக்காவில் இருந்த சமயம், டிகோலிடங் கலந்து ஆலோசிக்காமலேயே, கடற்படை அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகளை வழங்கினார். டிகோலுடன் கலந்து பேசாமலேயே, ஆங்கிலக் கடற்படை அதிகாரிகளுடன் பல்வேறு முக்கியமான உறவுகளைப் பற்றிப் பேசினார். அவற்றின் முடிவுகளையும் டிகோலுக்குத் தெரிவிக்கவில்லை. மேலும், அவர் ஜெனரலைப் பற்றி, தாறுமாறாகப் பேச ஆரம்பித்தார். இவையெல்லாம், அவரது கவனத்துக்குக்கொண்டு வரப்பட்டபோது, டிகோல் அட்மிரல் Muselierவைக் கண்டித்தார்:

[தொடரும்]

## கவிக்களம்

### உறவுக்கொடி கட்டிப்பாரீர்!

இன்னமும் உன் தேசத்தின்
வாழ்வியல் வேதனைகளுடன் ஒட்டாமல்
உன்னை ஒரு அந்நியனாகப் பாவித்து
தஞ்சம் கோரிய அந்நிய தேசத்தின்
நீரோட்டத்தில் கலந்து கொள்ளவும்
நீந்திக் களிக்க விரும்பியும்
ஒடிக்கொண்டிருப்பவனே!
உனது தாய் தந்தை – பாட்டன் பாட்டி
பூட்டன் பூட்டி வாழ்ந்த நிலமென்றோ
நீ பிறந்து, தவழ்ந்து, நிமிர்ந்து
ஆடிப்பாடி மகிழ்ந்த நிலமென்றோ
உன் வாலிப மிடுக்கில் 'பறவைகள்'
பார்த்து – சிலிர்த்து – காதல் வயப்பட்டு
ஒரு புதிய பரம்பரைக்கு அடியிட்ட
மண்ணென்றோ
இவை அனைத்திலும் மேலாய்
உன் உறவினர் ரசித்து மகிழ
அம்...மா என்ற உனது மழலை பிறந்த –
உனக்கு மூல அடையாளம் தந்த
தாய்மொழி என்றோ
அந்த புனித உணர்வுகள் உனது
மயிர்க்கால்களில் உரசாது போயினும்
இன்னமும் நீ ஒரு மனித வகுப்பிலேதான்
அடக்கம் என்னும் உறுதிப்பாடு இருக்குமேயாயின்
நீ சார்ந்த மனிதக் கூட்டத்தை
இன்னொருவன் ஆக்கிரமித்ததினால்...
ஏற்படு துன்பம், அவலம், உயிரிழப்பு
அவமரணம் என்பவற்றை
மானத்துடன். இல்லையே ஆயினும்
மனித அபிமானத்துடன் –
சொகுசாக முன்பு நீ இருந்த நிலைக்கும்
நீ சார்ந்த கூட்டத்தின் இப்போதைய நிலைக்கும் –
உறவுக் கொடி கட்டிப்பார்
அப்போது உன்னுள் எழுவது
என்ன என்பதை உணர்வாய்!

ந. ஹேமராஜ்
இலண்டன்


வோல்த்தம்ஸ் ரோவில் புதிய நகைமாளிகை

ATN Jewellery

37, Palmerston Road, Walthamstow E17 6PR

Tel: 02085219767

வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்



தமிழர் தங்க நகைத் தேவைகளையும் உயர் ரக வேலைப்பாடுகளுடன் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம் ATN Jewellery. இங்கு உலக தரத்தின் சின்னமான 916 ATN பொறிக்கப்பட்ட உத்தரவாத தங்க நகைகள் கிடைக்கும். என்றும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய நிறுவனம் ATN!!

Pub.Lon.

# துள்ளி வருகிறது வேல் தூர விலகிநில்

**பாதை மீதேறிப் பரவியே வந்த**
**பகைவரைத் தடுத்தனர் புதல்வர்.**
**சீதளக் காற்றில் தீயெழ வந்தோம்**
**திகைத்திடப் பொழுதெனர் மகளீர்.**
**பூதலம் வியந்து போனது; வீரம்**
**புலர்ந்திட நின்றது தாய்மண்.**
**மாதவம் செய்த மண்ணடா அள்ளி**
**மார்பினில் பூசடா தமிழா.**

நாள் போயிற்று. நாமெல்லாம் நாசம் ஆனோம். அப்படித்தான் நாம் அவதியுற்று இருந்தோம். தொலை தேசக்காற்றெல்லாம் சோகத்தைச் சுமந்து வருகின்றது. தேசம் எரியும் நெருப்பின் ஒளிரும் கண்முன்னே விரிகின்றது. சோளகம் சுமப்பது சோகங்களை மாத்திரமே. வாடையோ வீழ்ந்தோரின் புலம்பல்களை ஏந்திச் சென்று எங்கும் அறைகிறது. மழை கழுவி விடுகிறது குருதி நனைத்த வீதிகளை - சூரியன் சுட்டெரிக்கிறான். உயிருமற்று கறுத்துப்போய் சிதைந்த உடலங்களை.

யாருமற்ற வெளிதனில் அனாதையாகி அவதியுறுகிறோம். காலம் நம்மைக் கைவிட்டு விடுகிறது. கையறுநிலை கொண்டோராய் காலம் தள்ளுகிறோம்.

எங்கள் கைப்பிடிக்குள் உலையிடக்கூடிய ஒருபிடி அரிசி கூட இல்லை. காலடி மண்ணின் துகளில் இரத்தப் பிசுபிசுப்பு ஏறிக்கிடக்கிறது. இதயம் இரும்பாகி என்ன, அதுவும் கறள் பிடித்த துரும்பாகிப்போனது. மூக்கு முகர்வது நச்சுக்காற்றை. கண்கள் காண்பது புளிய மரத்தில் தலைகீழாகத் தொங்குகின்ற பேய்களை, காதுகேட்பதோ அவல ஓலங்களையும், ஒப்பாரிக் குரல்களையும்.

குளிக்கவென்று கிணற்றடிக்குப் போனாலோ இரத்தச் சேற்றில் கால்கள் புதையுண்டு போகின்றன. அதை மீறி துலாத்தாழ்த்தி, தண்ணியினை வாளியினால் அள்ளினாலோ, நீரல்ல; நிணமும், எலும்புகளும் வாளியில் நிறைந்து வழிகின்றன.

மாலையானதும் நடுயாமம்போலானது. பகலில் பார்த்திருக்கவே இரவென்று இருள் சூழ்கிறது. இப்போ தெரிவது சூரியனா, நிலவா? சூரியன் தான் நிலவானதா? நிலவேதான் சூரியன் போன்றதா? நிலவைப் பார் - வெள்ளி நிலவாய் அது இல்லை. தண்ணொளி வீசிப்பரவவில்லை. பால் அள்ளி ஊர் முழுதும் தெளிக்கவில்லை. மஞ்சளாகி, சிவப்பாகிப் பின் இரத்தப் புகை கக்குகின்றது. நிலவின் உள்ளே இருந்த களங்கம், கோடாகி, கரியதாகி, வெண்ணிலவே கருநிலவாகியது. இப்போ வான் வெளியில் ஒரு வட்டம் கரிய வட்டம்.


எல்லா இடங்களிலிருந்தும், எல்லா அலறல்களும் மேலெழுகின்றன. மரத்தின் கிளையிலிருந்து, இலையிலிருந்து பூ விரிந்ததல்ல, எங்கோ இருந்து காகம் கொத்தி வந்த கண்ணொன்று திறந்தது - பிஞ்சாகி; காயாகி, முத்தலாகி, பழுத்தது அது - பழமோவென்றால் நீலம் பாரித்த சிவப்பு. உற்றுப் பார்த்தால் அது ஒரு தலை - முண்டம் பலாப்பழம்போல அழுகிக் கீழே வீழ்ந்து, தெறித்துக்கிடந்தது. அழுகிக் கிடந்த முண்டத்திலிருந்து பேய்கள் சுளை சுளையாகப் பிடுங்கிச் சாப்பிட்டன. விரல்களின் இடையே நிணம் ஒழுகிற்று. ஒழுகவிடாது வழிய விடாது, அவற்றைச் சூப்பின; நக்கின;

என் தோட்டத்துச் சிறார்களோ, என் வயலில் விளைந்த குழந்தைக் குஞ்சுகளோ, குண்டியால் நடக்கின்றன. குண்டிக்குக் கீழ் ஒன்றுமேயில்லை. எப்படி இருந்ததென்றால் அது - புழு ஒன்று போகுமே. முன்பக்கத்தில் நின்று, பின்பக்கத்தை இழுத்துப்போகுமே - அப்படியாகி இருந்தது அது. சூனியப்பெருவெளியில் எவ்விதப் பிரக்ஞையுமற்று உலைகின்றன. அந்தக் குஞ்சுகள்.

எனக்கு மேலும் சொல்வதற்கு ஒன்றுமில்லை. எனது தேசத்து ஆன்மாவின் முகம், சிதைபட்டு, நொருக்குப்பட்டு, வதைபட்டு, உதைபட்டுப்போகின்றது. என் கிராமத்து இதயம் ருக்குப்பட்டு, சீரழிந்து சின்னாபின்னமாகின்றது.

இதிலிருந்து பிய்த்துக்கொண்டு எழோமா? கதறி அழுவதை நிறுத்தோமா?

உதறி எறிந்து உருப்படோமா?




**ஊரெல்லாம் தீயினில் உழன்றன.**
**உறவெல்லாம் பொடிபட்டுப்போயின.**
**வேரினில் விழுந்தன துளைகள்.**
**வீழ்ந்து மரமே பட்டுப்போயிற்று.**
**நாறியே கிடந்தன நாட்கள்.**
**நாய்களின் ஊளைகள் எழுந்தன.**
**பார் எமது தேசம் ஒரு**
**பழுதுபடாப் பூமியாய் எழாதோ?**

ஓலமிடல், ஒப்பாரி வைத்தல், எல்லாவற்றுக்குமான காலம் போயிற்று. ஞாலம் நம்மைக் கேளாமலே சுழல்கின்றது. நமக்கான காலம் இதோ நம்மை வந்தடைகின்றது. எழுவதற்கான வாழ்வு இதோ என்று எழுகின்றது. எழுவதற்கான எம் தாய்ப் புதல்வர்கள் இதோ என்று எழுந்தனர்.

காலை எழுந்தது - சூரியன் களத்தினில் கால் வைத்தான். எழுக ஞாயிறு என்று எழுந்தனர்; எழுதுகோல் எடுத்தனர் எம் தேசப் புலவர்கள்.

பாதை மீது ஏறிப் பரவியே வந்த பகையைத் தடுத்தனர் எம் புதல்வர்.

**'சுற்றி நில்லாதே போ – பகையே**
**துள்ளி வருகுது வேல்'**

வேல்கொண்டு வீரம் விளைந்ததென்று போர்முகம் காட்டப் போயினர் புதல்வர். வாளேந்தினர்; வலியபோரை எதிர்கொள்ளச்சென்றனர்.

சொல்லாமல் போயினர் புதல்வர் எனும் சோகம் தாயாரிடம் இருந்தது. எனினும் வெல்லாமல் விடமாட்டார்கள் எனும் வீறாப்பும் அவர்களிடம் தெரிந்தது. கொல்லாமல் விடமாட்டோம் பகையை எனும் கோபமும் குன்றென நிமிர்ந்தது. எல்லோரும் சேர்ந்து வெல்வோம் என்றெம்வாழ்வு எழுந்தது.

இதனால்தான் எம் கனவு வென்றது.

இனித்தோற்று விடமாட்டோம் எனும் நம்பிக்கை துளிர்த்தது. பாதைபெரிது; பயணம் நீண்டது. இடையில் அடிக்கும் புயல்களே அனேகம் - பாறை பிளந்து எரிமலை கக்கும் காலம் விதிக்கப்பட்டது. பூமி அதிர்வும், பொடி படப்பூமி பிளவுறுவதும் என்றாகி நாட்கள் நகரும். தலையின் மேலும், வானின் கீழுமாய் நெருப்புக்கோளங்கள் மின்னும், எரியும். காலின் கீழே நிலம் பிறந்து எம்மெல்லோரையும் விழுங்கும்.

எனினும் அஞ்சோம்; அடிபணியோம். யாருக்கு அஞ்சுவது? எவருக்கு அஞ்சுவது? தவறென்ன செய்தோம் - தலை குனிந்து நிற்க? வீரத்தையும், வெற்றியையும், வீறாப்பையும் தவிர வேறென்ன சொல் நாம் வேண்டுவது? எம்வேண்டுதலும், நேர்த்தியும், விரதமும், தவமியற்றலும் அதுவே. வேலும், வாளும், வில்லும், அம்பும் என்றெம் வாழ்வு. அதனுள்ளே அமிழ்ந்தது அல்லவா?

எத்தனை நாளைக்கென்று அழுதழுது ஓயப் போகிறோம் - எவ்வளவு பொழுதுக்கென்று கண்முழித்து வாழப்போகிறோம்.

நாங்கள் சிரித்த காலங்களுமிருந்தன அல்லவா? சிரிப்பு பெரிய சிரிப்பு, பேய்ச் சிரிப்பு.

எத்தனை நாளைக்கென்றுதான் அழுதழுது வாழப்போகின்றோம். அழுவதொன்றும் மகா தவறல்ல- ஆயினும் அழுவதே வாழ்வாகி விட முடியாது அல்லவா?

**அழுவோமோ.. ஆண்பிள்ளை அல்லவோ?**
**உயிர் எமக்கு வெல்லமோ!!**

ஆண்பிள்ளை என்ன, பெண்பிள்ளை என்ன அழுவதே காலமாக ஆகிவிடமுடியாதல்லவா? ஆயினும் துயர் வேறுவகையாய்க் கிளர்கிறது. இறுதி வெற்றி எப்போதும் எங்களுக்கோ - அது உறுதி - ஆயினும் இடையில் எழும் துயர் நெஞ்சை வதைக்கிறது.

இவ்வளவு இழப்புக்கள், இவ்வளவு நெருப்புக்கள், இவ்வளவு கொடுமைகள், இவ்வளவு வறுமைகள் இத்தனையும் தாங்கினோமே! தாங்குகிறோமே! அவற்றுக்கெல்லாம் அர்த்தமே இல்லாது போய்விடுமா? அவ்வளவும் இழந்தும் இன்னும் அடிபணிந்து போவோமா?

இன்னும் எவ்வளவு காலத்திற்கு என்று நாட்களை எண்ணுகின்றோமே - அவை யாவற்றுக்கும் அர்த்தமே இல்லாது போய்விடுமா? காட்டிக்கொடுக்கும் கயவர் இன்னும் வாழ்கின்றனரே.

இவர்களால் எம் வீரத்தை விலைபேசி விடமுடியுமா? அப்படியான நாட்கள் இப்போது நகர்கின்றன. எனினும் விடுதலை மூச்சை எவனால் விலைகொடுத்து வாங்கிவிடமுடியும்?

**பண்டாரவன்னியனின் படை நடந்தகாடு**
**பணியாது ஒருபோதும் ஈழவளநாடு**

போரின் வலிமை புரியாதவர்கள் அவர்கள். சமரின் ஓர்மம் தெரியாதவர்கள் அவர்கள். அவர்களால் அதிகமாக என்னசெய்து விடமுடியும்? ஓர் துரும்பைத்தானும் அவர்களால் அசைத்துவிட முடியுமா?

மாதவம் செய்த மண்ணல்லவா நம் மண். மாவீரரைப் பெற்ற மண்ணல்லவா நம்மண். அஞ்சுவதற்கொன்றுமில்லை. அஞ்ச வருவதும் இல்லை. உலகெலாம் வியந்துபோற்றும் வீரம் விளைந்த மண் நம் மண். அதனால்தான் சொல்கிறோம்.

**ஊரெல்லாம் தீயில் உழன்றன வெனினும்**
**உயர்ந்தன தமிழரின் தலைகள்**
**வேரறுந்தாடி விழுந்தன மரங்கள்**
**வியப்புறும்படி அடி மண்ணில்**
**பீறின தளிர்கள். பொசுங்கியது**
**அனைத்தும்**
**பூத்தன; தீயின் வாயுண்டு**
**நீறினயாவும் நிமிர்ந்தன பசிய**
**நிலவென ஆனது தாய்மண்**

வேறென்ன சொல்ல? விரைந்தோடிவரும் வெற்றி என்னும் சொல்தவிர.




இசைமுரசு 2001

21ம் நூற்றாண்டின் முதலாவது இசைமுரசு

காலம்: 13.05.2001

தொடர்புகளுக்கு:

Tel: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

EELAMURASU S.A.R.L
22 Rue Perdonnet, 75010 Paris

E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

ஈழமுரசு வருடாந்தம் நடாத்தும் இசைமுரசு சிறந்த பாடகர் தெரிவுப்போட்டி கடந்த வருடம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் நடைபெறவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# பிரான்சுக்கு மீண்டும் ஒரு உலகக்கிண்ணம்

1998ம் ஆண்டு கோடைகாலத்தில் உலகத்தை அசத்து அசத்தி உதைபந்தாட்டத்தின் முதல் கிண்ணத்தை தனதாக்கியது பிரான்ஸ். அதற்கடுத்து 2000ம் ஆண்டு கோடைகாலத்தில் ஐரோப்பியக் கிண்ணத்தை சுவிகரித்து மேலும் புகழை பெருக்கியது. அடுத்து இப்போது உதைபந்தாட்ட புகழைத்தாண்டி கைப்பந்தாட்டம் (Hand Ball) மூலமும் புகழை அடைந்துள்ளது.

பாரிஸ் நகரில் 13, 500 பார்வையாளர்கள் ரசித்த இறுதியாட்ட உலகக்கிண்ண கைப்பந்தாட்டப் போட்டியில் பிரான்ஸ் தற்போதைய சம்பியன் சுவீடனை எதிர்கொண்டது. மிகவும் விறுவிறுப்பான இப்போட்டியில் சுவிடன் சம்பியனை தொடருவதுபோன்று அபாரமாக பிரான்சை சொந்தநாட்டில் தோற்கடிக்க முற்பட்டது. பிரான்சும் உலகக்கிண்ணத்தை தட்டிக்கொள்ளவேண்டும் என்பதுபோல திறமையை வெளிக்காட்ட போட்டி முடிவை எடுப்பதில் சிரமத்தை எதிர்கொண்டது. இருந்தபோதிலும் பிரான்சின் கை ஓங்கி 28:25 என சுவிடன் தோற்கடிக்கப்பட்டது.

பாரிஸ் Bercy-இலுள்ள Ommisports மைதான இறுதிப்போட்டியில் பிரான்ஸ் வீரர்கள் பெனான்டஸ் 8 கோல்களையும் ஹசல் வீரர்கள் பெனான்டஸ் 8 கோல்களையும் ஹசல் 6 கோல்களையும் போட்டு இவ்வெற்றிக்கு வித்திட்டனர். அத்தோடு 1995ம் ஆண்டுக்கு பின் பிரான்ஸ் உலக சம்பியனாகியுள்ளது.

சுவிடன் வீரன் லோவ்றன் 8 கோல்களை தனது நாட்டுக்காக போட்டபோதும் வெற்றி கைநழுவிச் சென்றது.

மூன்றாம் இடத்திற்கான மற்றொரு போட்டியில் யூக்கோஸ்லாவியா, எகிப்தை 27:17 எனச் சுலபமாக வெற்றிகொண்டது.

அரையிறுதியாட்டங்களில் பிரான்ஸ் எகிப்தை 24:21 எனவும், சுவிடன் யூக்கோஸ்லாவியாவுடன் கடுமையாக போராடி 25:24 எனவும் வெற்றிபெற்றிருந்தன.

## டவன்போட்டிடம் 10ஆவது தடவை கிங்கிஸ் தோல்வி



டெனிஸ் விளையாட்டின் பெண்கள் பிரிவில் கடந்த சில வருடங்களாக முதலாம் இரண்டாம் இடத்தை வைத்துக்கொள்பவர்கள் கிங்கிஸ். டவன்போட். இதில் இன்னொரு வேடிக்கை முதலாம் இடத்திலுள்ள கிங்கிஸ் டவன்போட்டை குறைந்த தடவைகளே வெற்றிகொண்டுள்ளார். இதுவரை இவர்கள் இருவரும் 16 தடவைகள் இறுதியாட்டங்களில் மோதியதில் டவன்போட் 10 தடவைகள் வெற்றிவாகை சூடியுள்ளார்.

இறுதியாக 04.02.01 அன்று ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற `Pan Pacific Poen' போட்டியில் இறுதியில் இருவரும் மோதிக்கொண்டனர். ஆரம்பத்தில் கிங்கிஸ் கஷ்டப்பட்டு 7:6 என வென்றபோதும் களைக்காது ஆடிய டவன்போட் தனது முழுத்திறமைகளையும் வெளிக்காட்டி கிங்கிஸ்சை 6:4, 6:2 எனத் தோற்கடித்தார். அவுஸ்திரேலியன் ஓப்பன் தோல்வியை ஈடுகட்டும் வாய்ப்பை இருவரும் பயன்படுத்தியதில் டவன்போட் வெற்றி பெற்றார் என்றே கூறவேண்டும்.

# அவுஸ்திரேலியாவுக்கு சவால் விடுத்த சிம்பாவே





ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளின் சூரர்களும் வீரர்களுமாக எதிரணியை கதிகலக்கிக் கொண்டிருப்பவர்கள் அவுஸ்திரேலியர்கள். இவர்களை தோற்கடிப்பதென்பது மிகவும் கடினமான காரியம். அப்படிப்பட்ட பலம்பொருந்திய பயில்வான்களை ஒருகணம் அசத்தப்பார்த்தனர் சிம்பாவே தேசத்தினர். கடந்த 04.02.01 அன்று பேர்த் நகரில் முடிவுற்ற ஹல்டன் கோப்பை தெரிவுக்கான கடைசியாட்டத்தில் பெரும்பரபரப்பு நிகழ்ந்துள்ளது. முதலில் துடுப்பாடிய அவுஸ்திரேலியா மாட்டீனின் அபார துடுப்பாட்டத்துடன் அணியின் ஒட்டுமொத்த பங்களிப்புமாக 302 ஓட்டங்கள் பெறப்பட்டது. இதில் மாட்டின் 144 ஓட்டங்களை பெற்றார். அவுஸ்திரேலியரின் இவ் ஓட்டத்தை சிம்பாவே எட்டுமா என்பதை யாரும் சிந்திக்கவில்லை. அதேபோல்தான் சிம்பாவேயின் ஆரம்ப விக்கட்டுகள் சில வீழ்ந்தன. ஆனால் இடையில் கார்லிஸ்சல், கிறாண் புளவர் இருவரும் நிதானமாக அணியை வெற்றிக்கு மாற்றினர். இதனால் ஒருகட்டத்தில் அவுஸ்திரேலியா நிலைகுலைந்தது. விறுவிறுப்புப் பெற்று இறுதி ஓவரில் 15 ஓட்டங்கள் பெற வேண்டிய சிம்பாவே இறுதி பந்தில் 3 ஓட்டம் பெறவேண்டிய நிலைக்கு வந்தது. ஆனால் சிம்பாவேயால் ஒரே ஒரு ஓட்டமே பெறமுடிந்தது மிகவும் பரிதாபகரமாக ஒரே ஒரு ஓட்டத்தால் தோற்றனர். 301 ஓட்டங்கள் பெற காரணமாகிய கார்லிஸ்சல் 119 ஓட்டங்களையும் கிறாண்புளவர் 85 ஓட்டங்களையும் பெற்றனர். சிம்பாவேக்கு சிறு தோல்வியானாலும் அவுஸ்திரேலியாவை ஒருகணம் ஆட்டம் காண வைத்ததில் பெருவெற்றி பெற்றனர். இவ்வாட்டத்தின் நாயகனாக அவுஸ்திரேலிய ஆரம்ப துடுப்பாட்டவீரன் மாட்டின் தெரிவானார்.

தொகுப்பு: பொன். தாமோதரம்

# மரண அறிவித்தல்



## அந்தோனி செபஸ்ரியன்
(பத்தாயிரம்)

பிறப்பு: **06.05.1931**

இறப்பு: **02.02.2001**

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகக் கொண்ட பத்தாயிரம் என்று அழைக்கப்படும் திரு. அந்தோனி செபஸ்ரியன் 02.02.2001 இல் குருநகரில் காலமானார். இவரின் பூதவுடல் 05.02.2001ல் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள்.

தொடர்புகட்கு:

ஜீவா (சுவிஸ்)
079 4182443

ரஞ்சன்(பிரான்ஸ்)
01 43 60 54 23

யேசுதாசன்
பிறேமா(லண்டன்)
02088817690

சதீஸ்(ஜேர்மனி)
0678170105

Pub. Fr.

# ஆறு பிள்ளைகளின் தாயார் பிள்ளைகளின் முன்பாக தமிழ்க்குழுவினால் பாலியல் வல்லுறவு!

(03.02.01)

சிறீலங்கா அரசுடன் இணைந்து இயங்கும் கூலிக்குழுவொன்று யாழ்குடாவில் மிக மோசத்தனமான செயலொன்றை கடந்தவாரம் புரிந்துள்ளது. ஆறு பிள்ளைகளின் தாயார் ஒருவரை அவரது பிள்ளைகளின் முன்னால் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர். கடந்த 28ம் திகதி ஞாயிற்றுகிழமை இரவு 8.30 மணியளவில் கரவெட்டி நாவலர்மடம் அகதி முகாமில் தங்கியிருந்த விக்னேஸ்வரன் செல்வராணி(40) என்ற ஆறு பிள்ளைகளின் தாயாரை, துப்பாக்கியுடன் சென்ற இருவர் விசாரணை செய்யவேண்டும் எனக் கூறி அழைத்துச் செல்ல முற்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களைப் பின் தொடர்ந்து அவரது கணவரும் ஆறு குழந்தைகளும் சென்றுள்ளனர். ஆனால் கணவனை தொடர்ந்து வந்தால் சுட்டுக் கொன்றுவிடுவோம் என எச்சரித்ததையடுத்து, இதனால் தனது மனைவியின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் என அச்சமடைந்த கணவன், பிள்ளைகளை தாயாருடன் செல்லுமாறு கூறிவிட்டு முகாமுக்குத் திரும்பியுள்ளார். அப் பெண்ணை அருகிலுள்ள ஓரிடத்திற்கு கொண்டு சென்ற இருவரும், பிள்ளைகளின் முன்னால் வைத்து பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். பலத்த காயங்களுக்கு உள்ளாகிய அப்பெண் பின்னர் மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அம் முகாமில் இருந்த இளைஞர் ஒருவருடன் ஏற்பட்ட தனிப்பட்ட காரணங்களுக்காவே இவரைப் பழிவாங்குவதற்கு அவ் இளைஞர் தமிழ்க்குழு ஒன்றின் உதவியை நாடியிருந்ததாகவும், அவர்களே இப்பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக மேற்படி முகாமில் வசித்துவந்த இளைஞர் ஒருவரை சிறீலங்காப் பொலீசார் கைது செய்துள்ளனர். 21 வயதுடைய இவ் இளைஞர் அண்மையிலேயே திருமணமானவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### மனநோய்க்கு...

ணத்துக்குப் பின்பு இந்த விடயம் முடிவடைந்து விடுகின்றது. ஆனால் சிலருடைய நோய்க்கு மருத்துவம் செய்வது கஸ்டமாகும். இவ்வாறனவர்களே இந்த நாட்டைக் குழப்புவதற்கும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்கும் முயற்சி செய்து வருகின்றனர் எனவும் கூறியுள்ளார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரித்தானியா...

கலாசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் இம் மாநாடு நடைபெற்றது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### நிரந்தரக் கடவுச்...

றோம்.

ஆனால், தற்காலிகக் கடவுச்சீட்டு பெறும் நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்றும், நிரந்தர கடவுச்சீட்டுப்பெற அகதிகளுக்குப் போதுமான கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என மாநிலத்தின் சகல உள்ளூராட்சி மன்றங்களும் கேட்கப்படுகின்றன என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெஸ்ட்ஃபாலன் மாநிலத்தில் இதுவரை திடீர் நாடுகடத்தலுக்காகக் கைதாகிய இரு தமிழ் இளைஞர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளதுடன் பலர் சிறையில் உண்ணாவிரதப்போராட்டங்களில் ஈடுபட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஜேர்மன் தமிழர் சுயநிர்ணய உரிமைக்கான ஒருமைப்பாட்டுக்குழு ஏனைய உரிமைமீறல் அமைப்புகளுடன் இணைந்து நாடுகடத்தலுக்கு எதிராகக் குரல்கொடுத்து வருகின்றது.

— வீ. ஆர். வரதராஜா.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### வானொலி...

கன்பரா, மெல்பேர்ன் ஆகிய நகரங்களில் ஒலிபரப்பாகி வரும் இன்பத் தமிழ் வானொலியின் இயக்குனர் பாலசிங்கம் பிரபாகரனும், ஏற்கனவே பத்து உலக சாதனையினை பதிந்து வைத்திருக்கும் அருளானந்தம் சுரேஸ் ஜோக்கியுமும் இணைந்தே இச் சாதனையினை நிலை நாட்டியுள்ளனர். கடந்த 25.01.2001 அன்று அவுஸ்திரேலிய நேரம் காலை 10.06 க்கு ஆரம்பமாகிய ஒலிபரப்பு, தொடர்ச்சியாக இடம்பெற்று நாளவது நாளான 28.01.2001 அன்று அந் நாட்டின் நேரப்படி இரவு 11.06 மணிக்கு நிறைவு செய்தனர்.

இந் நிகழ்வில் சிட்னியின் ஒபன் நகர பிரதி மேயரும், சிட்னியின் உப நகரங்களைச் சேர்ந்த மாநகரசபை உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்து உரையாற்றினார்கள். அதன்பின் உலக சாதனையாளர்கள் இருவரும் இந் நிகழ்வு சாத்தியப்பட உதவி புரி-ந்த சகலருக்கும் நன்றி தெரிவித்ததோடு இந் நிகழ்வினை உலகம் பூராகவும் பரவச் செய்த தமிழ் வானொலிகளுக்கும் நன்றிகளை தெரிவித்தனர். இதன் பின் இன்பத் தமிழ் ஒலி அறிவிப்பாளார்களில் ஒருவரான மேகநாதன் நன்றி உரையாற்றினார்.

இதேவேளை, இலண்டனிலிருந்து ஒலிபரப்பாகிவரும், அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (ஐ.பி.சி) தனது செய்திச் சேவையில் இந் நிகழ்வினை செய்தியில் குறிப்பிட்டு தனது வாழ்த்தினைத் தெரிவித்தது. இதனையடுத்து, இவ் வானொலியின் செய்தியினைக் கேட்டதன் பின் ஐரோப்பாவிலிருந்தும் பல நேயர்கள் இவ் இரு இளைஞர்களுக்கும் தொலைபேசியூடாக வனொலியில் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்ததாக எமது அவுஸ்திரேலிய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

### வில்லியம்...

இங்கிலாந்து திரும்பி, நீண்ட காலம் வெற்றிகரமாக மருத்துவத் தொழிலாற்றினார். இங்கிலாந்தின் மன்னர்களாகிய முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ் இருவருக்கும் புகழ்பெற்ற தத்துவ ஞானி பிரான்சிஸ் பேக்கனுக்கும் இவர் மருத்துவம் பார்த்தார். லண்டனிலுள்ள மருத்துவக் கல்லூரியில் உடல் உட்கூறு (Anatomy) குறித்து இவர் சொற்பொழிவாற்றினார். ஒரு சமயம் அந்தக் கல்லூரியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், அந்தப் பதவியை இவர் ஏற்க மறுத்துவிட்டார். இவர் தனியாக மருத்துவத் தொழில் புரிந்து வந்ததுடன், லண்டனிலுள்ள புனித பார்த்தலோமியா மருத்துவமனையில் தலைமை மருத்துவராகவும் பல ஆண்டுகள் பணியாற்றினார். இரத்த ஓட்டம் பற்றிய இவரது நூல் 1628ஆம் ஆண்டில் வெளியானபோது ஐரோப்பா முழுவதிலும் இவருடைய புகழ் பரவியது. ஹார்வி திருமணம் புரிந்துகொண்டார். ஆனால், குழந்தைகள் இல்லை. இவர் 1657 ஆம் ஆண்டில் தமது 79 ஆம் வயதில் லண்டனில் காலமானார்.

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

### இலக்கியம்தான்...

னால் வெளியீட்டு நிகழ்ச்சி தள்ளிப்போகிறது. தமிழின் முக்கியமான தலைமைக் கவிஞர்கள் அந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டு அது பற்றி கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பார்வைகளையும் அபிப்பிராயங்களையும் திரட்டி, 'குறுதி கசியும் இசைத்தட்டு' என்றொரு நூலாக தயாரித்துள்ளேன். இரண்டு நூல்களும் வெளியிடப்படும்.

**✪ திரைப்படப் பாடலாசிரியரான நீங்கள் 'தென்பாண்டி சிங்கம்' தொலைக்காட்சித் தொடரை எவ்வாறு எடுத்தீர்கள்?**

ஆரம்பத்தில் சினிமாவுக்குப் பாட்டு எழுதினேன். பிறகு அதை விட்டுட்டு, படத்தை இயக்க விரும்பினேன். என்னை அப்படியான ஆளாக அடையாளம் காட்டியது சென்னை பிலிம் சொஸைட்டி நடத்திய `Film appreciation course' தான். அதன்பிறகுதான் சென்னை தொலைக்காட்சிக்காக 'தென்பாண்டிச் சிங்கம்' தொடரை இயக்கினேன். நல்ல வரவேற்புக் கிடைத்தது. கா.சிவத்தம்பி போன்ற விமர்சகர்களும், அசோகமித்திரன் போன்ற எழுத்தாளர்களும், பாமர மக்களும்கூட பாராட்டக்கூடிய படமாக அது இருந்தது. கலைஞருக்கும் மிகப்பிடித்தமான தொடராக அது அமைந்தது.

**✪ இப்போது என்ன பணியில் ஈடுபட்டுள்ளீர்கள்?**

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு கலைஞரின் ஒரு மரம் பூத்தது. வெள்ளிக்கிழமை, சுருளிமலை என்று மூன்று கதைகளைக்கொண்டு சங்கிலித் தொடராக 250 வாரத்துக்கான தொடராகத் தயாரிக்கும் பணியில் இறங்கியுள்ளேன்.

## மரண அறிவித்தல்

மலர்வு: 04 – 10 – 1949



உதிர்வு: 31 – 01 – 2001

### திரு செகராஜசிங்கம் குணசிங்கம்

வதிரியைப் பிறப்பிடமாகவும் பிரான்சில் வசித்தவரும் கொழும்பு தொழில் திணைக்களத்தில் லிகிதராக கடமையாற்றியவருமாகிய செ. குணசிங்கம் 31.01.2001 புதன்கிழமை இந்தியாவில் காலமானார். இவர் செகராஜசிங்கம் சிவகாமி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் தனலஷ்மியின் அன்புக் கணவரும் கனடாவில் வசிக்கும் சிவலோகநாதன், சிவபாலசிங்கம், ரவிச்சந்திரா, ஜெயச்சந்திரா, சிவ்ச்சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 07.02.2001 புதன்கிழமையன்று பிற்பகல் 3.00 மணியிலிருந்து 4.00 மணிவரை இந்தியாவில் நடைபெறும்.

**தொடர்பு : பவா - கனடா - 001416755937**
**சங்கர்- பிரான்ஸ் - 0140130199**

தகவல்:
ரவிக்குலன்

Pub Fr

## மரண அறிவித்தல்

மலர்வு: 07 – 03 – 1922



உதிர்வு: 28 – 01 – 2001

### திருவாளர் நாகலிங்கம் தர்மலிங்கம்

(ஜெயலிங்கம் மாஸ்ரர்)

(ஓய்வு பெற்ற ஆசிரியர். யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

யாழ்ப்பாணம், தர்மஇல்லம், கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், பின்னர் இலக்கம் 412-422 Green Street, Upton Park இலண்டனை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவரும், ஜெயலிங்கம் மாஸ்ரர் என அன்புடன் அழைக்கப்பட்டவருமாகிய திருவாளர் நாகலிங்கம் தர்மலிங்கம் அவர்கள் 28.01.2001 ஞாயிற்றுக்கிழமை அன்று இலண்டனில் காலமானார். அன்னார் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மல்லாகம் இந்துக்கல்லூரி, அளவெட்டி அருணோதயக் கல்லூரி, மற்றும் நயினாதீவு மகாவித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில் ஆசிரியராகப் பணிபுரிந்து இளைப்பாறிக் கொண்டவர். இவர் காலஞ்சென்ற நாகலிங்கம், செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற நாகலிங்கம், அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். சௌபாக்கியத்தின் அன்புக் கணவரும். விக்னராஜா (Colombo), கௌரி (London), தர்மரேகா (Sydney), சிவரதி (London), ராஜ் (London), சிவராஜ் (London) ஆகியோரின் அன்புத் தந்தையாரும். Dr. சிதம்பரநாதன் (London), தியாகேசன் (Sydney), அம்பிகைபாலன் (London), வாசுகி (Colombo), ராணி (London), ஜமுனா (London) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜந்தா, ஆரபி, பவித்திரா, தாரகா, கவித்தா, சுமித்தா, கபிலன், பிரியா, தீபினி, கருண், அஸ்வினி ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலியின் பின்னர் கடந்த 29.01.2001 திங்கட்கிழமை அன்று தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள்.

*தகவல் தருபவர்கள்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

தொடர்புகட்கு: திருமதி தர்மலிங்கம்:- 0208 472 9765 *Or* 0208 552 1401 (London)
திருமதி தர்மா தியாகேசன்:- 02 9642 3230 (Sydney)

Pub.Gra. Aus.

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# நிரந்தர கடவுச் சீட்டு பெற்றவர்களே நாடுகடத்தப்படுவர்

## ஜேர்மன் வெஸ்ட்ஃபாலனில் புதிய சட்டங்கள்

(05.02.01)

அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களை அவசர கடவுச்சீட்டு (Emergency Pass) பெற்று நாடு கடத்தும் நடவடிக்கையில் ஜேர்மன் வெஸ்ட்ஃபாலன் மாநிலத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. நிரந்தர கடவுச்சீட்டுப் பெற்றவர்கள் மாத்திரமே இனிமேல் நாடு கடத்தப்படுவார்கள் என மாநில உள்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஜேர்மனியில் மேற்படி மாநிலத்தில் இருந்தே த்மிழர்கள் அதிகமாக தற்காலிகக் கடவுச்சீட்டு பெற்று நாடு கடத்தப்பட்டு வந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்போது புதிய மாற்றத்தின் கீழ் தமிழர்கள் அவ்வாறு அனுப்பப்படமாட்டார்கள்.

வெஸ்ட்ஃபாலன் மாநிலத்தில் தமிழர்களை நாடுகடத்துவதற்கு எதிராக நடாத்தப்பட்ட சாத்வீகமான போராட்டங்களுக்குக் கிடைத்த சாதகமான பலன் இது எனக் கருதப்படுகின்றது. நிரந்தர கடவுச்சீட்டு பெறப்படும் வரை நாடுகடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்படக் கூடாதென்று மாநில உள்துறை அமைச்சர் சகல உள்ளூராட்சி அலுவலகங்களுக்கும் அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தச் சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு;

'கொழும்பு விமான நிலையத்தில் தற்காலிகக் கடவுச்சீட்டுடன் செல்லும் இலங்கையர் பல சங்கடங்களுக்கு உள்ளாகின்றார்கள். இலங்கை வெளி விவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அங்கு தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக இவ்வாறானவர்கள் கடுமையாக விசாரிக்கப்படுகின்றார்கள் என்றும், சிலகாலம் அவர்கள், நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுகின்றார்கள் என்றும் விசாரணைகள் முடிவு வரும் வரை பல அசௌகரியங்ளுக்கு உள்ளாக வேண்டியுள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளது.

எனவே ஜேர்மனியிலிருந்து நாடு கடத்தப்படும் இலங்கையருக்கு நிரந்தர கடவுச்சீட்டு எடுப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்களும் உதவி செய்யவேண்டும். அவர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் அடையாள அட்டை ஆகியவை பெற்று புதிய கடவுச்சீட்டு பெறும் வரை இவர் தங்கியிருந்து அனுமதி கொடுக்கப்படவேண்டும்.

அகதிகள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் புதிய கடவுச் சீட்டுக்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவற்றை அவர்களே இலங்கைத் தூதுவராலயத்துடன் தொடர்புகொண்டு பெறவேண்டும். இது தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள வெளிநாட்டுப் பிரிவுகள் வெவ்வேறான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிகின்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# மனநோய்க்கு ஆளாகுபவர்களை குணப்படுத்துவது கஸ்டம்!

## அங்கோடவில் ரட்ணசிறி

(04.02.01)

தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத உரைகளை ஆற்றி வரும் சிறீலங்காவின் பிரதமர் ரட்ணசிறி விக்கரமநாயக்கா, கடந்த வெள்ளியன்று அங்கோட மனநோய் மருத்துவ மனையின் 75வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது, அங்கும் வழமை போல் இனவாத உரையை நிகழ்த்திய ரட்ணசிறி, எதிர்க் கட்சியினரையும் கடுமையாகச் சாடி, அவர்களுக்கு ஒரு பைத்தியக்கார வைத்தியசாலை ஆரம்பிக்கவேண்டும் என உரை நிகழ்த்தியுள்ளார். சுதந்திர தினத்தின் போது நாட்டில் ஒருகறுப்புப் புள்ளியை இடுவதற்குச் சிலர் முயற்சிகளைச் செய்து வருகின்றனர் இது ஒருபைத்தியக்காரத்தனமான செயல். எமது நாட்டின் புனிதமான தினமாகச் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. அன்றைய தினத்தில் இவ்வாறான ஈனத்தனமான செயல்களில் சிலர் ஈடுபட்டு நாட்டைக் குழப்ப முயற்சி செய்து வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. ஆனால் இதற்கு ஒருபோதும் நாம் அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறியதுடன், சிலர் உண்மையாகவே மனநோய்க்கு ஆளாகுகின்றனர். அவர்களைக் குணப்படுத்துவது கஸ்டம். எனினும் அவர்களின் மர

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# வானொலி அறிவிப்புத் துறையில் புதிய உலக சாதனை

## இரு ஈழத் தமிழர்கள் நிகழ்த்தினர்

(05.02.01)

85 மணித்தியாலங்கள் தொடர்ந்து வானொலியில் அறிவிப்புச் செய்து புதிய உலக சாதனையினை கின்னஸ் புத்தகத்தில் பதியச்செய்து, ஈழத் தமிழர்களுக்கு பெருமை சேர்த்திருக்கின்றார்கள் இரு இளைஞர்கள். முன்னைய இலண்டனைச் சேர்ந்தவரின் சாதனையான 73 மணித்தியாலம் 33 நிமிடங்களையும் முறியடித்தே இப் புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளனர். அவுஸ்திரேலியாவில் சிட்னி,

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# பிரித்தானியா புலிகளை தடை செய்யக் கூடாது கிழக்கு இலங்கைச் செய்தியாளர் சங்கம் கோரிக்கை

(05.02.01)

விடுதலைப் புலிகளின் மீது பிரித்தானிய அரசு தடை விதிக்கக் கூடாது என கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இதேவேளை, விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்திற்கு அரசுசாதகமான பதிலை அளித்து நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன் இனப் பிரச்சினைக்கு நீதியான, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு காண்பதற்கு இனியும் தாமதிக்காது நடவடிக்கைளடுக்க வேண்டும் எனவும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் 20வது வருடாந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியள்ளனர். மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 02084236321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub